# நிதித் துறை

# உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

## தொகுப்பு தணிக்கை அறிக்கை
## 2016–2017

# தமிழ்நாடு அரசு

அறிக்கை எண்.2 – 2016–2017

# நிதித் துறை

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

தொகுப்பு தணிக்கை அறிக்கை

**2016–17**

## தமிழ்நாடு அரசு

அறிக்கை எண்.2 – 2016–2017

119-3—1

# உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை

## தோற்றம்

உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை தொன்மையான வரலாறு படைத்த துறை ஆகும். இத்துறை 1849 ஆம் ஆண்டில் முதலில் மாநில அளவில் மாநில கணக்காயர் (Accountant General) நிர்வாகத்தின் கீழும், மாவட்ட அளவில் Local Boards கட்டுப்பாட்டிலும் இயங்கி வந்துள்ளது.

1844 ஆம் ஆண்டின் Madras Local Board சட்டத்தின் படி 1880 ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை உருவாக்கப்பட்டது.

அரசாணை எண்.609 நிதித்துறை நாள்.22.3.1880–ன் படி தனித்துறையாக 1880–ல் ஏற்படுத்தப்பட்டது. அரசாணை எண்.514 நிதித்துறை நாள்.10.3.1885–ன் படி 1885 ஆம் ஆண்டு முதல் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களது கட்டுப்பாட்டில் இயங்கத் தொடங்கி 1920 முடிய செயல்பட்டு வந்துள்ளது.

1920 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட வல்லுநர்களது பரிந்துரையின் அடிப்படையில் அரசாணை (பல்வகை) எண்.125 நிதித்துறை நாள்.10.2.1921–ன் படி உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை நிதித்துறையின் கீழ் இயங்க உத்திரவிடப்பட்டுள்ளது. அரசாணை எண்.1016 நிதித்துறை நாள்.27.11.1922–ன் படி இத்துறையின் துறைத் தலைவராக ஆராய்வாளர் நியமிக்கப்பட்டு அவரது கட்டுப்பாட்டில் மாநில அளவில் தனித்துறையாக இயங்கி வருகிறது.


அரசாணை எண். (பல்வகை) 848 நிதி (உள்ளாட்சி) துறை நாள்.09.11.1995–ன் படி ஆராய்வாளர் என்ற பெயர் இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை எனவும், ஆராய்வாளர் அலுவலகம் என்ற பெயர் உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநரகம் எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.



119-3—1a

நிர்வாக அமைப்பு

உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை பின்வரும் நிர்வாக அமைப்பைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.




**தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் – 24 / 2014**

உள்ளாட்சி நிதியங்களின் தணிக்கையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான தணிக்கையினை உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் மேற்கொள்வதற்கும் அவருக்கு அதிகாரம் அளிப்பதற்கு வகை செய்வதற்கான சட்டமொன்றினை இயற்றுவதற்கு இரண்டாவது மாநிலநிதிக்குழு தனது பரிந்துரையில் தெரிவித்துள்ளது. இந்த பரிந்துரையினை செயல்படுத்தும் பொருட்டு 2014 ஆம் ஆண்டு

டிசம்பர் திங்கள் 5 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளின் 130ஆம் விதியின் கீழ் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டு பொது தகவலுக்காக வெளியிடப்பட்டது. பின்னர் இச்சட்டம் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 24/2014 என இயற்றப்பட்டுள்ளது. இது இந்தியக் குடியரசின் 65 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் சட்டமாக இயற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 24/2014–க்குரிய விதிமுறைகள் அரசாணை நிலை எண்.240 நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை நாள்:24.08.2016–ன் படி வெளியிடப்பட்டுள்ளது. இவ்விதிமுறைகள் தமிழ்நாடு அரசின் அரசிதழில் 24.08.2016 அன்று வெளியீடு செய்யப்பட்டுள்ளது. இத்துறையினால் 2016–17 ஆம் ஆண்டு தணிக்கை முடிக்கப்பட்டு அதன் தொகுப்பு தணிக்கை அறிக்கையை 2014 ஆம் வருட உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் (24/2014) பிரிவு 20–ன் படி தமிழக சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாநில கணக்காயரின் தொழில்நுட்ப வழிகாட்டுதல்**

உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் நிதி மீதான தணிக்கை இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் சட்டம் 1971–ன் பிரிவு 20 கீழ் மேற்கொள்ளப்படுகிறது. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரால் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநருக்கு தொழில்நுட்ப வழிகாட்டல் மற்றும் ஆதரவு வழங்கப்படுகிறது. (Technical Guidance and Support)

உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 24/2014 பிரிவு 15(3) மற்றும் அரசு ஆணை எண்.93 / நிதி (FCIV) துறை நாள்.28.03.2003–ல் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினரால் மேற்கொள்ளப்படும் தணிக்கையின் போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள், அணுகுமுறைகள் மற்றும் வெளியிடப்படும் தணிக்கை அறிக்கைகளில் இடம் பெறும் தணிக்கைத் தடைகளின் தன்மை அவற்றில் இடம் பெறத்தக்க விவரங்கள் குறித்தும் தணிக்கை அறிக்கையினை வலுப்படுத்தும் விதமாகவும் மாநில கணக்காயரின் தொழில்நுட்ப வழிகாட்டுதல்களைப் பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநில கணக்காயர் கடிதம் எண்.Pr.AG(G & SSA)SS11 / LB11 Unit11 / 14-15/219 நாள்.23.10.2014–ல் அத்தகைய வழிகாட்டுதல்கள் பெறப்பட்டுள்ளன.

**தணிக்கை நடைமுறை**

தமிழ்நாட்டில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களின் உடனிகழ் தணிக்கை அலகு தோற்றுவிக்கப்பட்டு 15.09.2000 முதல் செயல்பட்டு வருகிறது. 31 மாவட்டங்களில் 116 உடனிகழ் தணிக்கை அலகுகள் செயல்படுகின்றன. காலாண்டு அடிப்படையில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிறப்புநிலை நகராட்சிகள் அனைத்திலும் உடனிகழ்தணிக்கைஅலகு துவக்கப்பட்டு அவற்றில் உடன்பின் தணிக்கை நடைபெற்று வருகிறது.

மாநகராட்சிகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் உடனிகழ் தணிக்கை துவக்கப்பட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்ட ஊராட்சி, பேரூராட்சி மற்றும் இதர தணிக்கை நிறுவனங்களில் மாவட்ட உதவி இயக்குநர் அலகில் பணிபுரியும் தணிக்கையாளர்களைக் கொண்டு ஆண்டுதணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிராம ஊராட்சிகளை பொறுத்தமட்டில் ஊராட்சி ஒன்றிய தணிக்கையினை மேற்கொள்ளும் தணிக்கையாளர்களைக் கொண்டு மொத்த கிராம ஊராட்சிகளில் ஓராண்டிற்கு 20% என்ற அடிப்படையில் சுழற்சி முறையில் 5 ஆண்டுகளுக்குள் அனைத்து கிராம ஊராட்சிகளின் சோதனை தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை தவிர்த்து ஊரகவளர்ச்சித்துறை இயக்குநரால் ஆண்டுதோறும் தேர்வு செய்து தெரிவிக்கப்படும் 2% கிராம ஊராட்சிகளின் தணிக்கையும் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

**தணிக்கை மேற்கொள்ளும் நிறுவனங்கள்**

உள்ளாட்சிநிதித் தணிக்கைத்துறையினரால் பின்வரும் நிறுவனங்களின் தணிக்கை ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 12 |
| 2 | நகராட்சிகள் | 124 |
| 3 | பேரூராட்சிகள் | 528 |
| 4 | மாவட்ட ஊராட்சிகள் | 31 |
| 5 | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| 6 | பல்கலைக்கழகங்கள் | 23 |
| 7 | மாவட்ட வேளாண் விற்பனை குழு | 24 |

| | | |
|---|---|---|
| 8 | தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் | 01 |
| 9 | தமிழ்நாடு வேளாண் விற்பனைக் கழக பொறியியல் பிரிவு | 03 |
| 10 | மாவட்ட நூலக ஆணைக்குழு | 32 |
| 11 | தேசிய சமூக நலத்திட்டங்கள் | 32 |
| 12 | இதர நிறுவனங்கள் | 12 |
| 13 | உள்ளூர் திட்ட குழுமம் | 27 |
| 14 | கிராம ஊராட்சிகள் சோதனை தணிக்கை (12524 ஊராட்சிகளில் ஒவ்வொரு ஆண்டும் 20% + 2%) | |

**மேற்கண்ட தணிக்கை பணிகளுடன் கீழ்கண்ட சிறப்பு பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.**

1. நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பணியாளர்களின் ஓய்வூதிய நிதியினை நிர்வாகம் செய்து ஓய்வூதிய பயன்கள் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம் வழங்குதல்.
2. தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி நிறுவனங்களில் செயல்படும் பணியாளர்களின் சேமநலநிதி வைப்புத் தொகைகளுக்கு வட்டி கணக்கிட்டு வழங்கும் பணி மேற்கொள்ளுதல்.
3. இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்ட அறக்கட்டளைகளுக்கு பொருளாளராக செயல்படுதல்

**தணிக்கை தடைகள் துறை தலைமைக்கு தெரிவித்தல் – பதிலுரை பெற்றது – தீர்வு செய்தது தொகை ரூ. 85.05 இலட்சங்கள்.**

2016–17 ஆம் ஆண்டு தணிக்கை முடிக்கப்பட்டு, சட்டமன்றத்தில் சமர்ப்பிக்க தேர்வு செய்யப்பட்ட தணிக்கைத் தடை விவரங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர், வேளாண்மை விற்பனை ஆணையர், பொது நூலகத் துறை இயக்குநர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்களிடமிருந்து பெறப்பட்ட பதிலுரைகள் பரிசீலிக்கப்பட்டு ரூ. 85.05 இலட்சம் வசூல் செய்யப்பட்ட விவரம் தணிக்கையில் உறுதி செய்யப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

| வ.எண் | நிறுவனம் | சட்டப்பேரவைக்கு தேர்வு செய்யப்பட்ட தணிக்கை தடைகளின் எண்ணிக்கை | தணிக்கை பத்திகளுக்குரிய தொகை (இலட்சத்தில்) | தீர்வு செய்யப்பட்ட தணிக்கை தடைகளின் எண்ணிக்கை மற்றும் தொகை (இலட்சத்தில்) | நிலுவை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 5 | 37.93 | 25.75 | 12.18 |
| 2 | இதர மாநகராட்சிகள் | 10 | 654.00 | – | 654.00 |
| 3 | நகராட்சிகள் | 9 | 335.21 | – | 335.21 |
| 4 | பேரூராட்சிகள் | 7 | 83.46 | 9.07 | 74.39 |
| 5 | ஊராட்சி ஒன்றியங்கள் | 6 | 303.72 | 7.12 | 296.60 |
| 6 | கிராம ஊராட்சிகள் | 7 | 136.27 | 43.11 | 93.16 |
| 7 | பல்கலைக்கழகங்கள் | 5 | 423.97 | – | 423.97 |
| | மொத்தம் | 49 | | 85.05 | |

**தணிக்கை கட்டணம்**

2016–17 ஆம் ஆண்டில் தணிக்கை மேற்கொள்ளப்பட்ட நிறுவனங்கள் செலுத்தவேண்டிய தணிக்கை கட்டணமாக மொத்தம் **ரூ. 896.99** லட்சங்கள் கேட்பு எழுப்பப்பட்டுள்ளது.

# 2016–17 ஆம் ஆண்டு தொகுப்பு தணிக்கை அறிக்கை



| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 1–19 |
| 2 | இதர மாநகராட்சிகள் | 20–38 |
| 3 | நகராட்சிகள் | 39–56 |
| 4 | பேரூராட்சிகள் | 57–70 |
| 5 | மாவட்ட ஊராட்சிகள் | 71 |
| 6 | ஊராட்சி ஒன்றியங்கள் | 72–86 |
| 7 | கிராம ஊராட்சிகள் | 87–98 |
| 8 | பல்கலைக்கழகங்கள் | 99–110 |
| 9 | பொது நூலகங்கள் | 111–113 |
| 10 | மாவட்ட வேளாண்மை விற்பனைக்குழு | 114–116 |
| 11 | வரவு செலவு திட்டம் தயாரித்து அங்கீகரிக்கப்படாமை | 118 |





119-3--2

# 1. பெருநகர சென்னை மாநகராட்சி

| தணிக்கை அறிக்கை பத்தி எண் | சுருக்கம் | தொகை ரூ. இலட்சத்தில் | தீர்வு செய்யப் பட்டத் தொகை ரூ. (இலட்சத்தில்) | நிலுவை ரூ. (இலட்சத்தில்) | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|
| 1.11.1 | சென்னை மாநகராட்சி மண்டலம் 11 வளசரவாக்கம் – 2016–17ஆம் ஆண்டு கட்டட அனுமதி வழங்கியது – அதிகார பகிர்வை மீறி வழங்கியது வணிக நோக்கத்தில் சொத்து வரி நிர்ணயம் செய்துள்ளது தவிர்த்திருக்க வேண்டிய வருவாய் இழப்பு 12.18 இலட்சம் (பத்தி எண் 28/2016–17) | 12.18 | – | 12.18 | 12 |
| 1.11.2 | பெருநகர சென்னை மாநகராட்சி 2016–17 தணிக்கை மண்டலம் 11 வளசரவாக்கம் – கட்டட உரிமக் கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டது. தொகை ரூ.7.38 இலட்சம் உரிய நபரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். (பத்தி எண் 29/2016–17) | 7.38 | 7.38 | – | 13 |
| 1.11.3 | 2016–17ஆம் ஆண்டு தணிக்கை – மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு நகர்புற புனரமைப்புத் திட்டம் – ஓட்டேரி நல்லா நீர்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மன்ற தீர்மானத்தின்படி அனுமதி மறுக்கப்பட்ட விலையேற்ற விகிதாச்சார உயர்வு அனுமதித்தது இழப்பு ரூ.13.17 இலட்சம் – (பத்தி எண்.11. மழைநீர் வடிகால் துறை) | 13.17 | 13.17 | – | 14 |
| 1.11.4 | பெருநகர சென்னை மாநகராட்சி 2016–17 தணிக்கை அம்பத்தூர் மண்டலம் 7 குடியிருப்பு அல்லாத வணிக கட்டடத்திற்கு நிர்ணயம் செய்ய வேண்டிய சொத்துவரியை விட குறைவாக நிர்ணயம் செய்ததால் மாநகராட்சிக்கு ஆண்டுக்கு ரூ.5.20 இலட்சம் தொடர் இழப்பு [illegible] நிலைநிறுத்திக்கப்பட வேண்டும். பத்தி எண்.23 (அம்பத்தூர் மண்டலம்) | 5.20 | [illegible] | | 15 |
| 1.11.5 | பெருநகர சென்னை மாநகராட்சி 2016–17 தணிக்கை – டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்காக பெறப்பட்ட மானியத் தொகையில் ஈட்டப்பட்ட வங்கி வட்டி தொகை ரூ.729.39 இலட்சம் மற்றும் முந்தைய ஆண்டுகளுக்குரிய செலவிடப்படாத மானியத் தொகை மொத்தம் ரூ.2733.64 இலட்சம் அரசுக்கு திருப்பிச் செலுத்தப்படாதது – குறைபாடு மற்றும் நடப்பு நாளில் கணக்கில் உள்ள இறுதியிருப்பு விவரம் பத்தி எண்.17 அ மற்றும் 18 (மருத்துவ சேவைகள் துறை) | – | | | 17 |

## 2. இதர மாநகராட்சிகள்

| தணிக்கை அறிக்கை பத்தி எண் | பத்தி தலைப்பு | தொகை ரூ. இலட்சத்தில் | தீர்வு செய்யப் பட்டத் தொகை ரூ. (இலட்சத்தில்) | நிலுவை ரூ. (இலட்சத்தில்) | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|
| 2.4.1 | வேலூர் மாநகராட்சி 2016–17 தணிக்கை 14 குடியிருப்பு மற்றும் வணிக கட்டிடங்களுக்கு சொத்துவரி மிக குறைவாக நிர்ணயம் செய்து மாநகராட்சிக்கு சொத்துவரி வருவாயில் ரூ.34.45 இலட்சம் தொடர் இழப்பு ஏற்படுத்தியது [illegible] இழப்பினை வசூல் அல்லது பிடித்தம் செய்ய வேண்டும். (பத்தி எண் 15/2016–17) | 34.45 | – | 34.45 | 25 |
| 2.4.2 | வேலூர் மாநகராட்சி 2016–17 தணிக்கை அனுமதிக்கப்பட்ட ஓய்வூதிய தொகையை விட கூடுதலாக ஓய்வூதியம் வழங்கியது மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கான உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் (Enhanced Family Pension) அதற்கான காலம் முடிவடைந்தவுடன் மாற்றியமைக்கப்படாமல் தொடர்ந்து அதிகமாக வழங்கி வருவதால் இழப்பு ரூ.11.62 இலட்சம். (பத்தி எண் 33/2016–17) | 11.62 | – | 11.62 | 26 |
| 2.4.3 | வேலூர் மாநகராட்சி 2016–17 தணிக்கை – குடிநீர் நிதி புதிய குடிநீர் இணைப்பின் போது உயர்த்தப்பட்ட சாலை சீரமைப்பு (Enhanced Road Restoration Charge) கட்டணம் வசூலிக்காதது, இணைக்கப்பட்ட பகுதிகளில் மாநகராட்சிக்கான மாதாந்திர குடிநீர் கட்டணம் ரூ.50/– என்பதை வசூலிக்காமல் ரூ.30/– வீதம் வசூலித்தது, சிறப்பு வணிக நிறுவனங்களிடம் (Commercial Special) பாதாள சாக்கடை இணைப்புக்கான முன்வைப்புத்தொகை (Deposit) மற்றும் மாதாந்திர சேவைக் கட்டணம் இரண்டும் குறைவாக வசூலித்தது போன்ற குறைபாடுகளினால் மாநகராட்சிக்கு 2016–17 ஆம் ஆண்டில் மட்டும் மொத்தம் ரூ.49.72 இலட்சம் இழப்பு. (பத்தி எண் 11, 12 (ம) 15/2016–17) | 49.72 | – | 49.72 | 27 |
| 2.4.4 | சேலம் மாநகராட்சி 201631–17 தணிக்கை – முடிவுற்ற திட்டங்களின் வங்கி கணக்32கில் உள்ள இருப்புத் தொகை ரூ.132.74 இலட்சம் உரிய அர34சு தலைப்பில் செலுத்தப்படல் வேண்டும் . (பத்தி எண் 47/2016–17) | 132.74 | – | 132.74 | 29 |
| 2.4.5 | திண்டுக்கல் மாநகராட்சி 2016–17 தணிக்கை – மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக வாடகைதாரர்கள் மற்றும் இதர குத்தகைதாரர்களிடமிருந்து வாடகை / குத்தகை தொகையுடன் சேவை வரி வசூலித்து மத்திய அரசுக்கு செலுத்தப்படாததால், சேவை வரிக்கான கேட்புத்தொகையை அபராதத்துடன் மாநகராட்சியின் வங்கி கணக்கிலிருந்து மத்திய கலால் துறையின் கடிதத்தின் அடிப்படையில் வங்கியே தன்னிச்சையாக பிடித்தம் செய்தது – மாநகராட்சிக்கு இழப்பு ரூ.81.91 இலட்சம். (பத்தி எண் 19/2016–17) | 81.91 | – | 81.91 | 30 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2.4.6 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 2016–17 தணிக்கை அரியமங்கலம் மற்றும் பொன்மலை கோட்டம் – புதிய பாதாள சாக்கடை திட்டம் நடைமுறைப்படுத்திய பிறகு வசூலிக்கப்பட வேண்டிய உயர்த்தப்பட்ட மாதாந்திர பராமரிப்பு / சேவைக் கட்டணம் வசூலிக்கப்படாததால் மாநகராட்சிக்கு 2016–17 ஆம் ஆண்டில் இழப்பு ரூ.283.40 இலட்சம்.<br>(பத்தி எண் 36 (ம) 54 /2016–17) | 283.40 | – | 283.40 | 31 |
| 2.4.7 | திருப்பூர் மாநகராட்சி 2016–17 தணிக்கை பண மதிப்பு படிவங்கள் (Money Value forms) ஒப்பந்தப்புள்ளி (Tender) ஏதும் கோராமல் அதிக விலைக்கு கொள்முதல் செய்தது மற்றும் தேவைக்கும் அதிகமாக கொள்முதல் செய்யப்பட்டதால் புதிய கணக்கு முறை (Centralised Web based Accounting System) அறிமுகப்படுத்தியதும் பழைய படிவங்கள் பயன்படுத்த இயலாமல் போனது இழப்பு ரூ.11.37 இலட்சம். (பத்தி எண் 39/2016–17) | 11.37 | – | 11.37 | 33 |
| 2.4.8 | திருப்பூர் மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதி – நகர் ஊரமைப்பு துறையின் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை விதிகள் திட்டம் – 2014–15ன் கீழ் உயர்மட்டம் நடைபாதை மேம்பாலம் (Sky Walker) அமைத்தல் பணி – 403 லட்சம் நிதி ஒதுக்கீடு - பணி முற்றுப் பெறவில்லை - கைவிடப்பட்ட பணிகள் - நிதி அரசு நிதியில் செலுத்தாமை – பணிக்குரிய பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டவை பயன்படுத்தாமை - நிதி இழப்பு (பத்தி எண் 40/2016–17) | – | – | – | 34 |
| 2.4.9 | ஈரோடு மாநகராட்சி 2016–17 தணிக்கை புதிய ஜவுளி வணிக வளாகம் கட்டப்பட்டு சொத்துவரி மற்றும் காலிமனை வரி நிர்ணயம் செய்ததில் குறைபாடு மொத்த காலியிடத்திற்கும் வரி நிர்ணயம் செய்யாமல் சுமார் பாதியளவு காலிமனைக்கும் மட்டும் வரி நிர்ணயம் செய்ததால் இழப்பு மற்றும் சொத்துவரி நிர்ணயத்தில் 'A' மண்டல அடிப்படை மதிப்பிற்கு நிர்ணயம் செய்யாமல் 'C' மண்டல மதிப்பில் சொத்துவரி நிர்ணயம் செய்ததால் இழப்பு ரூ.20.30 இலட்சம்.<br>(பத்தி எண் 17/2016–17) | 20.30 | – | 20.30 | 35 |
| 2.4.10 | மதுரை மாநகராட்சி 2016–17 தணிக்கை – மூன்றாண்டு குத்தகை இனங்களை நீட்டிக்கும்போது புதுப்பித்தல் கட்டணம் வசூலிக்கப்படாதது மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவில் அங்காடி மதிப்பின் அடிப்படையிலான குத்தகை தொகை நிர்ணயம் செய்யப்படாதது – இழப்பு ரூ.28.49 இலட்சம். (பத்தி எண் 22/2016–17) | 28.49 | – | 28.49 | 37 |
| | | 654.00 | | 654.00 | |

# 3. நகராட்சிகள்

| தணிக்கை அறிக்கை பத்திஎண் | பத்தி தலைப்பு | தொகை ரூ. இலட்சத்தில் | தீர்வு செய்யப் பட்டத் தொகை ரூ. (இலட்சத்தில்) | நிலுவை ரூ. (இலட்சத்தில்) | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|
| 3.14.1 | நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் நகராட்சி –குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் நிதி திருத்தம் செய்யப்பட்ட குடிநீர்த் திட்ட உப விதிகளின்படி குடிநீர்க் கட்டண வைப்புத் தொகை வீட்டு உபயோகத்திற்கு ரூ.3000/– த்திலிருந்து ரூ.5000/– ஆகவும், வணிக உபயோகத்திற்கு ரூ.7000/– த்திலிருந்து ரூ.10000/– ஆகவும் உயர்த்தப்பட்டது. பழைய குடிநீர் இணைப்புகளுக்கு வேறுபாட்டு வைப்புத்தொகை வசூலிக்கப்படாதது குறைபாடு இழப்பு ரூ.1,91,35.000/– உடன் வசூலிக்கப்பட வேண்டும். (பத்தி எண் 16/2016–17) | 191.35 | 20.96 | 170.39 | 47 |
| 3.14.2 | தஞ்சாவூர் மாவட்டம் – கும்பகோணம் நகராட்சி – உட்கட்டமைப்பு இடைவெளி நிதி (IGFF) அய்யந்தான் கட்டளை வாய்க்கால் மற்றும் உள்ளூர் வாய்க்கால் தூர்வாரும் பணி பணி முற்றுபெறாமை தொகை அதிகமாக தீர்வு செய்தது நிதி இழப்பு ரூ.29.73 இலட்சம். (பத்தி எண் 20 (ம) 21/2016–17) | 29.73 | – | 29.73 | 48 |
| 3.14.3 | திருவள்ளூர் மாவட்டம் – ஆவடி பெரு நகராட்சி – ஜவகர்லால் நேரு நகர்ப்புறத் திட்டத்தின் கீழ் புதை வடிகால் திட்டம் (Under – ground sewerage) 2008–ல் ஆரம்பிக்கப்பட்டது 7 வருடங்கள் கடந்த பின்னரும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படாதது நோக்கம் நிறைவேறவில்லை. (பத்தி எண் 12/2016–17) | -- | – | – | 49 |
| 3.14.4 | திருவள்ளூர் மாவட்டம் – ஆவடி நகராட்சி – காலியிட மனை மீதான வழக்குகள் முடிந்த பின்னரும் காலியிட மனைவரி செலுத்தப்படாதது உரிய நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப்படாதது - இழப்பு தொகை ரூ.74.65 இலட்சம். (பத்தி எண் 21(இ)/2016–17) | 74.65 | – | 74.65 | 51 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3.14.5 | திருவள்ளூர் மாவட்டம் – திருத்தணி நகராட்சி – நகராட்சியால் விதிக்கப்பட்டு செலுத்தப்பட்டது - சேவை வரி – சேவை வரி செலுத்த அபராதம் மேல்முறையீட்டு வழக்கில் அபராதம் தள்ளுபடி செய்யப்பட்டது செலுத்தப்பட்ட அபராதத் தொகை மீள பெறப்பட வேண்டும் – இழப்பு ரூ.6.71 இலட்சம்.<br>(பத்தி எண் 22(இ)/2016–17) | 6.71 | – | 6.71 | 52 |
| 3.14.6 | கிருஷ்ணகிரி மாவட்டம் – கிருஷ்ணகிரி நகராட்சி – பல்வகை கேட்பு சென்ற ஆண்டு நடப்பு கேட்பு தொகை 2016–17 நடப்பு கேட்பில் எழுப்பப்படாமல் விடுபட்டுள்ளது, இழப்பு தொகை ரூ.6.65 இலட்சம் வசூலிக்கப்படல் வேண்டும்.<br>(பத்தி எண் 34/2016–17) | 6.65 | – | 6.65 | 53 |
| 3.14.7 | இராமநாதபுரம் மாவட்டம் – இராமேஸ்வரம் நகராட்சி - எம்.ஜி.ஆர் நகர் மற்றும் செம்மடம் வடக்கு சிமெண்ட் சாலை - ஒரே வங்கி கொடுப்பு செலவுச் சீட்டினை இருமுறை காண்பித்து இரு முறை தொகை தீர்வு செய்தது - நிதி இழப்பு ரூ.17.75 இலட்சம்.<br>(பத்தி எண் 38/2016–17) | 17.75 | – | 17.75 | 53 |
| 3.14.8 | இராமநாதபுரம் மாவட்டம் – இராமேஸ்வரம் நகராட்சி - சாலைகளில் கண்ணாடி இழை கேபிள் பதித்தல் சாலை சீரமைப்பு கட்டணம் குறைவாக வசூலித்தது வருவாய் இழப்பு ரூ.8.37 இலட்சம்<br>(பத்தி எண் 25 (ம) 26/2016–17) | 8.37 | – | 8.37 | 54 |
| 3.14.9 | ஜெயங்கொண்டம் நகராட்சி - வருவாய் மற்றும் மூலதனநிதி - திட்டப் பணிகளுக்கு விதிமுறைக்கு புறம்பாக முன்பணம் வழங்கியது – உரிய திட்டப்பணிகள் முடிக்கப்படாதது, நிலுவை முன்பணம் ரூ.1,02,27,956.00 ஈடு செய்யப்படாதது இழப்பு ரூ.42,50,654.00 வசூலிக்கப்பட வேண்டும்.<br>(பத்தி எண் 67/2016–17) | – | – | – | 55 |

# 4.பேரூராட்சிகள்

| வ. எண் | பத்தியின் தலைப்பு | தொகை ரூ. (இலட்சத்தில்) | தீர்வு செய்யப் பட்டத் தொகை ரூ. (இலட்சத்தில்) | நிலுவை ரூ. (இலட்சத்தில்) | பக்க எண். |
|---|---|---|---|---|---|
| 4.12.1 | நாமக்கல் மாவட்டம் – பாண்டமங்கலம் பேரூராட்சி சிறப்பு சாலைகள் திட்டம் 2015–16 வார்டு எண்கள் 01,02.03,04,05,06,09,10,11,13 மற்றும் 14 வார்டுகளின் தெருக்களுக்கு சிமெண்ட் சாலை அமைக்கல் அரசு மான்யம் ரூ.24.50 இலட்சம் மற்றும் பேரூராட்சி பங்கு தொகை ரூ.25.50 இலட்சம் ஆக மொத்தம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாகஅனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் மொத்தம் ரூ.33,27,067/–க்கு மட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டின் படியான முழுமையான பணி முடிக்கப்படவில்லை மேலும் பணி மேற்கொள்ளாத மதிப்பிற்கு உரிய விகிதாச்சார அரசு மான்யம் (Proportionate) ரூ.8,19,737/– அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும் மேலும் பணியினை முறைப்படுத்தப்பட வேண்டும். (பத்தி எண் 22/2016–17) | 8.19 | – | 8.19 | 62–64 |
| 4.12.2 | நாமக்கல் மாவட்டம் – நாமகிரிப்பேட்டை பேரூராட்சி செலவுகள் பேரூராட்சி நிதியிலிருந்து செலவுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. ஆனால் செய்யப்பட்டுள்ள செலவுகளுக்கு பேரூராட்சி மன்ற அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பேரூராட்சி மன்ற அனுமதி மறுக்கப்பட்ட செலவுகளை உயர் அலுவலர்கள் நிர்வாக ரீதியில் ஆய்வு செய்து முறைப்படுத்த வேண்டும் – தடைமறுப்பு ரூ.19.79 இலட்சம். (பத்தி எண் 19/2016–17) | 19.79 | – | 19.79 | 64–65 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4.12.3 | தொண்டி பேரூராட்சி – வரவுகள்-தினசரி நாளேட்டின் படியான வரவுகள் – வங்கியில் தொகை இருசால் செய்யும் போது பேரூராட்சி பணியமைப்பை சாராத மூன்றாம் நபர் தொகையினை செலுத்த அனுமதித்தது – பொறுப்பான பணியாளர் மீது நிர்வாக நடவடிக்கை தேவை ரூ. 21,49,634/– (பத்தி எண் 12/2016–17) | 21.49 | – | 21.49 | 65–66 |
| 4.12.4 | கன்னியாகுமரி மாவட்டம் – அஞ்சு கிராமம் பேரூராட்சி தொழிலாளர் நலநிதித் தொகை உரிய கணக்கில் செலுத்தாமல் பேரூராட்சி கணக்கில் முடக்கப்பட்டுள்ளது – ரூ 9.07 இலட்சம்–தணிக்கை தடை எழுப்பிய பின் தொகை செலுத்தப்பட்டது. (பத்தி எண் 44/2016–17) | 9.07 | 9.07 | – | 67 |
| 4.12.5 | விருதுநகர் மாவட்டம் – வத்ராயிருப்பு பேரூராட்சி தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் கட்டமைப்பு திட்டம் மற்றும் சிறப்புச் சாலைகள் திட்டம் – 2010–ன் கீழ் ஒதுக்கீடுகள் அரசிடமிருந்து பெறப்பட்டது 2013–14–க்குப் பின்னர் நாளது தேதி வரை எந்த ஒரு வரவு செலவும் மேற்கொள்ளாதது உரிய அரசு தலைப்பில் மீள செலுத்தப்பட வேண்டும் – தொகை ரூ.24.92 இலட்சம். (பத்தி எண் 57/2016–17) | 24.92 | – | 24.92 | 67–68 |
| 4.12.6 | அரியலூர் மாவட்டம் – உடையார்பாளையம் பேரூராட்சி பல்வகைக் கேட்பு - 2016–2017 ஆம் ஆண்டிற்கு புதிய பேருந்து நிலைய கடைகள் ஏலம் விடப்படாதது – ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். (பத்தி எண் 18/2016–17) | – | – | – | 68–69 |
| 4.12.7 | தஞ்சாவூர் மாவட்டம் – அய்யம்பேட்டை பேரூராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. புதிய கட்டிடத்தில் அலுவலகம் செயல்படாமல் பழைய கட்டிடத்தில் செயல்பட்டு வருவது குறைபாடு. (பத்தி எண் 17/2016–17) | – | – | – | 69–70 |
| | மொத்தம் | 83.46 | 9.07 | 74.39 | |

## 5.மாவட்ட ஊராட்சிகள்

| வ.எண். | தணிக்கைத் தடை சுருக்கம் | இழப்புத் தொகை ரூ. (இலட்சத்தில்) | தீர்வு செய்யப் பட்டத் தொகை ரூ. (இலட்சத்தில்) | நிலுவை ரூ. (இலட்சத்தில்) | பக்க எண். |
|---|---|---|---|---|---|
| பத்திகள் ஏதும் இல்லை | | | | | |

## 6.ஊராட்சி ஒன்றியங்கள்

| வ.எண். | தணிக்கைத் தடை சுருக்கம் | இழப்புத் தொகை ரூ. (இலட்சத்தில்) | தீர்வு செய்யப் பட்டத் தொகை ரூ. (இலட்சத்தில்) | நிலுவை ரூ. (இலட்சத்தில்) | பக்க எண். |
|---|---|---|---|---|---|
| 6.9.1 | திருவள்ளூர் மாவட்டம் – திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம் – திட்ட நிதி இந்திரா ஆவாஸ் யோஜனா செலவழிக்கப்படாத மானியம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு திருப்பிச் செலுத்தப்பட்டது ஒப்புகை பெறப்படாதது திட்டம் முடிவுற்ற நிலையில் பணக் குறிப்பேட்டின் படி இருப்பாக உள்ள எஞ்சிய தொகை அரசுக் கணக்கில் திருப்பிச் செலுத்தப்படாதது குறைபாடு ரூ.134 இலட்சம். (பத்தி எண் 11இ/2016–17) | 134.00 | – | 134 | 80–81 |
| 6.9.2 | கோயம்புத்தூர் மாவட்டம் – சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம் – வேலைகள் செலக்கரிச்சல் ஊராட்சி சித்தநாயக்கன் பாளையத்தில் ஆதிதிராவிடர் காலனியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி 2014–15–ன் கீழ் சமுதாய நலக்கூடம் கூரை மட்டம் வரை கட்டியது மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2014–15–ன் கீழ் பயணிகள் நிழற்குடை கட்டியது நீர்வழிப்பாதையில் கட்டியதால் நீதிமன்ற உத்தரவுபடி சூலூர் வட்டாட்சியரால் கட்டிடம் இடிக்கப்பட்டது செலவினத்தொகை இழப்பு வசூலிக்கப்பட வேண்டும் தொகை ரூ.11.93 இலட்சம்.(பத்தி எண் 22/2016–17) | 11.93 | – | 11.93 | 81–83 |
| 6.9.3 | விழுப்புரம் மாவட்டம் – வானூர் ஊராட்சி ஒன்றியம் – பெரியார் நினைவு சமத்துவபுரம் – 2010–11 நீண்ட காலமாக பணி முடிந்து மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்காதது – திட்டக் கணக்கில் பயன்பாடு இல்லாமல் அரசு நிதி முடக்கம் – பணி முடிக்காத | 124.75 | – | 124.75 | 83 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுத்து வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படவேண்டும் இழப்பு ரூ.124.75 இலட்சம். (பத்தி எண் 48/2016–17) | | | | |
| 6.9.4 | விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றிம், வைப்புத் தொகை - வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்கள் கட்டுப்பாட்டில் பராமரிக்கப்படும் பொதுநிதி, சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் மற்றும் ஊரக உள்கட்டமைப்பு (சாலைகள் ) திட்டக் கணக்குகளில் ஒரே வைப்புத் தொகை எண்ணை குறிப்பிட்டு இரு முறை ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கியது கடும் குறைபாடு ரூ.711641/– வசூலிக்கப்பட வேட்ணடும். மேலும், வழங்கிய அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுத்து விவரம் தணிக்கைக்கு தெரிவிக்க வேண்டும். (பத்தி எண் 34/2016–17) | 7.12 | 7.12 | – | 84–85 |
| 6.9.5 | திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் கட்டிட வரைபட அனுமதி அளித்தது – தொழிற்சாலை கட்டடங்களுக்கான வரைபட அனுமதி வட்டார வளர்ச்சி அலுவலரால் அளித்தது - தவறு நகர் ஊரமைப்பு இயக்குநரிடம் பெறப்பட வேண்டும் மற்றும் அடிப்படை வசதிகள் கட்டணம் வசூலிக்கப்படாதது இழப்புத் தொகை ரூ.451630/– (பத்தி எண் 4/2016–17) | 4.52 | – | 4.52 | 85 |
| 6.9.6 | வேலூர் மாவட்டம் – காட்பாடி ஊராட்சி ஒன்றியம் – பொதுநிதி – அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் பேவர் பிளாக் சாலை, கல்வெர்டு குடிநீர் பணிகள் மேற்கொண்டது மதிப்பு ரூ.21.40 இலட்சம் தணிக்கை தடைக்குட்படுத்தப்படுகிறது. (பத்தி எண் 26/2016–17) | 21.40 | – | 21.40 | 86 |
| | மொத்தம் | 303.72 | 7.12 | 296.6 | |

# 7.கிராம ஊராட்சிகள்

| வ.எண். | தணிக்கைத் தடை சுருக்கம் | இழப்புத் தொகை ரூ. (இலட்சத்தில்) | தீர்வு செய்யப் பட்டத் தொகை ரூ. (இலட்சத்தில்) | நிலுவை ரூ. (இலட்சத்தில்) | பக்க எண். |
|---|---|---|---|---|---|
| 7.9.1 | தஞ்சாவூர் மாவட்டம் – கிராம ஊராட்சிகள் - ரொக்க வரவினம் குறைவாக வங்கியில் செலுத்தியது. செலுத்தப்படாமல் கையாடல் செய்யப்பட்டுள்ள தொகை ரூ.11.71 இலட்சம் | 11.71 | 11.71 | – | 91–92 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வசூலிக்கப்பட வேண்டும்– தணிக்கையில் சுட்டிக் காட்டியபின் தொகை செலுத்தப்பட்டது. | | | | |
| 7.9.2 | விழுப்புரம் மாவட்டம் – தென் கிரனூர் ஊராட்சி (2%) 2016–17 -- தணிக்கை 14வது நிதிக்குழு மான்யத் தொகை கிராம ஊராட்சி கணக்கில் வரவு வைக்கப்படவில்லை - சத்துணவு மைய கணக்கில் வரவு வைத்தது – ரூ.18.23 இலட்சம்– தணிக்கையில் சுட்டிக் காட்டிய பின் தொகை செலுத்தப்பட்டது. | 18.23 | 18.23 | – | 92 |
| 7.9.3 | கிராம ஊராட்சிகள் - வரி மற்றும் வரியில்லா கட்டணங்கள் வசூலித்தல் தினசரி வசூல் - வசூல் செய்த தொகையினை விட குறைவாக இருசால் செய்தது - வருவாய் இழப்பு ரூ.3.57 இலட்சம் –2.59 இலட்சம் தணிக்கையில் சுட்டிக் காட்டிய பின் தொகை செலுத்தப்பட்டது. | 3.57 | 2.59 | 0.98 | 93–94 |
| 7.9.4 | திருநெல்வேலி மாவட்டம் – தென்காசி ஊராட்சிஒன்றியம் கணக்கப்பிள்ளைவலசை ஊராட்சி - கட்டட தொழிலாளர் நலநிதி வசூலித்தது -நலநிதி கணக்கில் செலுத்தப்படவில்லை - நலநிதிக்கு வருவாய் இழப்பு ரூ.10.58 இலட்சம்– தணிக்கையில் சுட்டிக் காட்டிய பின் தொகை செலுத்தப்பட்டது.<br>(பத்தி எண் 34/2016–17) | 10.58 | 10.58 | – | 95 |
| 7.9.5 | விருதுநகர் மாவட்டம் – நரிக்குடி ஊராட்சி ஒன்றியம் கீழக்கொன்றைக்குளம் ஊராட்சி கணக்கு எண்.2–லிருந்து மூன்றாம் நபருக்கு காசோலை வழங்கியது -- முறைகேடு – ரூ.9 இலட்சம்.<br>(பத்தி எண் 24/2016–17) | 9.00 | – | 9.00 | 95–96 |
| 7.9.6 | பெரம்பலூர் மாவட்டம் – பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம் – சிறுவாச்சூர் கிராம ஊராட்சி - கட்டட உரிம கட்டணம் குறைவாக கணக்கிட்டு வசூலித்தது - வருவாய் இழப்பு ரூ.60.26 இலட்சம்.<br>(பத்தி எண் 12/2016–17) | 60.26 | – | 60.26 | 97 |
| 7.9.7 | திருவண்ணாமலை மாவட்டம் – ஆரணி ஊராட்சி ஒன்றியம் இராட்டிணமங்கலம் ஊராட்சி – குடிநீர் கட்டண நிலுவை வசூலிக்கப்படுவதில் சுணக்கம் – வருவாய் இழப்பு ரூ.22.92 இலட்சம்.<br>(பத்தி எண் 8/2016–17) | 22.92 | – | 22.92 | 97–98 |
| | மொத்தம் | 136.27 | 43.11 | 93.16 | |

# 8.பல்கலைக்கழகங்கள்

| வ. எண். | பத்தி விவரம் | தொகை ரூ. (இலட்சத்தில்) | தீர்வு செய்யப் பட்டத் தொகை ரூ. (இலட்ச த்தில்) | நிலுவை ரூ. (இலட்ச த்தில்) | பக்கம் எண் |
|---|---|---|---|---|---|
| 8.8.1 | சென்னை பல்கலைக்கழகம் 2016–17 தணிக்கை மூன்றாண்டு பணி முடிக்காத ரீடர் மற்றும் விரிவுரையாளர்களுக்கும் **[Readers and Lecturer (Selection grade)]** அரசாணைக்கு முரணாக கூடுதல் ஊதியம் வழங்கியது. (பத்தி எண் 13/2016–17) | 148.08 | – | 148.08 | 103–104 |
| 8.8.2 | சென்னை பல்கலைக்கழகம் 2016–17 தணிக்கை ஆறு சார்ஜண்ட்களுக்கு **(Sergeant)** தேர்வுநிலை வழங்கும்போது அரசாணைக்கு முரணாக அரசால் அனுமதிக்கப்பட்டதை விட கூடுதலான ஊதிய கற்றை மற்றும் அதிகமான தர ஊதியம் வழங்கியதால் கூடுதல் செலவினம். (பத்தி எண் 17/2016–17) | 7.74 | – | 7.74 | 105–106 |
| 8.8.3 | சென்னை பல்கலைக்கழகம் 2016–17 தணிக்கை பல்கலைக்கழக மானிய குழுவால் ஐந்தாண்டுகளுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்ட உயிரி தொழில்நுட்ப (Bio Technology) துறைக்கு அதன்பிறகும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வரும் ஆசிரியர்களுக்கான ஊதிய செலவினம். (பத்தி எண் 20இ/2016–17) | 65.58 | – | 65.58 | 106 |
| 8.8.4 | சென்னை பல்கலைக்கழகம் 2016 –17 தணிக்கை பொருளாதார படிப்பிற்கான டாக்டர் அம்பேத்கர் மையம் (Dr.Ambedkar Centre for Economic Studies)-மத்திய அரசின் (Ministry of Social Justice & Empowerment, Government of India) சமூக நீதி மற்றும் அதிகாரமயமாக்கல் துறையின் கீழ் செயல்படும் டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளையிடமிருந்து (Dr.Ambedkar Foundation) மானியத் தொகை பெறப்படாதது மற்றும் மையத்தில் பணியாற்றும் ஆராய்ச்சி அலுவலருக்கு (Research Officer) விதிகளுக்கு முரணாக ஆசிரியர்களுக்கு இணையான ஊதியமும் பதவி உயர்வும் வழங்கியது – குறைபாடு. (பத்தி எண் 47/2016–17) | 124.96 | – | 124.96 | 106–108 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8.8.5 | சென்னை பல்கலைக்கழகம் 2016–17 தணிக்கை குற்றவியல் துறையினை மேம்படுத்த (புதிய கட்டடம், உபகரணம், இதர கட்டமைப்பு போன்றவற்றிற்காக) அரசால் 2008–09–ல் வழங்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் மானியத் தொகையில் அறைகலன்கள் (Furnitures) மட்டும் வாங்கியது – 9 ஆண்டுகளாக வேறு செலவினம் ஏதும் மேற்கொள்ளப்படாதது நிலுவை மான்யம் வட்டியுடன் அரசுக்கு திருப்பி செலுத்தப்பட வேண்டும்.<br>(பத்தி எண் 50/2016–17) | 77.61 | – | 77.61 | 108–110 |
| | மொத்தம் | 423.97 | – | 423.97 | |

# 9. பொது நூலகங்கள்

| வ.எண். | தணிக்கைத் தடை சுருக்கம் | தொகை ரூ. (இலட்சத்தில்) | பக்கம் எண் |
|---|---|---|---|
| | பத்திகள் ஏதும் இல்லை | | 111 |

# 10. மாவட்ட வேளாண்மை விற்பனைக்குழு

| வ.எண். | தணிக்கைத் தடை சுருக்கம் | தொகை ரூ. (இலட்சத்தில்) | பக்கம் எண் |
|---|---|---|---|
| | பத்திகள் ஏதும் இல்லை | | 114–115 |

## 11. வரவு செலவு திட்டம் தயாரித்து அங்கீகரிக்கப்படாமை

| வ. எண் | தடையின் சுருக்கம் | தொகை (இலட்சங்களில்) | பக்க எண் |
|---|---|---|---|
| 11 | வரவு செலவு திட்டம் தயாரிக்கப்படாமை மற்றும் கண்காணிக்கப்படாமை | – | 117 |

## பெருநகர சென்னை மாநகராட்சி

**1.1 முன்னுரை**

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சென்னை மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகை **46.46** லட்சமாகும். இதில் ஆண்கள் 23.36 இலட்சம். பெண்கள் 23.10 இலட்சம். மொத்த கல்வியறிவு 90.18 விழுக்காடு. அரசு ஆணை எண்.256 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.12.2009ன் படி சென்னை மாநகராட்சியின் பரப்பளவு 426 சதுர கி.மீ. விரிவுபடுத்தியதால் திருத்திய மக்கள் தொகை சுமார் 70 இலட்சம். சென்னை மாநகராட்சி 25.10.2011 முதல் 15 மண்டலங்களாக பிரித்து 200 கோட்டங்களாக வரையறுத்து செயல்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து அக்டோபர் 2015ல் "பெருநகர சென்னை மாநகராட்சி" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் 12 வது அட்டவணையில் பட்டியலிடப்பட்ட 18 செயல்பாடுகளுள் 13 செயல்பாடுகள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பகிர்வு செய்யப்பட்டுள்ளன. சென்னை நகர முனிசிபல் சட்டம் 1919ன் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் செயல்பாடுகள் அமையப் பெற்றுள்ளன.

**1. 2 செயல்பாடுகள்:**

தமிழ்நாடு அரசால் ஒப்பளிக்கப்பட்ட 13 செயல்பாடுகளுள் சாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்கு, திடக்கழிவு, துப்புரவு, கல்வி, சுகாதாரம், பூங்கா போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுத்தல் பணி மற்றும் பிறப்பு, இறப்பு சான்று வழங்குதல் போன்ற இதர பணிகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளை மேற்கொள்ள 15 மண்டலங்கள் மற்றும் 27 துறைகள்/ பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

**மண்டலங்கள் விவரம்**

| வ.எண் | மண்டலங்கள் | |
|---|---|---|
| 1 | திருவொற்றியூர் | வட்டார அலுவலகம் – வடக்கு |
| 2 | மணலி | |
| 3 | மாதவரம் | |
| 4 | தண்டையார்பேட்டை | |

| | | |
|---|---|---|
| 5 | இராயபுரம் | |
| 6 | திரு.வி.க நகர் | வட்டார அலுவலகம் – மத்தியம் |
| 7 | அம்பத்தூர் | |
| 8 | அண்ணா நகர் | |
| 9 | தேனாம்பேட்டை | |
| 10 | கோடம்பாக்கம் | |
| 11 | வளசரவாக்கம் | வட்டார அலுவலகம் – தெற்கு |
| 12 | ஆலந்தூர் | |
| 13 | அடையாா் | |
| 14 | பெருங்குடி | |
| 15 | சோழிங்கநல்லூர் | |

**துறைகளின் விவரம்**

| வ.எண் | துறைகள் |
|---|---|
| 1 | பொது சுகாதாரம் |
| 2 | திடக்கழிவு |
| 3 | மாவட்ட குடும்ப நலத்துறை |
| 4 | பேருந்து தடவழிச்சாலை |
| 5 | வருவாய் |
| 6 | மழைநீர் வடிகால் |
| 7 | பாலங்கள் |
| 8 | கட்டடங்கள் |
| 9 | பொதுத்துறை |
| 10 | இயந்திர பொறியியல் |
| 11 | நிலம் (ம) உடமை |
| 12 | மின்துறை |

| | |
|---|---|
| 13 | மத்திய கணக்கு குழுமம் |
| 14 | பணித்துறை |
| 15 | பூங்கா (ம) விளையாட்டுத்துறை |
| 16 | மன்றத்துறை |
| 17 | வரி மேல் முறையீடு |
| 18 | ஓய்வூதிய நிதி |
| 19 | பொது சேமநலநிதி |
| 20 | ஆரம்ப கல்வி நிதி |
| 21 | உயர் (ம) மேல்நிலை கல்வி நிதி |
| 22 | தரக்கட்டுபாடு |
| 23 | சிறப்புத்திட்டம் |
| 24 | சட்டகுழுமம் |
| 25 | தலைமை பொறியாளர் (பொது) |
| 26 | தலைமை பொறியாளர் (கட்டடம்) |
| 27 | தலைமை பொறியாளர் (திட்டம்) |

கீழ்காணும் சில பிரதான அலகுகளும் செயல்பட்டு வருகின்றன.

| வ.எண். | துறைகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மகப்பேறு மருத்துவமனை | 15 |
| 2 | நகர்புற சுகாதார மையம் | 140 |
| 3 | தொற்றுநோய் மருத்துவமனை | 1 |
| 4 | மருத்துவ பகுப்பாய்வு கூடம் | 6 |
| 5 | பொதுநல பகுப்பாய்வு கூடம் | 1 |
| 6 | மருந்தகம் | 75 |
| 7 | மாநகராட்சி அச்சகம் | 1 |
| 8 | சமுதாய நலக்கூடம் | 55 |
| 9 | நவீன இறைச்சிக் கூடம் | 3 |
| 10 | வெள்ள நிவாரண மையம் | 5 |

| | | |
|---|---|---|
| 11 | அம்மா உணவகம் | 407 |
| 12 | பூங்காக்கள் | 525 |
| 13 | விளையாட்டு மைதானம் | 210 |
| 14 | உடற்பயிற்சி கூடம் | 96 |
| 15 | நீச்சல் குளம் | 2 |
| 16 | சமுதாய கல்லூரிகள் (செவிலியர் பயிற்சி, இயந்திரவியல், கணினி மற்றும் வங்கி) | 4 |
| 17 | தொழிற் பயிற்சி பள்ளி (I.T.I) | 1 |
| 18 | மழலையர் பள்ளி | 175 |
| 19 | ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை (ம) மேல்நிலைப் பள்ளிகள் | 281 |
| 20 | லாரி நிலையம் | 15 |
| 21 | துணை மின்நிலையம் | 71 |
| 22 | ஆயுஷ் மருத்துவமனை | 3 |
| 23 | குப்பை கொட்டும் வளாகங்கள் | 2 |
| 24 | குப்பை மாற்றும் நிலையங்கள் | 11 |

கீழ்க்காணும் நிலைக் குழுக்கள் (ஒவ்வொரு குழுவும் 15 உறுப்பினர்களை கொண்டது) செயல்பட்டு வருகின்றன.

1. வரி மற்றும் நிதி
2. கல்வி (பூங்கா (ம) விளையாட்டு மைதானம்)
3. சுகாதாரம் மற்றும் குடும்ப நலம்
4. பணிகள்
5. நகரமைப்பு
6. கணக்கு மற்றும் தணிக்கை

**1.3 கணக்குகள் பராமரிப்பு**

01.04.1982 முதல் சொத்துவரி மட்டும் இயல்பு நிலை கணக்குகள் (Accrual based Accounts) முறைப்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன. 1919 ஆம் வருட சென்னை மாநகராட்சி சட்ட விதி 17 பகுதி III அட்டவணை V மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 பிரிவு 7 மற்றும் விதிகள் 2016ன் பிரிவு 7 ஆகியவற்றின்படியும்

ஆண்டு கணக்குகள் அடுத்து வரும் நிதியாண்டில் ஜூன் 30ஆம் தேதிக்குள் தணிக்கைக்கு அளிக்கப்பட வேண்டும்.

**பெருநகர சென்னை மாநகராட்சியின் மொத்த சொத்துவரி இனங்களான 11,95,723 வரி விதிப்புகளின் கேட்பு, வசூல் மற்றும் நிலுவை விவரம்**

| வ எண் | ஆண்டு | கேட்பு (கோடியில்) | வசூல் (கோடியில்) | நிலுவை (கோடியில்) | வசூல் (விழுக்காடு) |
|---|---|---|---|---|---|
| 1. | 2014–15 | 500.11 | 319.43 | 180.68 | 63.87 |
| 2. | 2015–16 | 565.51 | 326.89 | 238.62 | 57.80 |
| 3. | 2016–17 | 579.84 | 367.34 | 212.50 | 63.35 |

**1.4 வரவு, செலவு விவரங்கள்:**

பெருநகர சென்னை மாநகராட்சியின் 2016–17 ஆம் ஆண்டிற்கான வரவு மற்றும் செலவினங்கள் கீழ்காணுமாறு உள்ளது.

**வரவின விபரம்**

| வ. எண் | விவரம் | பொது நிதி | | கல்வி நிதி | | கூடுதல் ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ.லட்சத்தில் | விழுக்காடு | ரூ.லட்சத்தில் | விழுக்காடு | |
| 1 | வரி இனங்கள் | 71117.69 | 36.80 | 14914.11 | 99.99 | 86031.80 |
| 2 | வரி இல்லா இனங்கள் | 15724.72 | 8.13 | 0.17 | – | 15724.89 |
| 3 | ஒதுக்கப்பட்ட வருவாய் | 55148.20 | 28.54 | – | – | 55148.20 |
| 4 | மான்யங்கள் மற்றும் பங்குத் தொகை | 35183.15 | 18.22 | – | – | 35183.15 |
| 5 | மூலதனத்தின் மீதான வரவு | 293.24 | 0.15 | – | – | 293.24 |
| 6 | ஈட்டப்பட்ட வட்டி | 423.58 | 0.22 | – | – | 423.58 |
| 7 | இதர வரவுகள் | 15336.88 | 7.94 | 0.35 | 0.01 | 15337.23 |
| | **மொத்த வருவாய்** | **193227.46** | **100** | **14914.63** | **100** | **208142.09** |



119-3—4a

செலவின விவரம்

| வ. எண் | விவரம் | பொது நிதி | | கல்வி நிதி | | கூடுதல் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூ.லட்சத்தில் | விழுக்காடு | ரூ.லட்சத்தில் | விழுக்காடு | ரூ.லட்சத்தில் |
| 1 | பணியாளர்கள் ஊதியம் | 104271.07 | 35.43 | 1204.50 | 44.58 | 105475.57 |
| 2 | நிர்வாக செலவினம் | 11012.19 | 3.74 | 226.86 | 8.39 | 11239.05 |
| 3 | இயக்குதல் (ம) பராமரிப்பு செலவினம் | 76236.77 | 25.91 | 335.96 | 12.43 | 76572.73 |
| 4 | வட்டி (ம) நிதி கட்டணங்கள் | 10627.73 | 3.61 | – | – | 10627.73 |
| 5 | திட்டச் செலவினம் | 326.23 | 0.11 | 4.35 | 0.16 | 330.58 |
| 6 | இதர செலவினம் | 124.82 | 0.04 | 359.13 | 13.29 | 483.95 |
| 7 | தேய்மானம் | 91665.90 | 31.16 | 571.02 | 21.15 | 92236.92 |
| 8 | மொத்த செலவினம் | 294264.71 | 100.00 | 2701.82 | 100.00 | 296966.53 |
| 9 | பற்றாக்குறை / உபரி | 56037.25 | – | 12212.81 | – | – |
| | மொத்தம் | 193227.46 | – | 14914.63 | | |

**1.5 தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்ட துப்புரவு பணிக்கான செலவின விவரம் கீழ்காணுமாறு**

**செலவின விவரம்**

| வ எண் | தலைப்பு | கணக்கு குறியீடு | 2014–15 (இலட்சம்) | 2015–16 (இலட்சம்) | 2016–17 (இலட்சம்) |
|---|---|---|---|---|---|
| 1 | தனியார் துப்புரவு பணி | 230150100 | 18167.59 | 21575.69 | 25153.43 |

2016–17 ஆம் ஆண்டில் மேற்படி தனியார் துப்புரவு பணி செலவினம் ரூ.25,153.43 இலட்சம் மற்றும் மாநகராட்சி துப்புரவு பணியாளர்கள் ஊதியம் ரூ.21,017.91 இலட்சம் என மொத்தமாக தணிக்கை ஆண்டில் ரூ.46,171.34 இலட்சம் துப்புரவு பணிக்காக செலவிடப்பட்டுள்ளது. இச்செலவினம் மாநகராட்சியின் வருவாயில் சுமார் 31.51 விழுக்காடு ஆகும். செலவினத்திற்கு ஏற்றவாறு வருவாய் அதிகரிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.6 வசூலிக்கப்பட வேண்டிய வரவினங்கள்

| வ.எண் | வரவினம் | தொகை (இலட்சம்) |
|---|---|---|
| 1 | சொத்துவரி | 21250.49 |
| 2 | இதர வரிகள் | 2746.03 |
| 3 | பணிக்கான முன்பணங்கள் | 3957.87 |
| 4 | பிற முன்பணங்கள் | 16592.81 |
| 5 | இதர இனங்கள் | 20286.71 |
| | மொத்தம் | **64833.91** |

விரிவான சொத்து மற்றும் பொறுப்புகள் சம்பந்தப்பட்ட தணிக்கை அறிக்கையில் உள்ளது.

### 1.7 முதலீடுகள்

சென்னை மாநராட்சி 2016–17ஆம் ஆண்டின் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளில் முதலீட்டில் (Investment) உள்ள தொகைகளின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிதி (கணக்கு குறியீடு) | ஆரம்ப இருப்பு | முதலீடுகள் | திரும்ப பெற்ற தொகை | இறுதி இருப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | மூலதன நிதி முதலீடு (420800100) | 186878200 | 325605693 | - | 512483893 |
| 2 | பொது நிதி முதலீடு (420800100) | 44400000 | 1887311 | 44343692 | 1943619 |
| | | | | மொத்தம் | **514427512** |

**31.03.2017–ல் இம்மாநகராட்சியின் முதலீடுகள் இருப்பு ரூ.5144.27/- இலட்சம் ஆகும்**

2016–17 ஆம் ஆண்டின் இறுதியில் பெருநகர சென்னை மாநகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய நிலுவை கடன் தொகை விவரம்

| வ.எண் | தலைப்பு | 31.03.2017ல் நிலுவை (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மாநில அரசின் வட்டியில்லா கடன்கள் | 20785.02 |
| 2 | வட்டியுடன் கூடிய இதர கடன்கள் (TUFIDCO, TNUDF, Indian Bank, ICICI etc.) | 162308.16 |
| | மொத்தம் | **183093.18** |

மாநகராட்சியின் வரிவருவாய் தொகையை பெருக்கி கடன் நிலுவையை குறைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். (இணைப்பு 1)

## இணைப்பு–1

### 2016–17 ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் கடன்கள் தொடர்பான விவரங்கள்

| வ. எண் | கணக்குக் குறியீடு எண் | கணக்கு தலைப்பு | 01.04.2016ல் ஆரம்ப இருப்பு (இலட்சத்தில்) | 2016–17 பெறப்பட்ட கடன் தொகை (இலட்சத்தில்) | 2016–17 திரும்ப செலுத்தப்பட்ட தொகை (இலட்சத்தில்) | 31.03.2017ல் இறுதி இருப்பு (இலட்சத்தில்) | 2016–17 செலுத்தப்பட்ட வட்டி தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| I. மாநில அரசின் வட்டியில்லா கடன்கள் | | | | | | | |
| 1 | 330–10–01–01 | ஐ.நே– நகர்ப்புற புனரமைப்பு திட்டம் – பாலங்கள் | 867.10 | - | 82.20 | 784.90 | - |
| 2 | 330–10–01–02 | ஐ.நே– நகர்ப்புற புனரமைப்பு திட்டம் – மழைநீர் வடிகால் வாரியம் | 19296.59 | - | - | 19296.59 | - |
| 3 | 330–10–01–03 | ஐ.நே– நகர்ப்புற புனரமைப்பு திட்டம் – புராதனக் கட்டிடங்கள் | 70.83 | - | 13.07 | 57.76 | - |
| 4 | 330–10–01–04 | ஐ.நே– நகர்ப்புற புனரமைப்பு திட்டம் – திடக்கழிவு மேலாண்மைத் துறை | 273.57 | - | 78.16 | 195.41 | - |
| 5 | 330–20–01–02 | Ways and Means Advance மூலதனம் | 400.00 | - | - | 400.00 | - |
| 6 | 330–20–01–00 | மூலதன கடன்கள் | 50.36 | - | - | 50.36 | - |
| II. வட்டியுடன் கூடிய கடன்கள் | | | | | | | |
| 7 | 330–30–01–00 | அரசு சார்ந்த நிறுவனங்கள் – TUFIDCO– MCP | 100.32 | - | 65.08 | 35.24 | 3.04 |
| 8 | 330–30–02–00 | அரசு சார்ந்த நிறுவனங்கள் – TUFIDCO– MIDF | 20150.66 | 21201.06 | 3863.47 | 37488.25 | 1393.98 |
| 9 | 330–30–03–00 | அரசு சார்ந்த நிறுவனங்கள் – TNUDF– KFW | 12783.75 | 8432.00 | 1311.06 | 19904.69 | 1407.17 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | 330-30-04-00 | அரசு சார்ந்த நிறுவனங்கள் – WORLD BANK-TNSUDP (I-SWD) | - | 19000.00 | - | 19000.00 | 433.84 |
| 11 | 330-60-00-02 | இதர கடன்கள் – Indian Bank | 24868.50 | 12502.00 | - | 37370.50 | 3219.68 |
| 12 | 330-60-00-03 | இதர கடன் – ICICI Bank | 7947.90 | - | - | 7947.90 | 761.27 |
| 13 | 330-60-00-04 | இதர கடன் – CANARA Bank | - | 19651.50 | - | 19651.50 | 1086.61 |
| 14 | 330-80-00-00 | இதர கடன்கள் (முந்தைய நகராட்சி அமைப்புகள்) | 197.25 | - | 72.67 | 124.58 | 4.81 |
| **கூடுதல்** | | | **87006.83** | **80786.56** | **5485.71** | **162307.68** | **8310.40** |

### 1.8 கல்வி வரி

சென்னை மாநகராட்சியின் கல்வி நிதியில் 2016–17ஆம் ஆண்டில் தொடக்க கல்வி நிதி தொகை ரூ.14554.99 இலட்சங்கள் உபரியாக உள்ளது. இத்தொகையை வருவாய் நிதியிலிருந்து கல்வி நிதிக்கு மாற்றம் செய்து கல்வித்தொடர்பான மூலதன பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

கல்வி வரியாக 1990–91 முதல் 2016–17ஆம் ஆண்டு முடிய வசூல் செய்யப்பட்டு சென்னை மாநகராட்சியில் உள்ள மொத்த தொகை விவரம் பின்வருமாறு.

| வ. எண் | வசூல் ஆண்டு | வசூல் தொகை | செலவினம் | செலுத்தப்பட வேண்டிய நிகரத் தொகை |
|---|---|---|---|---|
| | | ரூ. லட்சங்களில் | | |
| 1. | 1990–91 முதல் 2008–09 | 57888.01 | 2046.60 | 55841.41 |
| 2. | 2009–10 | 7869.50 | 227.53 | 7641.97 |
| 3. | 2010–11 | 8212.93 | 267.76 | 7945.17 |
| 4. | 2011–12 | 7405.50 | 266.55 | 7138.95 |
| 5. | 2012–13 | 7635.10 | 240.54 | 7394.56 |
| 6. | 2013–14 | 6202.77 | 218.31 | 5984.46 |
| 7. | 2014–15 | 16320.34 | 314.10 | 16006.24 |
| 8. | 2015–16 | 12405.23 | 306.38 | 12098.85 |
| 9. | 2016–17 | 14914.11 | 359.12 | 14554.99 |
| | **மொத்தம்** | **138853.49** | **4246.89** | **134606.60** |

### 1.9 நூலக வரி

2016–17 ஆம் ஆண்டில் நூலக வரியாக ரூ.2928.91 லட்சங்கள் வருவாய் நிதியில் இருப்பாக உள்ளது. அதனை மாவட்ட நூலக ஆணையத்திற்கு செலுத்திட வேண்டும்.

மேலும் அரசாணை (நிலை) எண்.92, பள்ளி கல்வித்(கே1)துறை நாள்.23.04.2008ன் படி நூலக வரி, சொத்துவரியில் ஒரு ரூபாய்க்கு 5 காசு என்பது 10 காசாக உயர்த்தி 01.04.2008 முதல் வசூலிக்க வேண்டும். ஆனால் சென்னை மாநகராட்சியில் 4, 5, 6, 8, 9, 10 மற்றும் 13 ஆகிய 7 மண்டலங்களில்

மேற்படி அரசாணையின்படி நூலக வரி 10 காசு என வசூலிக்காமல் ஒரு ரூபாய்க்கு 5 காசு மட்டுமே வசூல் செய்யப்படுகிறது. இக்குறைபாடு உடன் சரி செய்யப்பட வேண்டும்.

**1.10 அம்மா உணவகம்**

அரசாணை எண்.21 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.17.01.2013ன் படி சென்னை மாநகராட்சி பகுதியில் உள்ள அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்த விலையில் சுகாதாரமான உணவு கிடைக்கும் பொருட்டு ஒவ்வொரு கோட்டத்திலும் ஒரு அம்மா உணவகம் வீதம் 200 அம்மா உணவகங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வந்தன. இதன் தொடர்ச்சியாக அரசாணை எண்.118 நநி(ம)குவ துறை, நாள்.26.09.2014ன்படி மேலும் 100 உணவகங்கள் திறக்கப்பட்டு 2016–17 ஆம் ஆண்டில் மொத்தம் 407 அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன.

மேற்படி அம்மா உணவகங்களில் கீழ்காணுமாறு குறைந்த விலையில் உணவுகள் வழங்கப்படுகின்றன.

| வ.எண் | உணவு விவரம் | விற்பனை விலை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | இட்லி (1 எண்) | 1 |
| 2 | சப்பாத்தி (2 எண்ணிக்கை) | 3 |
| 3 | கலவை சாதம் | 5 |
| 4 | தயிர் சாதம் | 3 |

மேற்படி அம்மா உணவகங்கள் சாதாரண அடித்தட்டு மக்களின் பயன்பாட்டிற்கு சேவை புரிவதால், 2013–14 முதல் 2016–17 ஆம் ஆண்டு வரை அம்மா உணவகங்களில் ஏற்பட்ட கூடுதல் செலவினம் ரூ.323.32 கோடி தொகையை அரசிடம் கோரிபெற பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதாரத் துறை கோப்பு எண்.B2/3132/2016ல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**1.11 தணிக்கையில் கண்டறியப்பட்ட சில கடுங்குறைபாடுகள்**

சென்னை மாநகராட்சி சட்டம் 1919 அட்டவணை V நிதி விதிகள் 19 (டி) மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 மற்றும் விதிகள் (Rule) 2016 உட்பிரிவு 11(1)ன் படி தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தணிக்கையில் கண்டறியப்பட்ட குறைபாடுகளில் பின்வருபவை மட்டும் மேற்படி உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் படி அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகிறது.

**1.11.1 சென்னை மாநகராட்சி – மண்டலம் II வளசரவாக்கம் – 2016–17ஆம் ஆண்டு கட்டட அனுமதி வழங்கியது – அதிகார பகிர்வை மீறி அனுமதி வழங்கியது – வணிக நோக்கத்தில் சொத்து வரி நிர்ணயம் செய்யாதது – தவிர்த்திருக்க வேண்டிய வருவாய் இழப்பு –ரூ. 12.18 இலட்சம் (பத்தி எண்.28) /2016–17**

2016–17ஆம் ஆண்டில், வளசரவாக்கம் மண்டலத்தில் திட்ட அனுமதி எண்.WDC11/PPA/06182/2016ன் வழி திரு.ஆர்.சபாபதி என்பவருக்கு 3260 சதுர மீட்டரில் 1260 சதுர மீட்டர் குடியிருப்பு கட்டடம் மற்றும் 2000 சதுர மீட்டர் வணிக நோக்க கட்டடம் கட்ட திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கணக்கீட்டில் 300 சதுர மீட்டர் எனக் காண்பித்து அடிப்படை கட்டமைப்பு வசதி கட்டணமாக(Infra structure and amenities charges) ரூ.1,13,000/– வசூலிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடம் கட்டப்பட்டு சொத்துவரி வரி விதிப்பு எண்.11 153–12621–000ன்படி மொத்தம் 35,600 சதுர அடி கொண்ட வணிக நோக்க கட்டடத்திற்கு 2017–18ஆம் ஆண்டு முதல் அரையாண்டு முதல் ஒரு அரையாண்டிற்கு ரூ.1,93,841/– சொத்துவரியாக விதிக்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும வளர்ச்சி விதிகள் 2010ன்படி 300 சதுர மீட்டர் அளவுள்ள வணிக நோக்க கட்டடத்திற்கு மட்டுமே திட்ட அனுமதி மண்டல செயற்பொறியாளரால் வழங்க இயலும் என்ற அதிகார பகிர்வை மீறி 3260 சதுர மீட்டர் அளவுக்கு அனுமதி வழங்கிவிட்டு அதனை 2000 ச.மீ வணிகம் 1260 சதுர மீட்டருக்கு குடியிருப்பு என காண்பித்துள்ளது தவறான செயலாகும். உரிய முறையில் இதனை திட்ட அனுமதி வேண்டி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு பரிந்துரை செய்திருந்தால் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு வருவாய் இழப்பை தவிர்த்திருக்கலாம்.

அதேபோன்று வணிக நோக்க கட்டட அடிப்படையில் கட்டட உரிம கட்டணங்கள் கணக்கிட்டு வசூலித்திருந்தால் பெருநகர சென்னை நகராட்சிக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு ரூ.12.18 இலட்சத்தை தவிர்த்திருக்கலாம் என சுட்டிக்காட்டப்படுகிறது.
(கணக்கீடு, பத்தி இணைக்கப்பட்டுள்ளது)

அதிகார வரம்பை மீறி கட்டட உரிமம் வழங்கியமைக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

| தலைப்பு | வைப்புத் தொகை | சி.எம்.டி.ஏ கட்டணம் | கட்டிட உரிமக் கட்டணம் | அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு கட்டணம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) | | | | |
| வசூல் செய்ய வேண்டியது | 1.96 | 0.93 | 3.49 | 12.22 | 18.60 |
| வசூல் செய்யதது | 1.58 | 0.62 | 2.09 | 1.13 | 6.42 |
| குறைவு வசூல் | 0.38 | 0.31 | 0.40 | 11.09 | 12.18 |

<u>பெறப்பட்ட பதிலுரை</u>:

சட்டமன்றத்தின் முன் வைப்பதற்காக தேர்வு செய்யப்பட்ட தணிக்கைத் தடைகள் சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை இயக்குநர் கடிதம் எண்.12801 / நத4 / 2019 ன் வழி தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இதற்கு பதிலேதும் பெறப்படவில்லை.

**1.11.2 பெருநகர சென்னை மாநகராட்சி 2016–17 தணிக்கை – மண்டலம் 11 – வளசரவாக்கம் – கட்டட உரிமக் கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டது. தொகை ரூ.7.38 இலட்சம் உரிய நபரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும்.**

**பத்தி எண்.29/2016–17**

| | | |
|---|---|---|
| கட்டட/திட்ட அனுமதி எண் மற்றும் நாள் | – | WDCN11/PPA/04420/2016<br>நாள்.29/09/2016 |
| உரிமதாரர் பெயர் மற்றும் முகவரி | – | திருமதி.கே.லதா<br>பி.எண்.403, அஷ்டலஷ்மி நகர்,<br>2வது மெயின்ரோடு, சென்னை–95 |

வளசரவாக்கம் மண்டலத்தின் 2016–17 ஆம் ஆண்டு கட்டட உரிமம் தணிக்கையில் மேற்கண்ட முகவரியில் உள்ள மனைக்கு கட்டட உரிமம் வழங்கும் போது அதன் உரிமையாளர்டமிருந்து மனையின் வழிகாட்டு மதிப்பில் (Guide line value) ஒரு சதுர அடிக்கு ரூ.3500/– வீதம் திறந்த வெளிக்கட்டணம் வசூலிப்பதற்கு பதிலாக ரூ.1100/– வீதம் மட்டுமே வசூலிக்கப்பட்டதால் கீழ்காணும் விவரப்படி மாநகராட்சிக்கு ரூ.7.38 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது.

வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை

திறந்த வெளி கட்டணம் வசூலிக்கப்பட வேண்டியது

| | | |
|---|---|---|
| (292.19x 10.76x10% x 3500) | = | ரூ.11.02 இலட்சம் |
| ஏற்கனவே வசூலிக்கப்பட்டது | | |
| (330x1100)=(363000+1000) | = | ரூ.3.64 இலட்சம் |
| **நிலுவை வசூலிக்கப்பட வேண்டியது** | = | **ரூ.7.38 இலட்சம்** |

மேற்கண்டவாறு குறைவாக வசூலிக்கப்பட்ட திறந்தவெளி கட்டணத் தொகை ரூ.7.38 இலட்சம் உரிய நபரிடமிருந்து வசூலிக்கப்படவேண்டும்.

<u>பெறப்பட்ட பதிலுரை:–</u>

தணிக்கைத் தடையில் குறிப்பிட்டுள்ள தொகை ரூ.7.38 இலட்சம் 14.02.2019 அன்று பாங்க் ஆப் இந்தியா வங்கி வரைவோலை எண்.457366, நாள்.13.02.2019 மூலம் செலுத்தப்பட்டுள்ளதாக பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டல அலுவலர்–11, கடிதம் ந.க.எண்.சி6/2223/2019, நாள்.25.02.2019ல் தெரிவிக்கப்பட்டது. உரிய தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

**1.11.3 2016-17ஆம் ஆண்டு மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு நகர்புற புனரமைப்புத் திட்டம் – ஓட்டேரி நல்லா நீர்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி – மன்ற தீர்மானத்தின்படி அனுமதி மறுக்கப்பட்ட விலையேற்ற விகிதாச்சார உயர்வு (Price Escalation) அனுமதித்தது இழப்பு ரூ.13.17 இலட்சம் – (பத்தி எண்.11, மழைநீர் வடிகால் துறை) /2016–17**

ஜவஹர்லால் நேரு நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஓட்டேரி நல்லா நீர்பிடிப்பு பகுதியில் புனரமைப்பு பணியினை, M/s.Neev Infrastructure (P) Ltd என்ற நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு ரூ.67.74 கோடிக்கு ஒப்பந்தம் போடப்பட்டது. ஒப்பந்த நாள்.02.11.2010, ஒப்பந்தத்தின்படி பணி முடிக்க வேண்டிய நாள்.23.12.2012.

அதற்குள் பணி முடிக்கப்படாமையினால், மன்ற தீர்மானத்தின்படி 23.06.2013, 23.12.2013, 23.03.2014, 30.06.2014 மற்றும் 31.08.2014 வரை காலநீட்டிப்பு செய்யப்பட்டு 30.08.2014ல் பணி முடிவுற்றுள்ளது.

24.03.2014 முதல் 30.06.2014 வரை மன்ற தீர்மானம் எண். 299/2014ன்படி பணி காலநீட்டிப்பு செய்யும் போது வேலை விகிதாச்சரம் (Escalation Charges) உயர்வு கண்டிப்பாக வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குமாறாக 2016–17ஆம் ஆண்டில் செலவுச் சீட்டு எண்.18585/30.11.2016 வழங்கப்பட்ட இறுதி பட்டியலில் மேற்கண்ட காலத்திற்குரிய வேலை விகிதாச்சார உயர்வு தொகை ரூ.13.17 இலட்சம் கணக்கிட்டு வழங்கப்பட்டுள்ளது. இதனால் ரூ.13.17 இலட்சம் மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது.

<u>பெறப்பட்ட பதிலுரை</u> :-

பொது நடவடிக்கை சீட்டு எண்.2/ GJV /00000/165/05/2019-20 ன் வழி ரூ.13.17 இலட்சம் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய நிறுத்தி வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்யப்பட்டுள்ளது.

**1.11.4 பெருநகர சென்னை மாநகராட்சி 2016–17 தணிக்கை – மண்டலம் 7 அம்பத்தூர்– வணிக கட்டடத்திற்கு நிர்ணயம் செய்ய வேண்டிய சொத்துவரியை விட குறைவாக நிர்ணயம் செய்ததால் மாநகராட்சிக்கு ஆண்டுக்கு ரூ.5.20 இலட்சம் தொடர் இழப்பு – குறைபாடு நிவர்த்திக்கப்பட வேண்டும்.**

**பத்தி எண்.23/2016–17**

பெருநகர சென்னை மாநகராட்சி அம்பத்தூர் மண்டலத்தில் (7) திரு.Y.பொன்னுதுரை என்பவருக்கு சொந்தமான 47,958 சதுரடி பரப்பளவுள்ள (Non Residential) வணிக கட்டடம் 01.04.2016–ல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்திற்கு 2016–17 ஆம் ஆண்டில் கீழ்காணுமாறு ஒரு அரையாண்டிற்கு ரூ.3,77,396/–ஐ சொத்துவரியாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

**சொத்துவரி விதிப்பு எண். 07–088–07481–000**

**வணிகம் – நிரந்தர கட்டடம் (Permanent)**

1. ஆண்டு வாடகை மதிப்பு (47208x2.75x3x12) – ரூ.46,73,592
2. மனையின் மதிப்பு (1/3) – ரூ.15,57,864
3. கட்டடத்தின் மதிப்பு (1 – 2) – ரூ.31,15,728
4. கட்டடத்தின் மதிப்பில் பராமரிப்பிற்காக 10% – ரூ. 3,11,573
5. ஆண்டு வாடகை மதிப்பு (1 – 4) – ரூ.43,62,019
6. அரையாண்டு சொத்துவரி (ஆண்டு வாடகை மதிப்பில் 8.55%) – ரூ.3,72,952

**வணிகம் – பகுதி நிரந்தரம் (Semi Permanent)**

1. ஆண்டு வாடகை மதிப்பு (750x2.75x3x12) – ரூ.74,250
2. மனையின் மதிப்பு (1/3) – ரூ.24,750
3. கட்டடத்தின் மதிப்பு (1 – 2) – ரூ.49,500

4. கட்டடத்தின் மதிப்பில் பராமரிப்பிற்காக 10% – ரூ. 4,950
5. ஆண்டு வாடகை மதிப்பு (1 – 4) – ரூ.69,300
6. தள்ளுபடி 25% – ரூ.17,325
7. நிகர ஆண்டு மதிப்பு (5 – 6) – ரூ.51,975
8. அரையாண்டு சொத்துவரி (ஆண்டு வாடகை மதிப்பில் 8.55%) – ரூ. 4444

**நிர்ணயிக்கப்பட வேண்டிய மொத்த சொத்துவரி = ரூ.372952 + ரூ.4444 = ரூ.3,77,396/–**

ஆனால் மேற்படி கணக்கீட்டிற்கு மாறாக மொத்த சொத்துவரியாக ஒரு அரையாண்டிற்கு ரூ.1,17,291/– மட்டுமே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் கீழ்காணுமாறு ஓராண்டிற்கு ரூ.5,20,210/– தொடர் இழப்பு ஏற்படுகிறது.

1. விதிக்கப்பட வேண்டிய மொத்த சொத்துவரி (372952 + 4444) – ரூ.3,77,396/–
2. விதிக்கப்பட்ட சொத்துவரி – ரூ.1,17,291
3. ஒரு அரையாண்டிற்கு இழப்பு – ரூ.2,60,105
4. ஓராண்டிற்கு இழப்பு (260105 x 2) – ரூ.5,20,210/–

மேற்படி குறைபாடு சரி செய்யப்பட்டு அதாவது கேட்பு மாற்றியமைக்கப்பட்டு 2016–17ஆம் ஆண்டிற்கான இழப்புத் தொகை ரூ.5.20 இலட்சம் உரிமையாளரிடம் வசூலிக்கப்பட வேண்டும்.

<u>பெறப்பட்ட பதிலுரை</u> :-

தணிக்கை பத்தியில் தெரிவித்துள்ளவாறு வரி விதிப்பு எண்.07–088–07481–000க்கு புதிதாக வரி நிர்ணயிக்கப்பட்டதில் Non Residential Rateக்கு பதிலாக Residential Rate ல் தவறாக வரி நிர்ணயம் செய்யப்பட்டதாக தெரிவித்து அதை சரிசெய்ய சுட்டிக்காட்டப்பட்டுள்ளதற்கிணங்க தற்போது வணிக பகுதிக்கான வரியாக 1/2016–17 முதல் அரையாண்டு வரியாக ரூ.3,77,400/– என நிர்ணயம் செய்யப்பட்டு 11/2017–18 வரை ரூ.10,40,436/– (2,60,109*4) வசூலிக்கப்பட்டு

இணைக்கப்பட்டுள்ளது. எனவே இப்பதிலினை ஏற்று இப்பத்தியினை நீக்கம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

<u>குறிப்புரை</u> :-

தொகை ரூ.10,40,420/– இழப்பு வசூலிக்கப்பட்டுள்ளது.

**1.11.5 பெருநகர சென்னை மாநகராட்சி 2016–17 தணிக்கை – டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்திற்காக பெறப்பட்ட மான்யத் தொகையில் ஈட்டப்பட்ட வங்கி வட்டி தொகை ரூ.729.39 இலட்சம் மற்றும் முந்தைய ஆண்டுகளுக்குரிய செலவிடப்படாத மானியத் தொகை மொத்தம் ரூ.2733.64 இலட்சம் அரசுக்கு திருப்பிச் செலுத்தப்படாதது – குறைபாடு மற்றும் நடப்பு நாளில் கணக்கில் உள்ள இறுதியிருப்பு விவரம்**

**பத்தி எண்.17 அ மற்றும் 18 (மாவட்ட குடும்ப நலத்துறை ) /2016–17**

அரசாணை எண்.184/சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள்.11.09.2006–ன் படி வறுமைக்கோட்டிற்கு கீழ்வாழும் கருவுற்ற தாய்மார்களுக்கு முதல் இரண்டு பிரசவங்களுக்கு தலா ரூ.6000/– வீதம் நிதியுதவி வழங்கப்பட்டது. பின்பு அரசாணை எண்.276/ சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள்.03.11.2011–ன் படி மேற்படி நிதியுதவி 01.06.2011 முதல் ரூ.12,000/– என உயர்த்தி வழங்கப்படுகிறது.

இதில் முதல் தவணையாக ரூ.4,000/–ம் கருவுற்ற 7–வது மாதத்திலும் இரண்டாவது தவணையாக ரூ.4,000/–ம் பிரசவத்தின் போதும் இறுதி தவணையாக ரூ.4000/–ம் தடுப்பூசிகள் போடப்பட்ட பின்னரும் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2016–17 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.3730.52 இலட்சம் அரசிடமிருந்து பெறப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சேமிப்பு கணக்கு எண்.3535–ல் செலுத்தப்பட்டுள்ளது. பின்பு இத்தொகை மண்டல மருத்துவ அலுவலர்களுக்கு பிரித்தளிக்கப்பட்டு அவர்கள் மூலம் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

அரசிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் மானியத் தொகை மண்டலங்களுக்கு பிரித்தளிக்கப்பட்டவுடன், முழுத்தொகையும் அதன் நோக்கத்திற்காக முழுமையாக செலவிடப்பட்டதாக கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன.

மண்டல மருத்துவ அலுவலரால் பராமரிக்கப்படும் வங்கி கணக்கிலிருந்து அந்தந்த நிதியாண்டில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை போக எஞ்சிய மான்யத் தொகையில் பயன்படுத்த அவசியமில்லாத 2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டுகளுக்கான தொகை அந்தந்த வங்கி கணக்கிலேயே இருப்பாக உள்ளது. இந்த தொகை அரசுக்கு திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. இதனால் 31.03.2017 அன்று பயன்படுத்த இயலாத அல்லது அவசியமில்லாத முந்தைய ஆண்டுகளுக்குரிய தொகையாக மொத்தம் ரூ.2733.64 இலட்சம் வங்கி கணக்கில் இருப்பாக உள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியுடன் 2011 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்ட காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட பகுதிகளின் பயனாளிகளுக்கான 2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டுகளுக்குரிய மானிய தொகை அந்தந்த மாவட்ட பொது

சுகாதாரப் பணிகள் துறையின் துணை இயக்குநர் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டதால் சென்னை பெருநகர மாநகராட்சி மூலம் மீண்டும் வழங்கும் நிலை எழவில்லை. எனவே இம்மாவட்ட பகுதிகளுக்கான தொகை இதர மண்டலங்களுக்கு பிரித்தளிக்கப்பட்டுள்ளது. இவைகள் குறித்த முழு விவரம் தொடர்புடைய பத்தியில் அளிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி வட்டித் தொகை மற்றும் தேவைப்படாத நிலுவை மான்யம் இரண்டும் தனித்தனியே உரிய அரசு தலைப்பில் திருப்பிச் செலுத்தி விவரம் தணிக்கைக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

தற்போதைய நிலை குறித்து சம்பந்தப்பட்ட வங்கிப்புத்தகங்களை சரிபார்த்தலில் பின்வரும் விவரத்தின்படி வட்டியுடன் கூடிய மொத்த தொகை ரூ.5158.27 இலட்சம் பயன்படுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது காணப்பட்டது. இத்தொகை 2017–18ஆம் ஆண்டு பெறப்பட்ட வட்டி மற்றும் 2017–18ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட மான்யத்தில் பயன்படுத்திய மான்யம் போகவுள்ள மீதமுள்ள தொகையினை அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

| வ. எண் | மண்டலம் | IOB வங்கியின் சேமிப்புக் கணக்கு எண். | 2011–12 முதல் 2016–17 வரை ஈட்டப்பட்ட வட்டி தொகை ரூ. | 31.03.2017 அன்றுள்ளபடி தொகை ரூ. | தற்போது வங்கியில் உள்ள தொகை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தேதி | தொகை ரூ. |
| 1 | தலைமையகம் | 3535 | 20718265 | 51685494 | 01.03.19 | 132126322 |
| 2 | மருத்துவ மண்டலம்–1 | 30000 | 1272585 | 6320325 | 18.02.19 | 23952168 |
| 3 | மண்டலம்–2 (மணலி) | 5600 | 670554 | 342328 | 28.02.19 | 4000498 |
| 4 | மருத்துவ மண்டலம்–3 | 5694 | 723322 | 4739301 | 04.02.19 | 13479881 |
| 5 | மருத்துவ மண்டலம்–4 | 0099 | 11233981 | 53605493 | 28.02.19 | 88170163 |
| 6 | மருத்துவ மண்டலம்–5 | 2406 | 5269554 | 32310872 | 02.02.19 | 33450109 |
| 7 | மருத்துவ மண்டலம்–6 | 3335 | 5078531 | 28141377 | 28.02.19 | 58896536 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | மருத்துவ மண்டலம்–7 | 5561 | 1626079 | 3712795 | 28.02.19 | 21408530 |
| 9 | மருத்துவ மண்டலம்–8 | 4358 | 4990356 | 22971816 | 27.02.19 | 32657182 |
| 10 | மருத்துவ மண்டலம்–9 | 7371 | 6812238 | 25992760 | 27.02.19 | 36802362 |
| 11 | மருத்துவ மண்டலம்–10 | 0961 | 5864502 | 18043580 | 13.02.19 | 15513938 |
| 12 | மருத்துவ மண்டலம்–11 (வளசரவாக்கம்) | 6922 | 1774271 | 917243 | 22.02.19 | 3538982 |
| 13 | மருத்துவ மண்டலம்–12 | 6611 | 1038064 | 3363750 | 31.12.18 | 8639077 |
| 14 | மருத்துவ மண்டலம்–13 | 9302 | 4288520 | 20408358 | 01.03.19 | 32104025 |
| 15 | மருத்துவ மண்டலம்–14 (பெருங்குடி) | 7425 | 790923 | 403403 | 18.02.19 | 2713003 |
| 16 | மருத்துவ மண்டலம்–15 (சோழிங்கநல்லூர்) | 1013 | 787219 | 405644 | 12.06.18 | 8374975 |
| | **மொத்தம்** | | **72938964** | **273364539** | | **515827751** |

<u>பெறப்பட்ட பதிலுரை</u>

இவ்வலுவலக ந.க.எண்.012801 / நத4 / 16.05.2019 ன் வழி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. பதிலேதும் பெறப்படவில்லை.

## 2. இதர மாநகராட்சிகள்
## (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர்த்து)

**2.1** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பன்னிரெண்டாவது அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள 18 பணிகளில் மாநகராட்சிகளுக்கு 17 பணிகள் மாநில அரசால் பகிர்வு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் சென்னை தவிர்த்து கீழ்காணும் 11 மாநகராட்சிகள் செயல்படுகின்றன.

| வ. எண் | மாநகராட்சி | சட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|
| 1 | மதுரை | 1971 |
| 2 | கோயம்புத்தூர் | 1981 |
| 3 | திருச்சிராப்பள்ளி | 1994 |
| 4 | சேலம் | 1994 |
| 5 | திருநெல்வேலி | 1994 |
| 6 | ஈரோடு | 2008 |
| 7 | திருப்பூர் | 2008 |
| 8 | வேலூர் | 2008 |
| 9 | தூத்துக்குடி | 2008 |
| 10 | தஞ்சாவூர் | 2013 |
| 11 | திண்டுக்கல் | 2013 |

**2.2** 11 மாநகராட்சிகள் அவைகளுக்கென உருவாக்கப்பட்ட மேற்படி சட்டத்தின் அடிப்படையில் இயங்குகின்றன. இவைகளின் மொத்த பரப்பளவு 1193.35 ச.கி மொத்த மக்கள் தொகை 80,64,605. இதில் ஆண் 40,39,514 பெண் 40,25,091 ஆகும். மாநகராட்சிகளில் வசிக்கும் மக்களின் கல்வியறிவு 82.33 விழுக்காடாகும். மேற்படி 11 மாநகராட்சிகளில் மொத்தம் 19,40,451 எண்ணிக்கையிலான சொத்துவரி இனங்கள் உள்ளன. மேற்படி சொத்துகளில் மொத்தம் 10,86,431 எண்ணிக்கையிலான இனங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. வரி வருவாய் இனங்களின் மொத்த கேட்புத் தொகை ரூ53184.84 இலட்சங்களாகும். 11 மாநகராட்சிகளின் 31.03.2017 அன்றைய நிலையில் மொத்த கடன் நிலுவைத்தொகை ரூ.142513.55 இலட்சங்களாகும். 2016–17 ஆம் ஆண்டின் இறுதியில் வசூலிக்கப்பட வேண்டிய வருவாய் இனங்கள் நிலுவை மொத்தம்

ரூ.124624,53 இலட்சங்களாகும். நடப்பாண்டின் மொத்த தணிக்கை கட்டணம் ரூ.399.52 இலட்சங்களாகும். மாநகராட்சிகள் தங்களது ஆண்டுக் கணக்குகளை நிதியாண்டு முடிந்து மூன்று மாதங்களுக்குள் இறுதி செய்ய வேண்டும். தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கைச் சட்டம் 2014 பிரிவு 4,6 மற்றும் 15 விதிகள்2016 (10)–ன் படி மேற்படி கணக்குகள் மீதான தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தணிக்கை அறிக்கை வெளியிடப்படுகிறது.



119-3—6a

| வ. எண் | மாநகராட்சி | சட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு | பரப்பளவு (ச.கி) | மக்கள் தொகை | | கல்வி அறிவு (%) | சொத்துவரி | | குடிநீர் இணைப்பு | | அம்மா உணவகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண் | பெண் | | எண்ணிக்கை | கேட்பு | எண்ணிக்கை | கேட்பு | |
| 1 | மதுரை | 1971 | 147.99 | 7,35,598 | 7,33,401 | 56.60 | 197104 | 20465,94 | 80734 | 2101.86 | 12 |
| 2 | கோயம்புத்தூர் | 1981 | 257.04 | 7,94,063 | 7,90,656 | 91.30 | 477821 | 15757.76 | 298735 | 3938.40 | 12 |
| 3 | திருச்சிராப்பள்ளி | 1994 | 167.23 | 5,14,317 | 5,08,183 | 91.38 | 206516 | 3298.56 | 109769 | 4264.64 | 11 |
| 4 | சேலம் | 1994 | 91.34 | 4,17,317 | 4,11,950 | 76.37 | 201107 | 3093.05 | 99159 | 2263.92 | 11 |
| 5 | திருநெல்வேலி | 1994 | 108.65 | 2,34,639 | 2.40,195 | 81.49 | 159436 | 2433.12 | 75276 | 932.54 | 10 |
| 6 | ஈரோடு | 2008 | 110.00 | 2,49,906 | 2,48,563 | 76.42 | 134336 | 908.23 | 77001 | 480.00 | 11 |
| 7 | திருப்பூர் | 2008 | 159.35 | 4,47,931 | 4,31,129 | 84.53 | 225402 | 4569.99 | 180477 | 1404.15 | 11 |
| 8 | வேலூர் | 2008 | 87.94 | 2,47,002 | 2,57,077 | 86.40 | 107964 | 1612.65 | 60825 | 302.35 | 10 |
| 9 | தூத்துக்குடி | 2008 | 13.47 | 1,86,515 | 1,85,893 | 86.00 | 143152 | 1486.16 | 48482 | 1177.80 | 10 |
| 10 | தஞ்சாவூர் | 2013 | 36.33 | 1,09,199 | 1,13,744 | 91.27 | 44342 | 894.20 | 28509 | 259.24 | 2 |
| 11 | திண்டுக்கல் | 2013 | 14.01 | 1,03,027 | 1,04,300 | 83.89 | 43271 | 835.72 | 27464 | 170.58 | 2 |
| | மொத்தம் | | 1193.35 | 40,39,514 | 40,25,091 | 82.33 | 1940451 | 33981.21 | 1086431 | 16815.48 | 102 |

**2.3** மாநகராட்சிகளில் வருவாய் (ம) மூலதனம், குடிநீர் மற்றும் ஆரம்ப கல்வி என மூன்று வகையான கணக்குகள் உள்ளன. மேற்படி கணக்குகள் "மத்திய வலைதள அடிப்படையிலான மென்பொருள்" (Centralised web based software) என்ற வழிமுறை மூலமாக 11.09.2015 முதல் படிப்படியாக அனைத்து மாநகராட்சிகளிலும் பராமரிக்கப்படுகின்றன. இந்த மூன்று கணக்குகளின் தொகுப்பு (அ) சுருக்கம் கீழ்காணுமாறு:

**2016–17 ஆம் ஆண்டில் பதினொன்று மாநகராட்சிகளின் வரவு செலவு**

வரவினம்

| வ. எண் | வரவின விவரம் | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சொத்துவரி | 44257.25 |
| 2 | இதர வரியினங்கள் | 8927.59 |
| 3 | ஒதுக்கப்பட்ட வருவாய் | 22068.30 |
| 4 | பகிர்மான நிதி | 53287.15 |
| 5 | கட்டணங்கள் | 28163.53 |
| 6 | மானியம் | 12829.05 |
| 7 | விற்பனை மற்றும் வாடகை | 1773.72 |
| 8 | இதர வரவு | 32669.80 |
| 9 | பற்றாக்குறை | 38722.99 |
| | **மொத்தம்** | **242699.38** |

**செலவினம்**

| வ. எண் | செலவின விவரம் | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஊதியம் | 57994.05 |
| 2 | இதர ஊதியம் | 6619.28 |
| 3 | ஓய்வூதியம் | 23715.59 |
| 4 | இயக்கச் செலவுகள் | 36207.30 |

| | | |
|---|---|---|
| 5 | பழுது மற்றும் பராமரிப்பு | 21033.17 |
| 6 | திட்டச் செலவுகள் | 3836.72 |
| 7 | நிர்வாகச் செலவுகள் | 16147.54 |
| 8 | நிதிச் செலவுகள் | 15757.19 |
| 9 | இதர செலவினம் | 2433.91 |
| 10 | தேய்மானம் | 58954.63 |
| | மொத்தம் | 242699.38 |

## சொத்துக்கள்

| வ. எண் | சொத்து விவரம் | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நிலையான சொத்துக்கள் | 1157564.01 |
| 2 | ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு | 67875.97 |
| 3 | இருப்பு | 7976.82 |
| 4 | வரி மற்றும் கட்டணங்கள் மற்றும் இதர வர வேண்டியவைகள் | 124624.53 |
| 5 | பணியாளர் முன்பணங்கள் | 3524.38 |
| 6 | இதர முன்பணங்கள் | 136536.47 |
| 7 | முதலீடு மற்றும் வட்டி | 54801.72 |
| | மொத்தம் | 1552903.90 |

## பொறுப்புகள்

| வ. எண் | பொறுப்பு விவரம் | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அரசு பங்கு | 478586.49 |
| 2 | கடன்கள் | 142513.55 |
| 3 | கடன்கள் மீதான வட்டி | 4270.23 |
| 4 | செலுத்தபட வேண்டிய சம்பள பிடித்தம் | 9353.78 |
| 5 | செலுத்தபட வேண்டியவை | 111071.76 |

| | | |
|---|---|---|
| 6 | வைப்புத் தொகை | 60679.38 |
| 7 | பிடித்தம் செய்யப்பட்ட வரி இனங்கள் செலுத்தப்பட வேண்டியது | 23511.32 |
| 8 | இதர பொறுப்புகள் | 100221.33 |
| 9 | இதர வங்கி இருப்பு | 1180.46 |
| 10 | திரண்ட தேய்மானம் | 332816.85 |
| 11 | திரண்ட உபரி | 288698.75 |
| | மொத்தம் | 1552903.90 |

**2.4** 2016–17 ஆம் ஆண்டிற்கான தணிக்கை மேற்படி 11 மாநகராட்சிகளில் மேற்கொண்ட போது, கண்டறியப்பட்ட குறைபாடுகளில் ஒரு சிலவற்றை மட்டும் 2014 ஆம் வருட உள்ளாட்சி நிதி தணிக்கைச் சட்டப் பிரிவு 20ன் படி அரசின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு பின்வருமாறு மாநகராட்சி வாரியாக தொகுத்து அளிக்கப்படுகிறது.

**2.4.1 வேலூர் மாநகராட்சி 2016–17 தணிக்கை – 14 குடியிருப்பு மற்றும் வணிக கட்டிடங்களுக்கு – சொத்துவரி மிக குறைவாக நிர்ணயம் செய்து மாநகராட்சிக்கு சொத்துவரி வருவாயில் ரூ.34.45 இலட்சம் தொடர் இழப்பு ஏற்படுத்தியது – கடுங்குறைபாடு – இழப்பினை வசூல் அல்லது பிடித்தம் செய்ய வேண்டும்.**

**பத்தி எண். 15/2016–17**

வேலூர் மாநகராட்சியின் 4 மண்டலங்களில் 2016–17 ஆம் ஆண்டுக்கான புதைவடிகால் இணைப்புக்கான விண்ணப்பம், கோப்பு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட சொத்துவரிக்கான கேட்பு வசூல் ரசீது, ஆகியவை ஒப்பிட்டு சரிப்பார்த்ததில் கீழ்காணும் குறைபாடுகள் மற்றும் சொத்துவரி வருவாய் இழப்பு காணப்பட்டன. மாநகராட்சி செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு செய்து அளிக்கப்பட்ட புதைவடிகால் அனுமதி ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள குடியிருப்பு மற்றும் வணிக கட்டங்களுக்கான பரப்பளவுகளை, சொத்துவரியுடன் ஒப்பிட்டு சரிப்பார்த்ததில், 14 கட்டடங்களின் உண்மை பரப்பளவுகளில் பெருமளவு வேறுபாடு காணப்படுகிறது. இதனால் சொத்துவரி மிக குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்த விவரம் 14 இனங்களுக்கும் தொடர்புடைய பத்தியில் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரப்பளவு வேறுபாடுகளினால் வேலூர் மாநகராட்சிக்கு 2015–16 இரண்டாம் அரையாண்டு முதல் 2017–18 இரண்டாம் அரையாண்டு வரை ஐந்து அரையாண்டுகளுக்கு சொத்துவரி வருவாயில் ரூ.34.45 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. இவ்விழப்பினை உரிய கட்டட உரிமையாளரிடமிருந்து பிடித்தம் செய்யப்படவேண்டும். தவறும்பட்சத்தில் உரிய அலுவலரிடமிருந்து பிடித்தம் செய்யப்படவேண்டும். மேலும் பத்தியில் தெரிவிக்கப்பட்ட 14 கட்டடங்களுக்கு உரியவாறு சொத்துவரி கணக்கீட்டு சரியான சொத்துவரி கேட்பினை எழுப்பி, அதன் விவரத்தை தணிக்கைக்கு அளிக்க வேண்டும்.

பத்தியில் தெரிவிக்கப்பட்ட 14 கட்டடங்களுக்கான கட்டட உரிமத்தில் மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்ட அளவுகளை காட்டிலும், கூடுதலாக கட்டப்பட்ட அளவுகளை உரியவாறு சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டு அகற்றிட வேண்டும்

**பெறப்பட்ட பதிலுரை:**

இவ்வலுவலக ந.க.எண்.12801 / நத4/ 16.05.2019 ன் வழி தெரிவிக்கப்பட்டது. 14 கட்டிடங்களுக்கு சொத்துவரி உரிய திருத்தம் மேற்கொள்ளப்படும் என்ற இடைக்கால பதில் அளிக்கப்பட்டுள்ளது.

**2.4.2) வேலூர் மாநகராட்சி 2016–17 தணிக்கை – அனுமதிக்கப்பட்ட ஓய்வூதிய தொகையை விட கூடுதலாக ஓய்வூதியம் வழங்கியது மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கான உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் (Enhanced Family Pension) அதற்கான காலம் முடிவடைந்தவுடன் மாற்றியமைக்கப்படாமல் தொடர்ந்து அதிகமாக வழங்கி வருவதால் இழப்பு ரூ.11.62 இலட்சம்.**

**பத்தி எண்.33/2016–17**

வேலூர் மாநகராட்சியின் 2016–17 ஓய்வூதிய தணிக்கையின்போது அனுமதிக்கப்பட்ட ஓய்வூதிய தொகையைவிட கூடுதலான ஓய்வூதியம் வழங்கி வருவது மற்றும் குறிப்பிட்ட காலத்திற்கான உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் (Enhanced Family Pension) அதற்கான காலம் முடிவடைந்தவுடன் (Upto 7 years or 65 years of age whichever is earlier) மாற்றியமைக்கப்படாமல் தொடர்ந்து அதிகமாக வழங்கி வருவது போன்ற குறைபாடுகள் காணப்பட்டது. அதன் விவரம் தொடர்புடைய பத்தியில் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி குறைபாடுகளினால் தணிக்கை நடைபெற்ற 30.09.2017 முடிய மொத்தம் ரூ.11.62 இலட்சம் மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. பத்தியில் சுட்டிக்காட்டிய 19 நபர்களின் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் தடையில் குறிப்பிட்டவாறு உடன் மாற்றியமைக்கப்பட்டு மேற்படி இழப்பு தொகை

ரூ.11.62 இலட்சத்துடன் மாற்றியமைக்கப்படும் நாள் வரை வழங்கப்பட்ட கூடுதல் தொகையும் தொடர்புடைய நபர்களிடம் பிடித்தம் செய்யப்படவேண்டும்.

பெறப்பட்ட பதிலுரை:

இவ்வலுவலக ந.க.எண்.12801 / நத4/ 16.05.2019 ன் வழி தெரிவிக்கப்பட்டது. இதற்கான தொகையினை பிடித்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற இடைக்கால பதில் அளிக்கப்பட்டுள்ளது

**2.4.3) வேலூர் மாநகராட்சி 2016–17 தணிக்கை – குடிநீர் நிதி – புதிய குடிநீர் இணைப்பின் போது உயர்த்தப்பட்ட சாலை சீரமைப்பு (Enhanced Road Restoration Charge) கட்டணம் வசூலிக்காதது, இணைக்கப்பட்ட பகுதிகளில் மாநகராட்சிக்கான மாதாந்திர குடிநீர் கட்டணம் ரூ.50/– என்பதை வசூலிக்காமல் ரூ.30/– வீதம் வசூலித்தது, சிறப்பு வணிக நிறுவனங்களிடம் (Commercial Special) பாதாள சாக்கடை இணைப்புக்கான முன்வைப்புத்தொகை (Deposit) மற்றும் மாதாந்திர சேவைக் கட்டணம் இரண்டும் குறைவாக வசூலித்தது போன்ற குறைபாடுகளினால் மாநகராட்சிக்கு 2016–17 ஆம் ஆண்டில் மட்டும் மொத்தம் ரூ.49.72 இலட்சம் இழப்பு.**

**பத்தி எண். 11,12 மற்றும் 15 (குடிநீர் நிதி) /2016–17**

அ) அரசாணை எண்.97 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.12.07.2007 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சுற்றறிக்கை ந.க. எண்.748/2008/கு.வ.2 நாள்.21.09.2009–ன்படி நகராட்சி / மாநகராட்சிகளில் புதிய குடிநீர் இணைப்பு வழங்கும்போது கீழ்காணுமாறு சாலை சீரமைப்பு கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

| வ. எண் | சாலையின் நீளம் | வசூலிக்க வேண்டிய சாலை சீரமைப்பு கட்டயம் | | |
|---|---|---|---|---|
| | | கருங்கல் சல்லி சாலை (ரூ) | தார் சாலை (ரூ) | சிமெண்ட் சாலை (ரூ) |
| 1 | 0 – 30 மீ வரை | 1050 | 2250 | 2600 |
| 2 | 30 மீ மேல் – 90 மீ வரை | 1650 | 2850 | 3200 |

மேற்படி கட்டணம் 2009–10 முதல் நடைமுறைபடுத்துவதுடன் அதன் பின்னர் இக்கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் 5% உயர்த்தப்படவேண்டும் என்றும் மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையின் சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் வேலூர் மாநகராட்சியில் 2016–17–ல் வழங்கப்பட்ட



119 3 7

புதிய குடிநீர் இணைப்புகளுக்கு உயர்த்தப்பட்ட கட்டணத்தை வசூலிக்காமல் 2009—10 ஆம் ஆண்டில் நிர்ணயித்த அடிப்படை கட்டணத்தை மட்டுமே வசூலித்த விவரம் தணிக்கையில் கண்டறியப்பட்டது. இதனால் 2016—17 ஆம் ஆண்டில் ரூ.5.96 இலட்சம் மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இழப்பு குறித்த கணக்கீடு, தொடர்புடைய பத்தியில் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளது.

ஆ) வேலூர் மாநகராட்சியில் மாதாந்திர குடிநீர் விநியோக கட்டணம் ரூ.50/— வீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை எண்.1581/2002/உ1/நாள்.25.03.2002—ன் படி மாநகராட்சி / நகராட்சியுடன் இணைக்கப்படும் பகுதிகளிலிலும் ரூ.50/— வீதம் மாதாந்திர குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். ஆனால் வேலூர் மாநகராட்சியுடன் 28.10.2011 முதல் இணைக்கப்பட்ட ஊராட்சி பகுதிகளில் ரூ.30/— வீதம் மட்டுமே நாளது தேதி வரையில் மாதாந்திர குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதனால் மாநகராட்சிக்கு 2016—17 ஆம் ஆண்டில் மட்டும் ரூ.33.70 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. இழப்பு குறித்த விவரம் தொடர்புடைய பத்தியில் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளது.

இ) வேலூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.1043 நாள்.26.02.2010—ன் படி சிறப்பு வணிக கட்டடங்களுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கும் போது கீழ்காணுமாறு முன்வைப்புத்தொகையும் மாதாந்திர சேவை கட்டணமும் வசூலிக்க வேண்டும்.

கட்டடத்தின்தன்மை — வணிகம் — சிறப்பு (Commercial – Special)

வசூலிக்க வேண்டிய முன்வைப்புத்தொகை — ரூ.1,00,000/—

மாதாந்திர சேவைக் கட்டணம் — ரூ.1,000/—

மேற்படி கட்டண விவரம் துணை விதிகளில் சேர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. 2016—17 தணிக்கையில் பாதாள சாக்கடை இணைப்பு குறித்த ஆவணங்களை சரிபார்த்தபோது, தொடர்புடைய பத்தியில் குறிப்பிடப்படும் 11 சிறப்பு வணிக கட்டங்களுக்கு (Luxury Lodges) மன்ற தீர்மானம் மற்றும் துணைவிதிகள் படி முன்வைப்புத்தொகையும் மாதாந்திர சேவை கட்டணமும் வசூலிக்காமல் குறைவான தொகை வசூலிக்கப்பட்ட விவரம் கண்டறியப்பட்டது. இதனால் 2016—17 ஆம் ஆண்டில் மாநகராட்சிக்கு ரூ.10.06 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. இழப்பு குறித்த விவரம் தொடர்புடைய பத்தியில் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளது.

சுருக்கம்

| பத்தி | தொகை (இலட்சத்தில்) |
|---|---|
| அ | 5.96 |
| ஆ | 33.70 |
| இ | 10.06 |
| மொத்தம் | 49.72 |

பத்தியில் குறிப்பிட்டுள்ள இழப்புத் தொகை ரூ.49.72 இலட்சம் வசூலிக்கப்பட வேண்டும்.

பெறப்பட்ட பதிலுரை

இவ்வலுவலக ந.க.எண்.12801 / நத4/ 16.05.2019 ன் வழி தெரிவிக்கப்பட்டது. இதற்கான தொகையினை பிடித்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற இடைக்கால பதில் அளிக்கப்பட்டுள்ளது.

**2.4.4) சேலம் மாநகராட்சி 2016–17 தணிக்கை – முடிவுற்ற திட்டங்களின் வங்கி கணக்கில் உள்ள இருப்புத் தொகை ரூ.132.74 இலட்சம் உரிய அரசு தலைப்பில் செலுத்தப்படல் வேண்டும் .**

பத்தி எண்.47/2016–17

(1) சேலம் மாநகராட்சி மைய அலுவலக சுகாதாரப் பிரிவில் "பொன்விழா கிராம வேலைவாய்ப்புத் திட்டத்திற்கென"13 வங்கி கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன. மேற்படி திட்டம் 2015–16 ஆம் நிதியாண்டுடன் முடிவுற்றது. ஆனால் 31.03.2017 அன்று மேற்படி 13 வங்கி கணக்குகளில் மொத்தம் ரூ.132.74 இலட்சம் இருப்பாக உள்ளது.

(2) இதில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி திட்டத்திற்கான வங்கி கணக்கில் (சிண்டிகேட் வங்கி கணக்கு எண்.629922029767) 31.03.2017 அன்று ரூ.5.48 இலட்சம் இருப்பாக உள்ளது. இத்திட்ட கணக்கு 2013–14 ஆம் ஆண்டின் இறுதியில் கருவூலக் கணக்கு துறைக்கு மாற்றப்பட்டுவிட்டது.

(3) மேலே பத்தி 1—ல் குறிப்பிட்ட திட்டம் நிறைவு பெற்றதாலும் பத்தி 2—ல் குறிப்பிட்ட திட்ட கணக்கு அரசு கருவூலத் துறைக்கு மாற்றப்பட்டுவிட்டதாலும் மேற்படி மொத்த இருப்புத் தொகை ரூ.132.74 இலட்சம் இனிமேல் செலவு ஏதும் மேற்கொள்ள இயலாது. எனவே இத்தொகையை உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

பெறப்பட்ட பதிலுரை:

இவ்வலுவலக ந.க.எண்.12801 / நத4/ 16.05.2019 ன் வழி தெரிவிக்கப்பட்டது. தணிக்கைத் தடையில் குறிப்பிடப்பட்ட தொகையினை அரசு கணக்கில் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற இடைக்கால பதில் அளிக்கப்பட்டுள்ளது.

**2.4.5) திண்டுக்கல் மாநகராட்சி 2016—17 தணிக்கை – மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக வாடகைதாரர்கள் மற்றும் இதர குத்தகைதாரர்களிடமிருந்து வாடகை / குத்தகை தொகையுடன் சேவை வரி வசூலித்து மத்திய அரசுக்கு செலுத்தப்படாததால், சேவை வரிக்கான கேட்புத்தொகையை அபராதத்துடன் மாநகராட்சியின் வங்கி கணக்கிலிருந்து மத்திய கலால் துறையின் கடிதத்தின் அடிப்படையில் வங்கியே தன்னிச்சையாக பிடித்தம் செய்தது – மாநகராட்சிக்கு இழப்பு ரூ.81.91 இலட்சம்.**

**பத்தி எண்.19 (கோப்பு எண்.6752/2010/அ9) /2016—17**

(1) மத்திய கலால் ஆணையர், மதுரை அலுவலக காரணம் காட்டும் அறிவிப்பு (Show cause notice) எண்.7/2012—ST—ல் (C.NO.V/ST/15/122/2011-ADJN நாள்.09.10.2012) 2007—08 முதல் 2010—11 முடியவுள்ள நான்கு ஆண்டுகளில் மாநகராட்சியால் வசூலிக்கப்பட்ட வாடகை / குத்தகை வருமானம் ரூ.745.10 இலட்சத்திக்கு சேவை வரியாக ரூ.81.64 இலட்சம் செலுத்தக் கோரப்பட்டுள்ளது. பின்னர் மாநகராட்சியின் கோரிக்கையை ஏற்று மேற்படி நான்கு ஆண்டுகளுக்கு செலுத்த வேண்டிய சேவை வரி ரூ.54.83 இலட்சம் என மத்திய கலால் துறையால் நிர்ணயிக்கப்பட்டது.

(2) மேலும் 2011—12 மற்றும் 2012—13 ஆண்டுகளுக்கும் முறையே ரூ.8.45 இலட்சம் மற்றும் ரூ.18.33 இலட்சம் என மொத்தம் ஆறு ஆண்டுகளுக்கும் ரூ.81.61 இலட்சம் மற்றும் மேல்வரி 0.19 இலட்சம் என மொத்தமாக ரூ.81.80 இலட்சம் செலுத்த வேண்டிய சேவை வரியாக நிர்ணயம் செய்யப்பட்டது.

(3) மேற்படி தொகை மாநகராட்சியால் செலுத்தப்படாததால் திண்டுக்கல் மத்திய கலால் உதவி ஆணையரால் கடிதம் எண் CNo IV/16/24/2014/STV நாள்.09.04.2015–ல் கேட்டுகொண்டதின் பேரில் மத்திய அரசுக்கு செலுத்த வேண்டிய சேவை வரித் தொகை ரூ.81,91,613/–ஐ மாநகராட்சியின் வங்கி கணக்கிலிருந்து பிடித்தம் செய்ய பாரத ஸ்டேட் வங்கியை கேட்டுக் கொண்டதால் இத்தொகை பிடித்தம் செய்யப்பட்டு மாநகராட்சிக்கு வங்கியால் 10.04.2015 அன்று தகவல் தெரிவிக்கப்பட்டது.

(4) வங்கி மற்றும் மத்திய கலால் துறையின் மேற்படி நடவடிக்கைக்கு எதிராக திண்டுக்கல் மாநகராட்சி சார்பாக மதுரை உயர்நீதிமன்றத்தில் 23.04.2015 அன்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது.

(5) மேற்படி சேவை வரி ரூ.81,91,613/– என்பது வாடகைதாரர் / குத்தகைதாரர்களிடமிருந்து வாடகை / குத்தகை தொகையுடன் சேர்த்து வசூலித்து மத்திய அரசுக்கு செலுத்த வேண்டியது ஆகும். (காண்க மத்திய கலால் மற்றும் சேவை வரித்துறை வெளியீட்டு எண். 12/நாள் 17.08.2012 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் 9291/2009/ஆர்2 நாள்.12.11.2012). திண்டுக்கல் மாநகராட்சி அவ்வாறு வசூலித்து செலுத்தவில்லை என்பதால், மேற்கண்டவாறு ரூ.81,91,613/– மாநகராட்சி நிதியிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. இது மாநகராட்சிக்கு ஏற்பட்ட நிதி இழப்பாகும். இத்தொகை ரூ.81,91,613/– உரிய நபர்களிடம் வசூலிக்கப்பட வேண்டும்.

பெறப்பட்ட பதிலுரை:

இவ்வலுவகை ந.க.எண்.12801 / நத4/ 16.05.2019 ன் வழி தெரிவிக்கப்பட்டது. இது குறித்த வழக்கு உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ளது என்ற இடைக்கால பதில் அளிக்கப்பட்டுள்ளது.

**2.4.6) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 2016–17 தணிக்கை – அரியமங்கலம் மற்றும் பொன்மலை கோட்டம் – புதிய பாதாள சாக்கடை திட்டம் நடைமுறைப்படுத்திய பிறகு வசூலிக்கப்பட வேண்டிய உயர்த்தப்பட்ட மாதாந்திர பராமரிப்பு / சேவைக் கட்டணம் வசூலிக்கப்படாததால் மாநகராட்சிக்கு 2016–17 ஆம் ஆண்டில் இழப்பு ரூ.283.40 இலட்சம்.**

**பத்தி எண். 36 (அரியமங்கலம் கோட்டம்), 54 (பொன்மலை கோட்டம்)/2016–17**

1) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 209 முதல் 213 முடிய மற்றும் மாமன்ற தீர்மானம் எண்.395 நாள்.29.09.1999 மாவட்ட அரசிதழ் எண்.11/2000 நாள்.27.03.2000–ன் படி வெளியிடப்பட்ட பாதாள சாக்கடை துணை விதிகளின்படி (By laws) புதிய பாதாள சாக்கடை திட்டம்

நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு கீழ்காணுமாறு உயர்த்திய மாதாந்திர பராமரிப்பு / சேவைக் கட்டணம் இணைப்பு பெற்ற நபரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும்.

| வ. எண் | வருடம் | பயன்பாடு | |
|---|---|---|---|
| | | குடியிருப்பு (ரூ) | இதர இனங்கள் (ரூ) |
| 1 | 2002–03 முதல் 2006–07 முடிய | 103/– | 196/– |
| 2 | 2007–08 முதல் 2011–12 முடிய | 136/– | 263/– |
| 3 | 2012–13 முதல் 2016–17 முடிய | 181/– | 349/– |
| 4 | 2017–18 முதல் 2021–2022 முடிய | 241/– | 465/– |

2) மேலே குறிப்பிட்ட பட்டியல்படி 2016–17 ஆம் ஆண்டில் குடியிருப்பிற்கு ரூ.181/– வீதமும் இதர இனங்களுக்கு ரூ.349/– வீதமும் சேவைக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். ஆனால் அரியமங்கலம் மற்றும் பொன்மலை கோட்டத்தில் குடியிருப்பு இனங்களுக்கு உயர்த்தப்பட்ட சேவைக் கட்டணம் வசூலிக்காமல் முந்தைய கட்டணமான ரூ.30/– வீதம் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. இதனால் ஒரு குடியிருப்பிற்கு ஒரு மாதத்திற்கு ரூ.151/– வீதம் (7927 + 7650) மொத்தம் 15,577/– குடியிருப்பிற்கு ஒராண்டுக்கு மொத்தம் ரூ.2,82,25,524/– மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

3) இதே போல் பொன்மலை கோட்டத்தில் உள்ள 30 குடியிருப்பு இல்லாத இனங்களுக்கும் உயர்த்தப்பட்ட சேவைக் கட்டணத்தை வசூலிக்காமல் மாதந்தோறும் ரூ.30/– மட்டுமே வசூலிக்கப்படுவதால் ஒரு மாதத்திற்கு ரூ.319/– வீதம் 30 இனங்களுக்கும் ஒரு வருடத்திற்கு (319x12x30) ரூ.1,14,840/–வீதம் மாநகராட்சிற்கு இழப்பு ஏற்படுகிறது.

| சுருக்கம் | இழப்பு (இலட்சத்தில்) |
|---|---|
| பத்தி 2 | 282.25 |
| பத்தி 3 | 1.15 |
| மொத்தம் | 283.40 |

புதிய பாதாள சாக்கடை இணைப்புக்கான உயர்த்தப்பட்ட சேவைக் கட்டணம் வசூலிக்கப்பட்டு மேற்படி இழப்பு ரூ.283.40 இலட்சம் தவிர்க்கப்படல் வேண்டும்.

பெறப்பட்ட பதிலுரை:

இவ்வலுவலக ந.க.எண்.12801 / நத4/ 16.05.2019 ன் வழி தெரிவிக்கப்பட்டது. தணிக்கைத்தடைக்குரிய பதிலேதும் பெறப்படவில்லை.

**2.4.7) திருப்பூர் மாநகராட்சி 2016–17 தணிக்கை – பண மதிப்பு படிவங்கள் (Money Value forms) ஒப்பந்தப்புள்ளி (Tender) ஏதும் கோராமல் அதிக விலைக்கு கொள்முதல் செய்தது மற்றும் தேவைக்கும் அதிகமாக கொள்முதல் செய்யப்பட்டதால் புதிய கணக்கு முறை (Centralised Web based Accounting System) அறிமுகப்படுத்தியதும் பழைய படிவங்கள் பயன்படுத்த இயலாமல் போனது – இழப்பு ரூ.11.37 இலட்சம்.**

**பத்தி எண். 39/2016–17**

(1) திருப்பூர் மாநகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக 2016–17 ஆம் ஆண்டில் அனைத்து வகையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள் ஈரோடு மாவட்ட பெண்கள் கூட்டுறவு அச்சகத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில் ரசீது / படிவம் 1–க்கு ரூ.2.97 வீதம் 7,00,000 ரசீதுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

(2) 2017–18 ஆம் ஆண்டு மாநகராட்சிக்கு தேவையான 1,00,000 இணையதள கணினி ரசீதுகள் தமிழ்நாடு பல்நோக்கு கூட்டுறவு சங்கத்திடமிருந்து 1 ரசீதுக்கு ரூ.1.77 வீதம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

(3) 1998 ஆம் வருட ஒளிவுமறைவில்லா ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் அதற்காக 2000 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரி அதன் அடிப்படையிலேயே ரூ.10,000/– க்கும் மேற்பட்ட தொகைக்கு கொள்முதல் செய்யப்பட வேண்டும். ஆனால் 2016–17 ஆம் ஆண்டில் இதுபோன்ற ஒப்பந்தபுள்ளி நடைமுறையை இம்மாநகராட்சி பின்பற்றாமல் நேரிடையாக கொள்முதல் செய்யாததால் 1 ரசீதுக்கு (2.97 1.77) ரூ.1.20 வீதம் 7,00,000 ரசீதுகளுக்கு ரூ.8.40 இலட்சம் மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

(4) மேலும் 2017–18 முதல் 7 இலக்க புதிய கணக்கு முறை (Centralised web based Accounting System) நடைமுறைபடுத்தப்பட்டதால், 2016–17 ஆம் ஆண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த 1,00,000 ரசீதுகள் 2017–18–ல் பயன்படுத்த இயலாமல் காலாவதியாகிவிட்டது. இதனால் இந்த 1,00,000 ரசீதுகள் கொள்முதல் செய்ய வழங்கப்பட்ட தொகை ரூ. 2.97 இலட்சம் (2.97 x 100000) மாநகராட்சிக்கு இழப்பாகும்.

(5) இவ்வாறு ஒப்பந்தப்புள்ளி நடைமுறையை பின்பற்றாததாலும், தேவையை சரியாக திட்டமிடாததாலும், மாநகராட்சிக்கு மொத்தம் ரூ.11.37 இலட்சம் (8.40 + 2.97) இழப்பு ஏற்பட்டுள்ளது.

பெறப்பட்ட பதிலுரை:

இவ்வலுவலக ந.க.எண்.12801 / நத4/ 16.05.2019 ன் வழி தெரிவிக்கப்பட்டது. தணிக்கைத்தடைக்குரிய பதிலேதும் பெறப்படவில்லை.

**2.4.8) திருப்பூர் மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதி – நகர் ஊரமைப்பு துறையின் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்டம் – 2014–15ன் கீழ் உயர்மட்ட நடைபாதை மேம்பாலம் (Sky Walker) அமைத்தல் பணி – 403 லட்சம் நிதி ஒதுக்கீடு – பணி முற்றுப் பெறவில்லை – கைவிடப்பட்ட பணிகள் – நிதி அரசு நிதியில் செலுத்தாமை – பணிக்குரிய பொருட்கள் கொள்முதல் பயன்படுத்தாமை .**

**பத்தி எண். 40 (கோப்பு எண்.328/இ1/2012) /2016–17**

திருப்பூர் மாநகராட்சி பகுதியில் 6 எண்ணிக்கையிலான உயர்மட்ட நடைபாதைகளை நெரிசல் மிகுந்த முக்கியமான சாலைகளில் அமைக்க மன்ற தீர்மானம் எண்.321, நாள்.28.03.2012ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள அரசு ஆணை எண்.609 / நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (மா.ந6), நாள்.16.12.2013ன் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கான மதிப்பீடு ரூ.403 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு 20.11.2014 அன்று ஒப்பந்த புள்ளி கோரப்பட்டது. குறைந்த புள்ளியினை அளித்த திருவாளர் சரவணா கன்ஸ்டரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்திற்கு 08.12.2014 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு 3 மாத கால அவகாசத்தில் பணி முடிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடங்களை தேர்வு செய்வதற்கு முன் நெடுஞ்சாலைத் துறையின் முன்அனுமதி பெற்றிருக்க வேண்டும். அவ்வாறான அனுமதி பெற்றதற்கான ஆதாரம் எதும் இல்லை.

இப்பணியினை மேற்கொள்ளத் தேவையான எஃகு கட்டுமான பொருட்கள் செலவினமாக 2015–16ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.188.05 இலட்சம் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இவற்றை கொண்டு எந்த பணியும் மேற்கொள்ளவில்லை. இருப்பு கணக்கும் காண்பிக்கவில்லை. நாளது தேதிவரை பயன்பாடு மற்றும் கண்காணிப்பின்றி எஃகு இருப்பு உள்ளது.

குமரர் நகர் – அவினாசி ரோடு சந்திப்பு பணிகள், சாலையின் அகலம் கூடுதலாக அமைக்கப்படுவதால், இடப்பற்றாக்குறை மற்றும் தொழில் நுட்ப ரீதியாக இங்கு நடைபாதை மேம்பாலம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதால், இதற்கான தொகை ரூ.158 இலட்சத்தை உரிய தலைப்பில் செலுத்த மன்றம் தனது தீர்மானம் எண்.119/28.08.17ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதனை ஏற்று அரசு ஆணை எண்.509/நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்.14.12.2018ல் அரசு அனுமதித்தது. ஆனால் இத்தொகை ரூ.158 லட்சம் உரிய தலைப்பில் செலுத்தப்படவில்லை

ராக்கிபாளையம் சாலை காங்கேயம் சாலை சந்திப்பு நடை மேம்பாலம் செயின்ட் ஜோசப் மெட்ரிக் பள்ளியின் கிழக்கு எல்லையில் மாற்றி அமைக்க, மன்றம் தனது தீர்மானம் எண்.104/20.06.2016ல் அனுமதித்தது. இப்பணி நீதிமன்ற வழக்குக் காரணமாக வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க மன்ற தீர்மானம் எண்.364/06.12.2018ல் முடிவு செய்யப்பட்டு அரசிற்கு கருத்துரு அனுப்பும் நிலையில் உள்ளது.

இப்பணியினை மேற்கொள்வதற்கு முன்னரே இதற்கான சாத்திய கூறுகளை ஆராயமல் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளதும், பணி முடிவு பெறாததாலும் ரூ.188.05 இலட்சம் பயனற்ற செலவினமாகியுள்ளது. கைவிடப்பட்ட இப்பணிக்குரிய தொகை ரூ158 இலட்சம் உரிய தலைப்பில் செலுத்தப்படாமல் உள்ளது எனத் தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெறப்பட்ட பதிலுரை:

இவ்வலுவலக ந.க.எண்.12801 / நத4/ 16.05.2019 ன் வழி மாநகராட்சி ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. மொத்தம் 6 பணியில் 4 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது எனவும், 2 பணிகள் ரத்து செய்யப்பட்டு அதற்குரிய தொகை 158 இலட்சம் உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் திட்ட நிதித் தலைப்பில் 22.03.2019 அன்று செலுத்தப்பட்டுள்ளது என்ற பதில் அளிக்கப்பட்டது.

**2.4.9) ஈரோடு மாநகராட்சி 2016–17 தணிக்கை – புதிய ஜவுளி வணிக வளாகம் கட்டப்பட்டு சொத்துவரி மற்றும் காலிமனை வரி நிர்ணயம் செய்ததில் குறைபாடு – மொத்த காலியிடத்திற்கும் வரி நிர்ணயம் செய்யாமல் சுமார் பாதியளவு காலிமனைக்கும் மட்டும் வரி நிர்ணயம் செய்ததால் இழப்பு மற்றும் சொத்துவரி நிர்ணயத்தில் 'A' மண்டல அடிப்படை மதிப்பிற்கு நிர்ணயம் செய்யாமல் 'C' மண்டல மதிப்பில் சொத்துவரி நிர்ணயம் செய்ததால் இழப்பு ரூ.20.30 இலட்சம்.**

**பத்தி எண். 17/2016–17**

ஈரோடு மாநகராட்சியில் 2016–17 ஆம் ஆண்டில் சொத்துவரி நிர்ணயம் செய்த கோப்பினை தணிக்கையில் சரிபார்த்தபோது, தேசீய நெடுஞ்சாலையை ஒட்டி கட்டப்பட்டுள்ள புதிய ஜவுளி வணிக வளாகத்திற்கு (Erode Textile Mall Ltd) காலிமனை வரி மற்றும் சொத்துவரி குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது

அ) காலிமனை குறைவாக நிர்ணயம் செய்தது

பெருந்துறை சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண்.3530 நாள்.13.07.2010–ன் படி இவ்வளாகம் அமைந்துள்ள நிலத்தின் பரப்பளவு 14.69 ஏக்கா அல்லது 6,39,896 சதுரடி ஆகும். கோப்பு எண்.அ1/13170/2016 நாள்.13.07.2016–ன் படி மேற்படி காலியிடத்திற்கு ஒரு சதுரடிக்கு ரூ.0.20 வீதம் காலிமனை வரி 13 அரையாண்டுகளுக்கு வசூலிக்கப்பட வேண்டும். ஆனால் 3,05,240 சதுரடி காலிமனைக்கு மட்டுமே காலியிட வரி வசூலிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய (639896 305240) 3,34,656 சதுரடி காலியிடம் வரி விதிக்கப்படாமல் விடுபட்டுள்ளது. எனவே இதற்கான காலியிட வரி (நூலகவரி உட்பட) ஒரு அரையாண்டிற்கு ரூ.73,624/– வீதம் 13 அரையாண்டுகளுக்கு ரூ.9.57 இலட்சம் மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இழப்பு விவரம் தொடர்புடைய பத்தியில் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை வசூலிக்கப்பட்டு விவரம் தணிக்கைக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

ஆ) 'A' மண்டல அடிப்படை மதிப்பில் சொத்துவரி நிர்ணயம் செய்யாமல் 'C' மண்டல மதிப்பில் நிர்ணயம் செய்தல்

ஈரோடு ஜவுளி வணிக வளாகம் (Erode Textile Mall Limited) என்ற இந்த பலமாடி கட்டடம் ஏழு தளங்களில் மொத்தம் 1,13,760 சதுரடி பரப்பளவில் அமைந்துள்ளது. இக்கட்டடம் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடம் முக்கிய மற்றும் பிரதான சாலைகளை இணைக்கும் பேருந்து வழி தட சாலையில் உள்ளது. அரசாணை எண்.151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20.08.2009 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கை எண்.41802/2009/ஆர்–1, நாள்.19.03.2010–ன் படி மேலே குறிப்பிட்ட சூழலில் அமைந்துள்ள இவ்வளாகத்தை 'A' மண்டல அடிப்படை மதிப்பில் அதாவது ஒரு சதுரடிக்கு ரூ.0.20 வீதம் சொத்துவரி நிர்ணயத்திற்குட்படுத்த வேண்டும்.

இதன்படி இவ்வளாகத்திற்கு 'A' மண்டல அடிப்படை மதிப்பில் 16.02.2017–ல் சொத்துவரி நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பின்னர் 'C' மண்டல அடிப்படை மதிப்பில் அதாவது ஒரு சதுரடிக்கு ரூ.0.16/– வீதம் 03.03.2017–ல் சொத்துவரி நிர்ணயம் மாற்றப்பட்டுள்ளது. இதனால் 2016–17 இரண்டாம் அரையாண்டு முதல் 2017–18 இரண்டாம் அரையாண்டு முடிய மூன்று அரையாண்டுகளுக்கு மொத்தம் ரூ.10.73 இலட்சம் மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. இது குறித்த விவரம் தொடர்புடைய பத்தியில் முழுமையாக அளிக்கப்பட்டுள்ளது. எனவே சொத்துவரி மாற்றியமைக்கப்பட்டு இழப்பு ரூ.10.73 இலட்சம் வசூலிக்கப்பட்டு விவரம் தணிக்கைக்கு தெரிவிக்க வேண்டும்.

சுருக்கம்

| | | |
|---|---|---|
| பத்தி அ | – | ரூ. 9.57 இலட்சம் |
| பத்தி ஆ | – | ரூ.10.73 இலட்சம் |
| மொத்தம் | – | ரூ.20.30 இலட்சம் |

பெறப்பட்ட பதிலுரை:

பதில் ஏதும் பெறப்படவில்லை

**2.4.10 மதுரை மாநகராட்சி 2016–17 தணிக்கை – மூன்றாண்டு குத்தகை இனங்களை நீட்டிக்கும்போது புதுப்பித்தல் கட்டணம் வசூலிக்கப்படாதது மற்றும் ஒன்பது ஆண்டுகள் முடிவில் அங்காடி மதிப்பின் அடிப்படையிலான குத்தகை தொகை நிர்ணயம் செய்யப்படாதது – இழப்பு ரூ.28.49 இலட்சம்.**

**(மைய அலுவலக பத்தி எண்.22) /2016–17**

(அ) (1) அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007 பத்தி 4(iv)–ன் படி மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை பழைய குத்தகைதாரருக்கே குத்தகையை நீட்டிக்கும் நேர்வில் கீழ்காணுமாறு கலம் 3–ல் குறிப்பிடுகின்ற புதுப்பித்தல் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| வ. எண் | கடையின் பரப்பளவு (சதுரடியில்) | வசூலிக்கப்பட வேண்டிய புதுப்பித்தல் கட்டணம் (ரூபாயில்) | குத்தகை இனங்களின் எண்ணிக்கை | மொத்த இழப்பு தொகை (ரூபாய்) |
| 1 | 100 வரை | 500/– | 1989 | 9,94,500 |
| 2 | 100 மேல் 499 முடிய | 1000/– | 1346 | 13,46,000 |
| 3 | 500 முதல் 1000 முடிய | 1500/– | 20 | 30,000 |
| 4 | 1000க்கு மேல் | 2000/– | 34 | 68,000 |
| | | மொத்தம் | 3389 | 24,38,500 |

ஆனால் மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான மேற்படி 3389 கடைகள் / நிலங்களின் மூன்றாண்டுகள் குத்தகையை நீட்டிக்கும் போது இந்த புதுப்பித்தல் கட்டணம் வசூலிக்கப்படாததால் மேலே கலம் 5–ல் சுட்டியவாறு ரூ.24.39 இலட்சம் மதுரை மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

(அ) (2) மேற்படி மொத்த 3389 குத்தகை இனங்களுக்கும் 9 ஆண்டுகள் முடிவில் மேலே சுட்டப்பட்ட அரசாணை மற்றும் மாமன்ற தீர்மானம் 185 / நாள்.11.08.2007–ன் படி அங்காடி மதிப்பில் குத்தகை தொகை நிர்ணயம் மேற்கொண்டு அதன் அடிப்படையில் வசூலிக்கப்படாததால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

(ஆ) மேலும் மதுரை மத்திய காய்கறி அங்காடியில் உள்ள 604 கடைகள் 2010 ஆம் ஆண்டில் குத்தகைக்கு விடப்பட்டு 2016 ஆம் ஆண்டில் 6 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் பழைய குத்தகைதாரர்களுக்கே நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவர்களிடமிருந்து மேலே குறிப்பிட்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளவாறு புதுப்பித்தல் கட்டணம் வசூலிக்கப்படவில்லை. இதனால் கீழ்காணுமாறு ரூ.4.10 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| வ. எண் | கடையின் பரப்பளவு (சதுரடியில்) | வசூலிக்கப்பட வேண்டிய கட்டணம் (ரூபாயில்) | கடைகளின் எண்ணிக்கை | மொத்த இழப்பு தொகை (ரூபாய்) |
| 1 | 100 க்கு கீழ் | 500/– | 389 | 1,94,500 |
| 2 | 100 முதல் 500 வரை | 1000/– | 214 | 2,14,000 |
| 3 | 1000க்கு மேல் | 2000/– | 1 | 2,000 |
| | | | மொத்தம் | 4,10,500 |

| சுருக்கம் | இழப்பு (இலட்சத்தில்) |
|---|---|
| பத்தி அ | 24.39 |
| பத்தி ஆ | 4.10 |
| மொத்தம் | 28.49 |

**பெறப்பட்ட பதிலுரை:**

பதில் ஏதும் பெறப்படவில்லை

## 3. நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் மீதான ஒரு பார்வை

3.1 அரசியலமைப்பு சட்டத்தின் 74வது திருத்தம், நகர்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அரசியலமைப்பு சட்டப்படியான தகுதி நிலையை அளித்து சீரான அமைப்பு, காலமுறைப்படியான தேர்தல், நிதிக்குழுவின் மூலம் முறையான நிதி ஒதுக்கீடுகள் போன்றவற்றை கொண்ட ஓர் அமைப்பை ஏற்படுத்தியது. அவை சுதந்திரமாக செயல்படக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளாக செயல்பட அதிகாரங்களையும் பொறுப்புகளையும் மாநில அரசு உருவாக்கி அளித்துள்ளது. இவை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920–ல் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 12 வது அட்டவணையில் பட்டியலிடப்பட்ட பொருட்கூறுகளை பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நிதிக்கான திட்டங்களை செயல்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 3.2 மாநிலம் சார்ந்த பொது விவரங்கள்

இந்தியாவில் மிகவும் நகரங்கள் அடங்கிய மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் (7.21 கோடி) 3.49 கோடி மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர். இது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 48.40 விழுக்காடாகும். மாநிலத்தின் பொதுவான விவரங்கள் வருமாறு

| விவரங்கள் | 2011 மக்கள் தொகை கணக்கின்படி |
|---|---|
| மக்கள் தொகை | 7.21 கோடி |
| நகர்புற மக்கள் தொகை | 48.40 விழுக்காடு |
| நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை | 664 |
| மாநகராட்சிகள் | 12 |
| நகராட்சிகள் | 124 |
| பேரூராட்சிகள் | 528 |

### 3.3 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை விவரம் (2011)

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்தம் 124 நகராட்சிகளில் 27,72,310 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் மொத்தம் 1,07,94,507 மக்கள் வசிக்கின்றனர். இதில் ஆண்கள் 53,81,437, பெண்கள் 54,13,070 பேர்கள் உள்ளனர்

### 3.4 நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் வகைப்பாடு


நகர்புற உள்ளாட்சி அமைப்புகள், அவற்றின் வருவாயின் அடிப்படையில் தமிழ்நாடு அரசால் அட்டவணை 1.2–ல் உள்ளவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் | நிலை | ஆண்டு வருவாய் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| நகராட்சிகள் | சிறப்பு நிலை | 10 கோடிக்கு மேல் | 17 |
| | தேர்வு நிலை | 6 கோடிக்கு மேல் 10 கோடிக்குள் | 30 |
| | முதல் நிலை | 4 கோடிக்கு மேல் 6 கோடிக்குள் | 33 |
| | இரண்டாம் நிலை | 4 கோடிக்குள் | 44 |
| | | | 124 |

ஆதாரம் – அரசு ஆணை (நிலை) எண்.238 / நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி 5) துறை நாள்.02.12.2008 மற்றும் அரசு ஆணை (நிலை) எண்.154 / நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி 5) துறை நாள்.09.08.2010

### 3.5 நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக கட்டமைப்பு

தமிழ்நாட்டிலுள்ள நகர்புற உள்ளாட்சி அமைப்புகளை நிர்வகிக்கும் நிர்வாக கட்டமைப்பு


முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
ஆணையர் சென்னை மாநகராட்சி (நிர்வாக கட்டுப்பாடு)
நகராட்சி நிர்வாக ஆணையர் (நிர்வாக கட்டுப்பாடு)
பேரூராட்சிகளின் இயக்குநர் (நிர்வாக கட்டுப்பாடு)
தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி மன்றம்
மாநகராட்சி ஆணையர் (11)
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் (7)
மாவட்ட ஆட்சியர்
பேரூராட்சிகள் உதவி இயக்குநர்
மாநகராட்சி மன்றம்
நகராட்சி ஆணையர்
செயல் அலுவலர்
தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சி மன்றம்
பேரூராட்சி மன்றம்

## 3.6 செயல்பாடுகள் பகிர்வு

அரசியலமைப்பு சட்டத்தின் பன்னிரெண்டாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்ட 18 செயல்பாடுகளுடன் பேரூராட்சிக்கு 12 செயல்பாடுகளும் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கு 17 செயல்பாடுகளும் (தீயணைப்புப் பணிகள் நீங்கலாக) இதுவரை பொறுப்புரிமை பகிர்வு செய்யப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சிக்கு 13 செயல்பாடுகள் மட்டுமே பகிர்வு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் குடிநீர் வழங்கும் பணியினை சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியம் மேற்கொள்கிறது.

## 3.7 பரவலாக்கப்பட்ட திட்டமிடல்

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 241 (1)–ன் படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட திட்டக்குழு ஏற்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில் சென்னை மாவட்டம் நீங்கலாக 31 மாவட்டங்களில் மாவட்ட திட்டக்குழு தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. இத்திட்டக்குழு மாவட்டத்தில் உள்ள மூன்றடுக்கு ஊராட்சி அமைப்பின் திட்டங்களையும் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து மாவட்ட முழுமைக்கும் திட்டத்தை தயாரிக்கும்.

இக்குழுவிற்கு மாவட்ட ஊராட்சியின் தலைவர் தலைவராகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் துணைத் தலைவராகவும் உள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

## 3.8 நிதி மீதான விவரக் குறிப்புகள்

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிவரவு

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பெரும்பகுதி நிதி ஆதாரம் மத்திய மற்றும் மாநில நிதிக்குழுக்களின் மான்யங்கள், மத்திய அரசு வழங்கும் திட்டங்களுக்கான மானியங்கள், மாநில அரசின் மான்யம் சொந்த வருவாய், ஒப்படைக்கப்பட்ட வருவாய் மத்திய, மாநில அரசுகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

## 3.9 நகராட்சிகளின் 2016–17 வரவு செலவு விவரம்

தமிழ்நாட்டிலுள்ள 124 நகராட்சிகளின் 2016–17 ஆம் ஆண்டு தொகுக்கப்பட்ட கணக்குகளின்படி அதன் வரவு–செலவு மற்றும் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் விவரம் பின்வருமாறு உள்ளன

வரவு மற்றும் செலவு – 2016–17

| வரவினம் | (ரூ.) | செலவினம் | |
|---|---|---|---|
| சொந்த வருவாய் | 104031.67 | வருவாய் செலவினம் | 159507.33 |
| ஒப்படைக்கப்பட்ட வருவாய் | 10599.65 | மூலதன செலவினம் | 42928.98 |
| மானியங்கள் | 36849.74 | தேய்மானம் | 95330.19 |
| மாநில பகிர்வு நிதி | 83716.31 | மற்றவை | 3.49 |
| கடன்கள் | 1410.66 | | |
| முதலீடு மீதான வட்டி/ வங்கி வட்டி | 6069.51 | | |
| இதரவை | 601.05 | | |
| பற்றாக்குறை | 54491.40 | | |
| **மொத்த வரவினம்** | **297769.99** | **மொத்த செலவினம்** | **297769.99** |

**சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் விவரம்**

சொத்துக்கள்

| வ.எண் | சொத்துக்கள் | தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நிலையான சொத்துக்கள் | 1321260.33 |
| 2 | ரொக்கம் மற்றும் வங்கியிருப்பு | 165722.39 |
| 3 | இருப்புகள் | 41489.44 |
| 4 | வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூலிக்க வேண்டியவை | 79714.08 |
| 5 | பணியாளர் முன்பணம் | 18979.10 |
| 6 | இதர முன்பணம் | 203511.17 |
| 7 | முதலீடு மற்றும் வட்டி | 61748.55 |
| 8 | பெறப்பட வேண்டிய மானியம் | 17822.45 |
| 9 | பெறப்பட வேண்டிய கடன்கள் | 28.37 |
| 10 | இதர இனங்கள் | 17204.38 |
| | **மொத்தம்** | **1927480.26** |

பொறுப்புகள்

| வ.எண் | பொறுப்புகள் | தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மான்யம் மற்றும் பங்குத்தொகை | 940521.66 |
| 2 | கடன்கள் | 110064.74 |
| 3 | கடன் மீதான வட்டி | 3449.19 |
| 4 | ஊதியம் பிடித்தங்கள் | 8646.38 |
| 5 | கொடுக்கப்படவேண்டிய கணக்குகள் | 64350.12 |
| 6 | வைப்புத் தொகை திருப்ப வேண்டியவை | 51949.95 |
| 7 | பிடித்தம் செய்த வரிகள் செலுத்த வேண்டியவை | 28334.75 |
| 8 | இதர பொறுப்புகள் | 99721.08 |
| 9 | இதர வங்கியிருப்புகள் | 28054.68 |
| 10 | திரண்ட தேய்மானம் | 549459.89 |
| 11 | திரண்ட உபரி | 42927.82 |
| | மொத்தம் | **1927480.26** |

2016–17 ஆம் ஆண்டில் மொத்த வரவினத்தில் மூலதன செலவினம் 17.65% விழுக்காடும் வருவாய் செலவினம் 65.56% விழுக்காடும் ஆக இருந்தன.

தணிக்கை ஆண்டின் முடிவில் வசூலிக்கப்படவேண்டிய வரி மற்றும் வரியில்லா இனங்கள் ரூ.79714.08 இலட்சங்கள் உள்ளன. உரிய வழிமுறைகளை பின்பற்றி வசூல் இனத்தில் முனைப்பு காட்டாமையே இதற்கு காரணமாகும். விடுதலின்றி வரி இனங்கள் வசூலிக்கப்பட்டால் நகராட்சிகளின் சொந்த வருவாய் பெருகுவதுடன் காலங்கடந்த வரி இனமாகுவதும் தள்ளுபடி செய்வதும் தவிர்க்கப்படலாம். வசூலில் முனைப்பு காண்பித்தால் மக்களுக்கு சேவை அளிப்பதில் முன்னேற்றம் ஏற்படும் என தணிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது. அதே போன்று முன்பணம் தலைப்பில் உள்ள ரூ.222490.27 இலட்சங்கள் உரிய காலவரைக்குள் வசூலிக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் சட்டப்படியாக வசூலிக்கும் நிலை எழாமல் போகும். மேலும் நகராட்சிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படும். எனவே முன்பணத்தை அவை காலாவதியாகுவதற்கு முன் வசூலிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என தணிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது.

3.10 கணக்குப்பதிவு ஏற்பாடு

**3.10.1 நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் பராமரிக்கும் கணக்குகள்**

சென்னை மாநகராட்சி நீங்கலாக 11 மாநகராட்சிகள் மற்றும் 124 நகராட்சிகளிலும் பின்வரும் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன.

- வருவாய் நிதி மற்றும் மூலதன நிதி
- குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் நிதி
- தொடக்க கல்வி நிதி

**3.10.2 கணக்குப்பதிவின் கட்டமைப்பு**

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் இயல்பாக சேர்த்தல் அடிப்படையிலான கணக்கு வைப்புமுறை பின்பற்றப்படுகிறது. தமிழ்நாடு மாநிலம் மாநில கணக்கு வைப்புக் கையேட்டினைப் பின்பற்றியது. தேசிய நகராட்சி கணக்கு வைப்புக் கையேடு அறிமுகமானதால் தமிழ்நாட்டிலுள்ள நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேவைக்கேற்ப, தேசிய நகராட்சி கணக்கு வைப்புக் கையேடு வகுத்த நெறிமுறைகளைக் கொண்ட ஒரு புதிய கணக்கு வைப்புக் கையேட்டினைத் தயாரிக்கும் நடவடிக்கையை தமிழ்நாடு அரசு துவக்கியது. புதுப்பிக்கப்பட்ட நகராட்சி கணக்கு வைப்புக் கையேடு மற்றும் நகராட்சி வரவு செலவு திட்டக் கையேடு ஆகியவற்றினை தமிழ்நாடு அரசு அங்கீகரித்து 2013–14 முதல் இக்கையேட்டினை பின்பற்றி கணக்குகளைத் தொகுக்குமாறு அனைத்து நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் உத்தரவிட்டது.

புதிய குறியீட்டு அமைப்பின்படி கணக்கு வைப்பு மென்பொருள் உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு 2016–17 ஆம் ஆண்டு முதல் அனைத்து நகராட்சிகளிலும் அமுல்படுத்தப்பட்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**3.11 தணிக்கை ஏற்பாடுகள்**

நகர்புற உள்ளாட்சி மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மீதான தணிக்கை உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் அவர்களால் மேற்கொள்ள கீழ்காணும் சட்டங்களின் பிரிவுகள் மற்றும் அரசு ஆணைகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனம் | சட்டப்பிரிவு | அரசு ஆணை |
|---|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 1. பெருநகர சென்னை மாநகராட்சி சட்டம் 1919 பிரிவு 140<br>2. இதர மாநகராட்சிகள் சம்பந்தப்பட்ட மாநகராட்சிகளின் சட்டம் பிரிவு 171 | அரசு ஆணை (நிலை) எண்.93 நிதி நாள்.28.03.2003 |
| 2 | நகராட்சிகள் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 122 | அரசு ஆணை (நிலை) எண்.93 நிதி நாள்.28.03.2003 |
| 3 | பேரூராட்சி | தமிழ்நாடு மாவட்ட ஊராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 122 | அரசு ஆணை (நிலை) எண்.1155 / உள்ளாட்சித் துறை நாள்.11.06.1952 |

**3.12 கணக்குகள் தயாரித்து அளித்தல்**

நான்காவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகளை ஏற்கையில் தமிழ்நாடு அரசு எடுத்த முடிவின் படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் தமது ஆண்டு கணக்குகளை நிதியாண்டு முடிகிற மூன்று மாதங்களுக்குள் இறுதி செய்ய வேண்டும். உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 பிரிவு 7 (1)–ன் படி ஒரு நிதி ஆண்டு முடிவுற்ற மூன்று மாதங்களுக்குள் அவ்வாண்டின் கணக்குகளை முடித்து சமர்ப்பிக்க வேண்டும்.

**3.13 தணிக்கை நிலுவை**

2016–17 ஆம் ஆண்டில் அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களின் ஆண்டு கணக்குகளும் பெறப்பட்டு நிலுவையின்றி தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது.

**3.13.1 தணிக்கை கட்டணம்**

2016–17 ஆம் ஆண்டில் 124 நகராட்சிகளின் தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கை மேற்கொண்டதற்கான தணிக்கை கட்டணமாக ரூ.174.08 இலட்சம் கணக்கிடப்பட்டுள்ளது. இதனை அரசு நிதியில் செலுத்தப்படவேண்டும் என சுட்டிக்காட்டப்படுகிறது.

**3.14 தணிக்கையில் கண்டறியப்பட்ட குறைபாடுகள்**

2016–17 ஆம் ஆண்டிற்கான தணிக்கை மேற்படி 124 நகராட்சிகளில் மேற்கொண்ட போது, கண்டறியப்பட்ட குறைபாடுகளில் ஒரு சிலவற்றை மட்டும் 2014 ஆம் வருட உள்ளாட்சி நிதி தணிக்கைச் சட்டப் பிரிவு 20–ன் படி அரசின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு பின்வருமாறு தொகுத்து அளிக்கப்படுகிறது.

3.14.1 நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் நகராட்சி –குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் நிதி – திருத்தம் செய்யப்பட்ட குடிநீர்த் திட்ட உப விதிகளின்படி குடிநீர்க் கட்டண வைப்புத் தொகை வீட்டு உபயோகத்திற்கு ரூ.3000/– த்திலிருந்து ரூ.5000/– ஆகவும், வணிக உபயோகத்திற்கு ரூ.7000/– த்திலிருந்து ரூ.10000/– ஆகவும் உயர்த்தப்பட்டது. பழைய குடிநீர் இணைப்புகளுக்கு வேறுபாட்டு வைப்புத்தொகை வசூலிக்கப்படாதது – குறைபாடு இழப்பு ரூ.191.35 இலட்சம் உடன் வசூலிக்கப்பட வேண்டும்.

பத்தி எண்.16/2016–17

உள்ளாட்சித்துறை அறிக்கை கடித எண்.4226 /2013 இ2, நாள் 13.11.2014 –ன் படி இராசிபுரம் நகராட்சி குடிநீர்த் திட்ட உப விதிகள் 8(இ) –ன்படி பின்வரும் விபரப்படி குடிநீர்க் கட்டண வைப்புத்தொகை உயர்த்தப்பட்டுள்ளது.

| வ.எண். | பயன்பாடு | பழைய வைப்புத் தொகை ரூ. | திருத்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகை ரூ. | வேறுபாட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வீடு | 3000 | 5000 | 2000 |
| 2 | வணிகம் | 7000 | 10000 | 3000 |

மேலும், இதில் ஏற்கனவே உள்ள குழாய் இணைப்புகளுக்கு ஆறு மாத காலத்திற்குள் கூடுதல் வைப்புத் தொகையை செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இத்தொகைகள் வசூலிக்கப்பட்ட விபரம் அளிக்கப்படவில்லை. எனவே, உடன் விபரம் அளிக்கப்பட வேண்டும் அல்லது இழப்புத்தொகை ரூ.1,91,35,000/– வசூலிக்கப்பட வேண்டும்.

<u>2015–16 வரையுள்ள குடிநீர் இணைப்புகள்</u>

| வ.எண். | விபரம் | இழப்பு இணைப்புக்கு ரூ. | எண்ணிக்கை | மொத்த இழப்பு ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வீட்டு உபயோகம் | 2000 | 9338 | 18676000 |
| 2 | வணிக உபயோகம் | 3000 | 153 | 459000 |
| | | மொத்தம் | 9491 | 19135000 |

பெறப்பட்ட பதிலுரை

இவ்வலுவலக ந.க.எண்.12801 / நத4/ 16.05.2019 ன் வழி நகராட்சிகளின் நிர்வாக ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. பதில் ஏதும் பெறப்படவில்லை. இராசிபுரம் நகராட்சி ஆணையர் தனது ந.க.எண் 52 / 17 / அ5 / நாள் 27.03.2019 ன் வழி உள்ளாட்சி நிதித்துறை உதவி இயக்குநர் நாமக்கல் மாவட்டத்திற்கு அளித்துள்ள பதிலுரையில் 25.03.2019 வரை ரூ.20,96,500/– வசூலிக்கப்பட்டுள்ளது எனவும் மீதமுள்ள ரூ.1,70,38,500 /– ஐ வசூலிக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற இடைக்கால பதில் அளித்துள்ளார்.

**3.14.2) தஞ்சாவூர் மாவட்டம் – கும்பகோணம் நகராட்சி – 48உட்கட்டமைப்பு நிரவல் நிதி (IGFF) பழவந்தான் கட்டளை வாய்க்கால் மற்றும் உள்ளூர் வாய்க்கால் தூர்வாரும் பணி – பணி முற்றுபெறாமை–தொகை அதிகமாக தீர்வு செய்தது– நிதி இழப்பு ரூ.29.73 இலட்சம்.**

**பத்தி எண்.20/2016–17**

கும்பகோணம் நகராட்சியில் பழவந்தான் கட்டளை வாய்க்கால் தூர்வாருதல் பணி ரூ.40 இலட்சத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்ததாரர் திரு.இராஜேந்திரன் என்பவருக்கு 15.12.2015 அன்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இப்பணியானது 5125 மீட்டர் நீளத்தில் 33844 கன மீட்டர் அளவிற்கு தூர்வார உத்தரவிடப்பட்டுள்ளது. இப்பணியில் 10520 கனமீட்டருக்கு மட்டுமே பணி மேற்கொள்ளப்பட்டு பின்னர் எந்த முன்னேற்றமும் இன்றி இன்று வரை உள்ளது காணப்படுகிறது.

இப்பணிக்கு பகுதித் தொகையாக ரூ.27.61 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. பணி முடிக்கப்பட்டதோ 30% மட்டுமே. மிகையாக ரூ.15.18 இலட்சம் (40,00,000 / 33844 x 10520 க.மீ = 12,43,352/– (12.43 இலட்சம்) ) வழங்கப்பட்டது மட்டுமின்றி அத்தியாவசியான பணி முடிக்கப்படாமல் உள்ளதும் எந்த நோக்கத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை எனத் தணிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது.

**பத்தி எண்.21/2016–17**

மேற்கண்ட பணி போன்றே உள்ளூர் வாய்க்கால்கள் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வார ஒப்பந்ததாரர் திரு.செல்வராஜ் என்பவருக்கு 15.12.2015 அன்று வேலை ஆணை வழங்கப்பட்டுள்ளது.

3500 மீட்டர் நீளத்தில் 31490 கனமீட்டர் தூர்வார வேண்டிய பணியில் 6556.83 கனமீட்டர் பணி மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது. ஆனால் தொகை ரூ.22.88 இலட்சம் வழங்கப்பட்டு முன்னேற்றம் இல்லாமல் உள்ளது. மிகையாக ரூ.14.55 இலட்சம் (40,00,000 / 31490 x 6556.83 க.மீ =832878) வழங்கப்பட்டுள்ளது காணப்பட்டது.

இவ்விரு பணிகளிலும் மிகையாக வழங்கப்பட்டுள்ள தொகை ரூ.29.73 இலட்சம் வசூலிக்கப்பட வேண்டும்.

<u>**தணிக்கைக் குறிப்புரை**</u> :- பதிலேதும் பெறப்படவில்லை

**3.14.3) திருவள்ளூர் மாவட்டம் – ஆவடி சிறப்பு நிலை பெரு நகராட்சி – ஜவகர்லால் நேரு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் புதை வடிகால் திட்டம் (Under – ground sewerage) 2008–ல் ஆரம்பிக்கப்பட்டது – 7 வருடங்கள் கடந்த பின்னரும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படாதது – நோக்கம் நிறைவேறவில்லை.**

**பத்தி எண்.12/2016–17**

ஆவடி நகராட்சி 20.11.1970–ல் நகரியமாக தோற்றுவிக்கப்பட்டு, 1993–ல் நகராட்சியாக உயர்த்தப்பட்டது. தற்போது சிறப்பு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 65 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 344701 ஆகும். இந்நகரம் 9 வருவாய் கிராமங்களையும், 48 வார்டுகளையும் உள்ளடக்கியதாகும்.

ஆவடி பெருநகராட்சியின், வளர்ச்சி பெருகி வரும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டு சுற்றுப்புற சூழல் மற்றும் நிலத்தடி நீர்வளம் மாசுபடாமல் இருக்க நகராட்சி மன்றம் புதை வடிகால் திட்டம் கொண்டுவர 20.08.1997 அன்று தீர்மானம் நிறைவேற்றியது. (தீர்மானஎண்.230/20.08.1997) மன்றம் இத்திட்டத்தை அரசு துறையினை சார்ந்த இத்திட்டத்தில் முன்னோடியான சென்னை கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் நிறைவேற்ற தீர்மானித்து அரசைக் கேட்டுக்கொண்டது.

இத்திட்டம், அரசின் ஒருங்கிணைந்த கழிவு நீரகற்றும் திட்டம் மற்றும் மேற்பார்வை (Comprehensive Sewerage Scheme Monitoring Committee) குழுவிடம் எடுத்துச் செல்லப்பட்டு, சென்னை கழிவு நீரகற்று வாரியத்தால் திட்டம் தீட்டப்பட்டு பல சுற்று கூட்டத்திற்கு பிறகு 29.02.2008 அன்று நடைபெற்ற 47–வது கூட்டத்தில் கீழ்கண்டவாறு நிதியை திரட்டி திட்டத்தை செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| மத்திய அரசின் பங்கு | ரூ.55.31 கோடி |
| மாநில அரசின் வட்டியில்லா கடன் | ரூ.23.70 கோடி |
| நகராட்சியின் பங்குத் தொகை மற்றும் நிறுவனங்கள் மூலம் கடன் பெறுவது | ரூ.79.02 கோடி (*) |
| மொத்த திட்ட மதிப்பீடு | **ரூ.158.03 கோடி** |

(*)– டுபிட்கோ மூலம் – ரூ.39.51 கோடி

(*) பொதுமக்கள் பங்களிப்பு – ரூ.39.51 கோடி

மேலும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அரசாணை எண்.20, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறை, நாள் 22.01.2008–ன் படி ரூ.158.05 கோடி மதிப்பீட்டில் நகரம் முழுமைக்குமான பாதாள சாக்கடை திட்டம் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் செயல்பாட்டில் உள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் கீழ்வருமாறு:–

| | | |
|---|---|---|
| கழிவு நீர் குழாய் நீளம் | : | 328.32 கி.மீட்டர் |
| ஆழ்துளை வழிகள் | : | 12111 |
| கழிவு நீரகற்று நிலையங்கள் | : | 16 |
| கழிவு நீர் உந்து நிலையங்கள் | : | 1 |
| கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் | : | 2 (Sequential Batch Reactor முறை) |
| ஆவடி பருத்திப்பட்டு | : | 36 MLD திறன் சுத்திகரிப்பு நிலையம் |
| முத்தா புதுப்பேட்டை | : | 4 MLD திறன் சுத்திகரிப்பு நிலையம் |

மொத்தம் ரூ.158.05 கோடியில், இதுவரை சென்னை கழிவு நீரகற்று வாரியத்திற்கு ஆவடி நகராட்சியால் தொகை ரூ.154.88 கோடி வழங்கப்பட்டுவிட்டது. இதில், பொதுமக்களிடமிருந்து ரூ.3797 இலட்சம் (ரூ.37.97 கோடி) வைப்புத் தொகையாக திரட்டப்பட்டுள்ளது.

08.01.2018 அன்றைய நிலையில் கீழ்கண்டவாறு புதை வடிகால் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

| வார்டு எண் | இணைப்பு வழங்கியது |
|---|---|
| 1 | 67 |
| 2 | 6 |
| 48 | 303 |
| **மொத்தம்** | **376** |

06/2010–ல் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வரவேண்டிய இத்திட்டம், திட்ட மதிப்பீடு தொகை ஏறக்குறைய முழுவதும் அளிக்கப்பட்ட நிலையில், எந்த நோக்கத்திற்காக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு விரைந்து முடிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதோ அந்த நோக்கம் 7 ஆண்டுகள் கடந்தும் நிறைவேற்றப்படாமல் உள்ளது.

பெறப்பட்ட பதிலுரை

இவ்வலுவலக ந.க.எண் 12801 / நத4 / நாள் 16.05.2019 ன் வழி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணி தொடர்ந்து முன்னேற்றத்தில் உள்ளது என்ற இடைக்கால பதில் அளிக்கப்பட்டுள்ளது.

**3.14.4) திருவள்ளூர் மாவட்டம் – ஆவடி நகராட்சி – காலியிட மனை மீதான வழக்குகள் முடிந்த பின்னரும் காலியிட மனைவரி செலுத்தப்படாதது – உரிய நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப்படாதது – இழப்பு தொகை ரூ.74.65 இலட்சம்.**

**பத்தி எண்.21 இ/2016–17**

ஆவடி பெரு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16 ச.வ.எண்.657/1ஏ1 மற்றும் 657/1ஏ2 மற்றும் 1பி2 பருத்திப்பட்டு கிராமத்திலுள்ள 436872 ச.அடி அளவுக்கான காலிமனைக்கு காலியிட மனைவரி ரூ.26.01 இலட்சம் செலுத்திட மெசர்ஸ் ஐஸ்வர்யா பிராபர்டிஸ் லிமிடெட் தெரிவிக்கப்பட்டு அந்நிறுவனத்தால் 21.04.2010 அன்று அத்தொகை செலுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து அரையாண்டுகளுக்கான கேட்பு தொகை ரூ.1.55 இலட்சம் 24.04.2010 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து 5 அரையாண்டுகளுக்கான கேட்பு ரூ.38.85 இலட்சம் எழுப்பப்பட்டு 26.10.2012 அன்று அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்ட நிலையில் இதனை எதிர்த்து வழக்குகள் எண்.WP No.1431/2009, WP No.32942/2012 & WP No.32843/2012 தொடரப்பட்டு அரசாணை எண்.151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20.08.2009–ன் வழி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் ஆவடி நகராட்சியால் புதிய கேட்பு நிர்ணயம் செய்யப்பட்ட காலியிட மனை வரி திருத்தியமைக்கப்படுவதால் அத்தொகையினை செலுத்திட உள்ளதாக அந்நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டு அவ்வழக்குகள் முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்நிலையில் வழக்குகள் முடிவுற்ற போதிலும் அந்நிறுவனம் தெரிவித்தவாறு நிலுவை காலியிட மனை வரி செலுத்தப்படாமல் உள்ளதால் அத்தொகை வசூலிக்க உரிய நிர்வாக நடவடிக்கை விரைந்து மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| | |
|---|---|
| காலியிட மனை வரி விதிப்பு எண். | 216036 |
| பெயர் | ஐஸ்வர்யா பிராபர்டிஸ் லிமிடெட் |
| நிலுவை தொகை | ரூ.74.65 இலட்சம் |

மேற்படி நிலுவை தொகை உடன் வசூலிக்கப்பட்டு நகராட்சி நிதிக்கு வரவாக்கப்பட வேண்டும்.



119-3—10

பெறப்பட்ட பதிலுரை

மொத்தமுள்ள 6. காலியிட மனை வரிவிதிப்புகள் இரண்டு காலியிட மனை வரி நீக்கம் செய்யப்பட்டு புதியதாக சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டதாகவும், மீதமுள்ள 4. காலியிட மனை வரிவிதிப்புகளுக்கு தொகை வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் உரிய கோப்புகள் தணிக்கைக்கு அளிக்கப்படவில்லை.

**3.14.5) திருவள்ளூர் மாவட்டம் – திருத்தணி நகராட்சி – நகராட்சியால் விதிக்கப்பட்டு செலுத்தப்பட்டது – சேவை வரி – சேவை வரி செலுத்த அபராதம் மேல்முறையீட்டு வழக்கில் அபராதம் தள்ளுபடி செய்யப்பட்டது – செலுத்தப்பட்ட அபராதத் தொகை மீள பெறப்பட வேண்டும் – இழப்பு ரூ.6.71 இலட்சம்.**

**பத்தி எண்.22 ஆ/2016–17**

திருத்தணி நகராட்சிக்கு சொந்தமான அங்காடி கடைகள், கட்டண கழிப்பிடம் மற்றும் பேருந்து நுழைவு கட்டணங்களுக்கு 2008–09 முதல் 2011–12 ஆம் ஆண்டு வரை உள்ள காலத்திற்கு சேவை வரியாக ரூ.6.62 இலட்சம் அதற்கான அபராதக் கட்டணம் ரூ.6.61 இலட்சம் மற்றும் கூடுதல் அபராதக் கட்டணம் ரூ.0.10 இலட்சம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.13.33 இலட்சம் செலுத்த வேண்டும் என சென்னை மத்திய ஆயத் தீர்வை ஆணையரகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகராட்சியின் எஸ்.எப்.சி திட்ட நிதிக் கணக்கு எண்.11143073973–லிருந்து ரூ.13.33 இலட்சம் 02.03.2015 அன்று ஆணையர், திருத்தணி நகராட்சி அனுமதியின்றி வங்கியின் மூலம் நிதி மாற்றம் செய்யப்பட்டு சேவை வரி கணக்கில் செலுத்தி அதற்கான ஒப்புகை 04.03.2015 அன்று பாரத ஸ்டேட் வங்கி மூலம் வரப்பெற்றுள்ளது.

சென்னை மத்திய ஆயத் தீர்வை ஆணையரகத்தின் நடவடிக்கையினை எதிர்த்து மத்திய ஆயத் தீர்வை ஆணையரகத்தில் மேல்முறையீடு வழக்கு 25/2016 தொடரப்பட்டு 16.02.2016 அன்று இறுதி பேராணை பின்வருமாறு வெளியிடப்பட்டுள்ளது.

1. சேவை வரி கட்டண கழிப்பிடம் மற்றும் பேருந்து நுழைவு வரி ஆகியவற்றிற்கான கேட்பு ரத்து செய்யப்பட்டுள்ளது.
2. சேவை வரிக்கான அபராதத் தொகை ரத்து செய்யப்பட்டுள்ளது.
3. சேவை வரிக்கான கூடுதல் அபராதத் தொகை ரத்து செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் மேல்முறையீட்டு வழக்கின்படி திருத்தணி நகராட்சியின் எஸ்.எப்.சி திட்ட நிதியிலிருந்து வசூலிக்கப்பட்ட ரூ.13.33 இலட்சத்தில் ரூ.6.71 இலட்சம் மீள பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. (அபராதம் ரூ.6.61 இலட்சம் + கூடுதல் அபராதம் ரூ.0.10 இலட்சம்)

எனவே உரிய நிர்வாக ரீதியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு மத்திய ஆயத் தீர்வை மேல்முறையீட்டில் அனுமதித்தவாறு மத்திய ஆயத் தீர்வை ராணிப்பேட்டை சரக அலுவலகத்திலிருந்த ரூ.6.71 இலட்சம் மீள பெற்று நகராட்சி நிதிக்கு வரவாக்கப்பட வேண்டும்.

<u>பெறப்பட்ட பதிலுரை</u>

இவ்வலுவலக ந.க.எண் 12801 / நத4 / நாள் 16.05.2019 ன் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. 2014–15 முதல் 2016–17 ஆம் ஆண்டு முடிய நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சேவை வரிக்கு ஈடு செய்யப்பட்டது என்று ஆவணம் ஏதுமின்றி பதில் அளிக்கப்பட்டுள்ளது.

**3.14.6) கிருஷ்ணகிரி மாவட்டம் – கிருஷ்ணகிரி நகராட்சி – பல்வகை கேட்பு – சென்ற ஆண்டு நடப்பு கேட்பு தொகை 2016–17 நடப்பு கேட்பில் எழுப்பப்படாமல் விடுபட்டுள்ளது, இழப்பு தொகை ரூ. 6.65 இலட்சம் வசூலிக்கப்படல் வேண்டும்.**

**பத்தி எண்.34/2016–17**

2016–17 ஆம் தணிக்கையாண்டில் கடைகள் ஏலத்தொகை கேட்பு எழுப்பியுள்ளதை தணிக்கையில் ஆய்வு செய்தபொழுது 2015–16 ஆம் ஆண்டு கேட்பு எழுப்பப்பட்ட ஏலத்தொகையை 2016–17 ஆம் ஆண்டிற்கான கேட்பாக எழுப்பப்படாமல் விடுபட்டிருந்ததை தணிக்கையில் அறிய முடிந்தது. இதனால் நகராட்சிக்கு தொகை ரூ.6.65 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இவ்விழப்பு தொகை கேட்பில் வசூலித்து விவரம் தணிக்கைக்கு முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும்.

<u>பெறப்பட்ட பதிலுரை</u>

பதில் ஏதுவும் பெறப்படவில்லை.

**3.14.7) இராமநாதபுரம் மாவட்டம் – இராமேஸ்வரம் நகராட்சி – எம்.ஜி.ஆர் நகர் மற்றும் செம்மடம் வடக்கு சிமெண்ட் சாலை – ஒரே வங்கி கொடுப்பு சீட்டினை இருமுறை காண்பித்து இரு முறை தொகை தீர்வு செய்தது – நிதி இழப்பு ரூ.17.75 இலட்சம்.**

**பத்தி எண்.38/2016–17**

இராமேஸ்வரம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட எம்.ஜி.ஆர் நகர் மற்றும் செம்மடம் வடக்கு சிமெண்ட் சாலை பணிக்குரிய தொகை முறையே ரூ.9,83,959/– மற்றும் ரூ.9,91,780/– ஐ தீர்வு செய்வதற்காக வங்கி கொடுப்பு சீட்டு எண்கள் 251/23.10.2016 மற்றும் 253/26.10.2016 தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கான ஒப்பந்ததாரர் நடவடிக்கை சீட்டு எண்கள் 58 மற்றும் 59/21.10.2016 தயாரிக்கப்பட்டுள்ளது. மொத்த தொகை ரூ.19,75,739–ல் பிடித்தங்கள் ரூ.2,00,682/– போக நிகர தொகை முறையே ரூ.8,83,937/– மற்றும் ரூ.8,91,120/– முறையே யூனியன் பாங்க் காசோலை எண்கள்

2013064 மற்றும் 2013066–ன் வழி தீர்வு செய்யப்பட்டுள்ளது. இக்காசோலை ஒப்பந்ததாரர் திரு.வி.ஏ.இராமச்சந்திரன் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த வங்கி கொடுப்பு எண்களை 24.03.2017 அன்று செலவின புத்தகத்தில் பதிவு செய்து ஒப்பந்ததாரர் நடவடிக்கை சீட்டு ஏதும் தயாரிக்காமல், காசோலை எண்.2017068 மற்றும் 2017069 முறையே ரூ.8,83,937/– மற்றும் ரூ.8,91,120/– இரண்டாம் முறையாக ஒப்பந்ததாரர் திரு.வி.ஏ.இராமச்சந்திரன் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் நகராட்சியின் பொதுநிதிக்கு ரூ.17.75 இலட்சம் நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. மிகையாக வழங்கப்பட்ட தொகை இதற்கு பொறுப்பாளவர்களிடமிருந்து வசூலிக்கப்படுதல் வேண்டும்.

<u>பெறப்பட்ட பதிலுரை</u>

இவ்வலுவலக ந.க.எண் 12801 / நத4 / நாள் 16.05.2019 ன் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. பதில் ஏதும் பெறப்படவில்லை.

**3.14.8) இராமநாதபுரம் மாவட்டம் – இராமேஸ்வரம் நகராட்சி – சாலைகளில் கண்ணாடி இழை கேபிள் பதித்தல் – சாலை சீரமைப்பு கட்டணம் குறைவாக வசூலித்தது – வருவாய் இழப்பு ரூ.8.37 இலட்சம்**

**(பத்தி எண்கள்.25, 26)/2016–17**

அ) 2016–17 ஆம் ஆண்டில் இராமேஸ்வரம் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில், இந்திய கடற்படைக்காக NFS திட்டம் மூலம் OFC ( Optical Fibre Cable) கேபிள் நகராட்சி பகுதியில் இந்திய கடற்படைக்காக பணியினை மேற்கொண்ட Telecommunication Consultant India Limited (TCIL) 1850 மீட்டர் நீளத்திற்கு பதிக்க வரைபடத்துடன், 17.03.2015 அன்று அனுமதி கோரியுள்ளது. இராமேஸ்வரம் நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண்.603/2016/அ2/நாள்.18.10.2016–ன் வழி 1500 மீட்டருக்கு சாலை சீரமைப்பு கட்டணமாக ரூ.7.59 இலட்சம் செலுத்திடத் தெரிவித்துள்ளார். ஆனால் இந்நிறுவனம் 14.03.2017 அன்று ரூ.4.55 இலட்சம் மட்டுமே செலுத்தியுள்ளது. இதனால் ரூ.3.04 இலட்சம் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

ஆ) இந்நிறுவனம் 1850 மீட்டருக்கு OFC கேபிள் பதிக்க விண்ணப்பித்துள்ள நிலையில் 1500 மீட்டருக்குரிய தொகை மட்டுமே ஆணையர் தெரிவித்துள்ளார். மீதமுள்ள 350 மீட்டருக்குரிய ரூ.1.88 இலட்சம் கோராமையினால் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இ) JIO தொலை தொடர்பு நிறுவனம் 1073 மீட்டர் நீளத்துக்கு இப்பணியினை மேற்கொள்ள 05.02.2015 அன்றைய கடிதத்தில் கோரியுள்ளது. ஆனால் 400 மீட்டர் நீளத்திற்குரிய தொகை ரூ.1.91 இலட்சம் மட்டுமே வசூலிக்கப்பட்டது. மீதமுள்ள 673 மீட்டர் நீளத்திற்கு உரிய தொகை

ரூ.3.45 இலட்சம் வசூலிக்காமையினால் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. உப பத்தி (ஆ) மற்றும் (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை இதற்கு பொறுப்பானவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும்.

<u>பெறப்பட்ட பதிலுரை</u>

இவ்வலுவலக ந.க.எண் 12801 / நத4 / நாள் 16.05.2019 ன் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. பதில் ஏதும் பெறப்படவில்லை.

**3.14.9) அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் நகராட்சி – வருவாய் மற்றும் மூலதன நிதி பணிகள் மேற்கொண்டது – முன்பணம் வழங்க வகை செய்யப்படவில்லை – முன்பணம் வழங்கியது – நிலுவையாக உள்ள முன்பணம் வட்டியுடன் வசூலிக்கப்பட வேண்டும். முன்பணம் ரூ.102.27 இலட்சம் வட்டி 42.57 இலட்சம்.**

**பத்தி எண் 67/2016–17**

ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2016–17 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பணிகளுக்கு மொத்தம் ரூ.1,32,93,600/– முன்பணம் வழங்கப்பட்டுள்ளது காணப்பட்டது

| வ.எண் | செ.சீ.எண் / நாள் | எதற்காக வழங்கப்பட்டது | யாருக்கு வழங்கப்பட்டது | தொகை ரூ |
|---|---|---|---|---|
| | | | | ரூ. பை |
| 1 | 168/15.06.16 | SWM உள்கட்டமைப்பு வேலைக்கு | M/s தரணி கன்ஸ்ட்ரக்ஷன் | 7200000.00 |
| 2 | 174/21.06.16 | தனிநபர் இல்ல கழிவறை கட்ட | G.சேகர் ஒப்பந்தக்காரர் | 400000.00 |
| 3 | 261/21.07.16 | தெர்மோ பிளாஸ்டிக் தார்சாலை வேலைக்கு | சன் அட்வர்டைசிங் திருச்சி | 300000.00 |
| 4 | 262/21.07.16 | ஒளிரும் மின் பட்டைகள் அமைத்தல் வேலைக்கு | சன் அட்வர்டைசிங் திருச்சி | 393600.00 |
| 5 | 264/22.07.16 | நவீன மின் தகனமேடை அமைத்தல் | MHT இன்ஜினியரிங் சென்னை. | 1500000.00 |
| 6 | 276/27.07.16 | SWM உள்கட்டமைப்பு வேலைக்கு | M/s தரணி கன்ஸ்ட்ரக்ஷன் | 3500000.00 |

இப்பணிகளுக்கான கோப்பினை தணிக்கையில் ஆய்வு செய்ததில், ஒப்பந்தபுள்ளி அறிவிப்பிலோ, வேலை ஆணையிலோ ஒப்பந்த உடன்படிக்கையிலோ பணியினை மேற்கொள்வதற்கு ( Mobilisation Advance) வழிவகை செய்யப்படாமை காணப்பட்டது. முன்பணம் வழங்குவதற்கு வழிவகை செய்யப்படாத நிலையில் ரூ.1,32,93,600/– முன்பணமாக ஒப்பந்ததாரருக்கு வழங்கியது தவறாகும். இம்முன்பணத்தொகையில் ரூ.30,65,644// ஈடுசெய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள முன்பணத்தொகை ரூ.1,02,27,956/– ஈடுசெய்யப்படாமல் நிலுவையாக உள்ளது.

முன்பணம் வழிவகை செய்யப்படாமல் முன்பணம் வழங்கியது தவறு. எனவே, இம்முன்பணத்தொகைக்கு அரசு ஆணை எண்.208 / நிதித் (கடன் மற்றும் முன்பணங்கள் ) துறை நாள் 08.07.2016 ல் அறிவிக்கப்பட்ட வட்டி வீதமான ரூ.13.50 சதவீத அடிப்படையில் வட்டி இழப்பு கணக்கீடு செய்யப்பட்டது. இத்தொகை ரூ.42,50,654/– வசூலிக்கப்பட வேண்டும்.

<u>பெறப்பட்ட பதிலுரை</u>

இவ்வலுவலக ந.க.எண் 12801 / நத4 / நாள் 16.05.2019 ன் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு தெரிவிக்கப்பட்டது. பதில் ஏதும் பெறப்படவில்லை.

## 4. பேரூராட்சிகள்

### 4.1 பேரூராட்சிகள் நிர்வாக அறிமுகம்

இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில் தான் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இடையில் பேரூராட்சிகள் என்ற உள்ளாட்சி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.ஒரு நூற்றாண்டு பாரம்பரியம் மிக்கது பேரூராட்சி அமைப்பாகும். பொது மக்களின் அடிப்படை வசதிகளை கவனிப்பது பேரூராட்சிகளின் சிறப்பு பணியாகும். தமிழ்நாடு பேரூராட்சிகளில் சிறந்த கணக்குகளின் கட்டமைப்பும், தணிக்கை கட்டமைப்பும் செயல்படுகிறது.

நகராட்சி நிர்வாகத்துறை கட்டுப்பாட்டில் தமிழ்நாடு பேரூராட்சிகள் இயங்குகின்றன. பேரூராட்சிகள். மண்டலங்கள், தாலுக்காக்கள், புனித தலங்கள், சுற்றுலா மையங்கள், வியாபார தலங்கள், தொழிலகங்கள் அதிகமுள்ள இடங்களில் பேரூராட்சிகள் அமைந்துள்ளன.

இந்திய அரசியலமைப்பு சட்டத் திருத்தம் 73 மற்றும் 74–ன் வழி, 1993 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920ன் கீழ் கொண்டு வரப்பட்டது. மேற்கண்ட சட்டத்தில் பேரூராட்சிகளுக்கு என தனியான பிரிவு சேர்க்கப்பட்டது. ஆனால் பேரூராட்சிகள் என்ற பெயரில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. பேரூராட்சிகளின் இயக்குநரின் நிர்வாக கட்டுப்பாடு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டது.

### 4.2 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை விவரம் (2011)

2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்தம் 528 பேரூராட்சிகளில் 21,09,317 குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் மொத்தம் 80,90,847 மக்கள் வசிக்கின்றனர். இதில் ஆண்கள் 40,29,486 பெண்கள் 40,61,361 பேர்கள் உள்ளனர்.

### 4.3 பேரூராட்சிகள் வகைப்பாடு

பேரூராட்சிகள் அவற்றிற்கு கிடைக்கும் சொந்த வருமானத்தின் அடிப்படையில் அரசு ஆணை (நிலை) எண்.142, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(TPII) துறை நாள்.21.11.2014 மற்றும் அரசிதழ் எண்.9/02.03.2016–ன் படி பின்வரும் வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

| தரம் | சராசரி ஆண்டு வருமானம் | எண்ணிக்கை 2016–17 |
|---|---|---|
| சிறப்பு நிலை | 200 லட்சத்திற்கு மேல் | 64 |
| தேர்வு நிலை | 100 லட்சத்திற்கு மேல் 200 லட்சத்திற்குள் | 202 |
| நிலை I | 50 லட்சத்திற்கு மேல் 100 லட்சத்திற்குள் | 200 |
| நிலை II | 50 லட்சத்திற்குள் | 62 |
| | மொத்தம் | 528 |

**4.4 பேரூராட்சிகளின் குறிக்கோள் மற்றும் இலக்கு**

1. வெளிப்படையான, பொறுப்பேற்கக்கூடிய, பொதுமக்களுடன் நல்லுறவுடைய, நிர்வாகத்தினை அளித்தல்.
2. பொதுமக்களிடம் தன்னம்பிக்கையினை உயர்த்தும் வகையில் சீரான நிர்வாகத்தை அளித்தல்.
3. அரசு திட்டங்கள் மக்களுக்கு சென்றடையும் விதத்தில் செம்மையான நிர்வாகத்தினை அளித்தல்.

**4.5 நிர்வாக அமைப்பு**

பேரூராட்சிகளின் நிர்வாக அமைப்பு பின்வருமாறு உள்ளது.

அரசு செயலர் (நநி & குவ)
↓
பேரூராட்சிகளின் இயக்குநர்
↓
மாவட்ட ஆட்சித் தலைவர்
↓
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர்
↓
செயல் அலுவலர்

**4.6 பேரூராட்சிகள் நிர்வாகம்**

பேரூராட்சிகளின் நிர்வாகத்தினை மேற்கொள்வது நிர்வாக அலுவலர் (Executive Officer) ஆவார். அவருக்கு உதவி புரிய, தலைமை எழுத்தர், இளநிலை உதவியாளர், வருவாய் உதவியாளர், தட்டச்சர் மற்றும் தொழில்நுட்ப பிரிவு அலுவலர்கள் ஆவார்கள். பேரூராட்சி நிர்வாகத்திற்குத் தேவையான பதிவேடுகள் பராமரித்தல், கணக்குகள் பராமரித்தல், வரி இனங்களை வசூலித்தல்,

வரிவிதிப்பு செய்தல், சொத்துக்களை பராமரித்தல் மற்றும் திட்டங்களை அமல்படுத்துதல் [illegible] நிர்வாகிகளின் வேலைகளாகும்.

### 4.7 பேரூராட்சிகளின் பணிகள்

I. அடிப்படை வசதிகளை செய்தல்

1. சாலைகள்
2. தெருவிளக்கு
3. குடிநீர் விநியோகம்
4. பொது சுகாதாரம்
5. வடிகால்

II. வரிவிதிப்பு செய்தல்

1. சொத்துவரி
2. காலிமனை வரி
3. தொழில் வரி
4. வரியில்லா இனங்கள்
5. குடிநீர் கட்டணம்

III. 1. மனை பிரிவு அங்கீகரித்தல்

2. கட்டிட உரிமம் வழங்குதல்
3. அபாயகரமான தொழில் உரிமம் வழங்குதல்
4. பிறப்பு இறப்பு சான்று வழங்குதல்
5. மத்திய / மாநில திட்டங்களை செயலாக்கம் செய்தல்

### 4.8 <u>பேரூராட்சியின் வருவாய்</u>

ஒரு பேரூராட்சியின் வருவாய் பல்வேறு வழிகளில் பெறப்படுகிறது.

1. சொத்துவரி
2. தொழில் வரி
3. உரிமக் கட்டணம், குத்தகை, வாடகை, குடிநீர் கட்டணம்
4. முத்திரைத்தாள் வரி
5. மாநில பகிர்வு நிதி மான்யம்
6. இதர இனங்களான முதலீட்டின் மீதான வட்டி, வங்கி வட்டி போன்றவை
7. அரசு மான்யங்கள்

## 4.9 பேரூராட்சியில் அளிக்கப்படும் சேவைகள்

1. குடிநீர் இணைப்பு
2. கட்டிட உரிமம் வழங்குதல்
3. தொழில் உரிமம் வழங்குதல்
4. பிறப்பு இறப்பு சான்றிதழ் வழங்குதல்
5. சொர்ண ஜெயந்தி திட்டம்
6. அடிப்படை வசதிகள் செய்தல்
7. கணினி மயமாக்குதல்

## 4.10 பேரூராட்சிகளின் 2016–17 வரவு செலவு விவரம்

தமிழ்நாட்டிலுள்ள 528 பேரூராட்சிகளின் 2016–17 ஆம் ஆண்டு தொகுக்கப்பட்ட கணக்குகளின்படி அதன் வரவு–செலவு மற்றும் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் விவரம் பின்வருமாறு உள்ளன.

**வரவினம்**

| வ.எண் | வரவினம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சொத்துவரி | 13635.93 |
| 2 | இதர வரவினம் | 7951.77 |
| 3 | வருவாய் | 14163.93 |
| 4 | மாநில பகிர்வு நிதி மான்யம் | 79589.77 |
| 5 | சேவை கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் | 16128.23 |
| 6 | மான்யம் மற்றும் பங்குத்தொகை | [illegible]63.70 |
| 7 | விற்பனை மற்றும் வாடகை வரவினம் | 3296.49 |
| 8 | இதர வருவாய் | 24107.14 |
| 9 | நிகர திரண்ட பற்றாக்குறை<br>திரண்ட பற்றாக்குறை = 49965.16<br>திரண்ட உபரி = 2138.61<br>நிகர திரண்ட பற்றாக்குறை = 47826.55 | 47826.55 |
| | **மொத்தம்** | **240263.51** |

## செலவினம்

| வ.எண் | செலவினம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பணியாளர் ஊதியச் செலவு | 36096.49 |
| 2 | இதர செலவுகள் | 1517.46 |
| 3 | ஓய்வூதியப் பலன்கள் | 5597.97 |
| 4 | இயக்கச் செலவுகள் | 41636.72 |
| 5 | பழுதுப்பார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவுகள் | 26327.12 |
| 6 | திட்டச் செலவினம் | 30124.98 |
| 7 | நிர்வாகச் செலவினம் | 17454.14 |
| 8 | நிதிச் செலவினம் | 4637.57 |
| 9 | தேய்மானம் | 76871.06 |
| | **மொத்தம்** | **240263.51** |

## சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் விவரம்

### சொத்துக்கள்

| வ.எண் | சொத்துக்கள் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நிலையான சொத்துக்கள் | 947271.27 |
| 2 | ரொக்கம் மற்றும் வங்கியிருப்பு | 110688.32 |
| 3 | இருப்புகள் | 4183.72 |
| 4 | வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூலிக்க வேண்டியவை | 22156.56 |
| 5 | பணியாளர் முன்பணம் | 2368.41 |
| 6 | இதர முன்பணம் | 24757.22 |
| 7 | முதலீடு மற்றும் வட்டி | 8497.48 |
| 8 | நிகர திரண்ட பற்றாக்குறை<br>திரண்ட பற்றாக்குறை = 199170.03<br>திரண்ட உபரி = 22821.67<br>நிகர திரண்ட பற்றாக்குறை = 176348.36 | 176348.36 |
| | **மொத்தம்** | **1296271.34** |

பொறுப்புகள்

| வ.எண் | பொறுப்புகள் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மான்யம் மற்றும் பங்குத்தொகை | 701566.40 |
| 2 | கடன்கள் | 18924.62 |
| 3 | கடன் மீதான வட்டி | 6217.85 |
| 4 | ஊதியம் பிடித்தங்கள் | 1074.34 |
| 5 | கொடுக்கப்படவேண்டிய கணக்குகள் | 6141.63 |
| 6 | வைப்புத் தொகை திருப்ப வேண்டியவை | 27557.29 |
| 7 | பிடித்தம் செய்த வரிகள் செலுத்த வேண்டியவை | 8969.42 |
| 8 | இதர பொறுப்புகள் | 32499.09 |
| 9 | இதர வங்கியிருப்புகள் | 2402.42 |
| 10 | திரண்ட தேய்மானம் | 490918.28 |
| | **மொத்தம்** | **1296271.34** |

தணிக்கை ஆண்டின் முடிவில் சொத்துவரி மற்றும் கட்டணங்கள் ரூ.22156.56 இலட்சம் வசூலிக்கப்படாமல் நிலுவையாக உள்ளது. சுய வருவாய் என்பதால் இதனை வசூலிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் நிதிப்பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்பு உள்ளது என தணிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது. அதே போன்று முன்பணங்கள் ரூ.24757.22 இலட்சம் வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ளதும் தவிர்க்கப்படவேண்டும்.

பொறுப்புகள் தலைப்பில் பிற கணக்குகளில் செலுத்தப்படவேண்டிய வரி இனங்கள் ரூ.8969.42 இலட்சம் செலுத்தப்படாமல் உள்ளது. இதனை உரிய கணக்குகளில் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

**4.11 கணினி வழி வரியினங்கள் வசூலித்தல் மற்றும் கணக்குகள் பராமரித்தல்**

**குறைபாடுகள்**

பேரூராட்சி நிர்வாகத்தின் கீழுள்ள 528 பேரூராட்சிகளில் வரி வசூலித்தல் மற்றும் கணக்குகள் பராமரித்தல் பணியானது 2013–14 ஆம் ஆண்டிலிருந்து Primatix Software Solutions என்ற தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தனியார் நிறுவனத்திடம் இப்பணியை ஒப்படைப்பதற்கான அரசாணை ஏதும் இல்லை. மேலும் கணக்குகள் துணை பதிவேடுகள் மற்றும் கேட்பு நிலுவை பதிவேடுகள் முடிக்கப்பட்டு நிலுவை இனங்கள் கணினியில் கேட்பாக பதியப்படாமையினால் கணினி வழி கேட்பு வசூல் நிலுவைக்கும் ஆண்டு கணக்கின் படியான கேட்பு

[illegible] கணக்குகள் [illegible]

[illegible] வருமான [illegible]

[illegible]

2008 ஆம் ஆண்டு [illegible] 30% [illegible]

[illegible] நகராட்சி நிர்வாகத்தால் நகராட்சிகளில் [illegible] ஆதாயமளிக்கும் [illegible] மென்பொருளை பயன்படுத்தி [illegible] செயல்படுத்த வேண்டுமென தணிக்கையில் [illegible].

4.12 தணிக்கையில் கண்டறியப்பட்ட குறைபாடுகள்

2016 [illegible] தணிக்கை பேரூராட்சி 528 பேரூராட்சிகளில் மேற்கொண்ட போது [illegible] குறைபாடுகளில் ஒரு சிலவற்றை மட்டும் 2014 ஆம் வருட உள்ளாட்சி நிதி [illegible] 20-ன் படி அரசின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு [illegible].

4.12.1 [illegible] 2015-16 [illegible]

[illegible]

பெறப்பட்டுள்ள நிலையில் மொத்தம் ரூ.33,27,067/-க்கு மட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டின் படியான முழுமையான பணி முடிக்கப்படவில்லை – மேலும் பணி மேற்கொள்ளாத மதிப்பிற்கு உரிய விகிதாச்சார அரசு மான்யம் (Proportionate) ரூ.8,19,737/- அரசுத் தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். மேலும் பணியினை முறைப்படுத்தப்பட வேண்டும்.

(பத்தி எண்.22/2016–17)

| | | |
|---|---|---|
| 1 | செலவு சீட்டு எண் / நாள் | 288 / 13.01.2017 |
| 2 | பணி விவரம் | SRP – 2015–16 சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் |
| 3 | மதிப்பீடு | ரூ.50 இலட்சங்கள் |
| 4 | திட்ட நிதி ஆதாரம் | அரசு மான்யம் – ரூ.24,50,000/–<br>பேரூராட்சி பங்கு தொகை – ரூ.25,50,000/–<br>மொத்தம் – ரூ.50,00,000/– |
| 5 | பணி முடிவறிக்கையின்படி பணி செய்யப்பட்டுள்ள மதிப்பு (As per completion report) | ரூ.33,27,067/- |
| 6 | ஒப்பந்ததாரர் | திரு.சி.அசோக் |

மேற்காணும் SRP – 2015–16 திட்டத்தில் இப்பேரூராட்சியின் வார்டு எண்கள் 1,2,3,4,5,6,9,10,11,13 மற்றும் 14–ல் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல் பணிக்கு ரூ.50 இலட்சங்கள் மதிப்பில் பேரூராட்சிகள் இயக்குநரின் ROC.5879/2015/B5, நாள் 7.9.2015–ன் படி நிர்வாக அனுமதியும், பேரூராட்சி இயக்குநரக கண்காணிப்பு பொறியாளரின் ந.க.எண்.5879/2015/ஆ5, நாள் 16.9.2015ன்படி தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளன. இவ்வனுமதிகளின்படி 1750 மீ நீளத்திற்கு சிமெண்ட் சாலைகள் அமைக்க ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேற்காணும் அரசும், பேரூராட்சியும் இணைந்து ரூ.50,00,000/-(ரூ.24,50,000+ ரூ,25,50,000) நிதி ஒதுக்கீடும் செய்துள்ளன.

இந்நிலையில் இப்பணியின் பணி முடிவறிக்கை (Completion Report) மற்றும் அளவு புத்தகங்களின்படி 996 மீட்டர்கள் நீளத்திற்கு மட்டும் சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டு ரூ.33,27,067/- மட்டும் செலவிடப்பட்டுள்ளது.

ஆனால் இப்பணிக்காக அரசு மானியமாக ரூ.24,50,000/- ம் இப்பேரூராட்சியால் பெறப்பட்டுள்ளது. ஆனால் அரசு மானியத்திற்குரிய 100% பணியானது மேற்கொள்ளப்படவில்லை. இதனால் கீழ்க்காணும் விவரப்படி விகிதாச்சார அளவின்படி செய்யப்பட்ட பணிக்குரிய மான்யம்

மட்டும் இப்பணிக்கு பயன்படுத்தப்பட்டு மீதியுள்ள அரசு மான்யம் தொகை ரூ.8,19,737/- உரிய அரசுத் தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

பணி முடிவறிக்கையின்படி (As per Completion Report) செய்யப்பட்ட பணிக்குரிய அரசு மான்யம் தகுதி கணக்கீடு

| | | | |
|---|---|---|---|
| 1. | மொத்த திட்ட மதிப்பீடு (SRP-2015-16) | : | ரூ.50,00,000/- |
| 2. | நிதி ஆதாரம்:<br>1. அரசு மான்யம்<br>2. பேரூராட்சி பங்கு | : | <br>ரூ.24,50,000/-<br>ரூ.25,50,000/-<br>------------------<br>ரூ.50,00,000<br>------------------ |
| 3. | பணி முடிவறிக்கையின் படி பணி செய்யப்பட்டுள்ள மதிப்பு (As per completion report) | | ரூ.33,27,067/- |
| 4. | எனில் செய்யப்பட்ட பணிக்கு தகுதியான அரசு மான்யம் | | 2450000 x 3327067<br>5000000<br>=ரூ.16,30,263/- |
| 5 | 100 சதவீதம் பணி முடிக்கப்படும் பொருட்டு அரசிடமிருந்து பெறப்பட்ட மானியம் | | ரூ.24,50,000/- |
| 6 | செய்யப்பட்ட பணிக்குரிய தகுதிமான்யம் | | ரூ.16,30,263/- |
| 7 | எனில் கூடுதலாக அரசிடமிருந்து பெறப்பட்ட மான்யம் | | ரூ. 8,19,737/- |

<u>பெறப்பட்ட பதிலுரை:</u>

மிகை மான்யம் அரசு நிதியில் செலுத்தப்படாமல் மாவட்ட ஆட்சியரின் பின்னேற்பு பெற்று காண்பிக்கப்பட்டுள்ளது. பதில் ஏற்புடையது அல்ல.

**4.12.2. நாமக்கல் மாவட்டம் – நாமகிரிப்பேட்டை பேரூராட்சி – செலவுகள் – பேரூராட்சி நிதியிலிருந்து செலவுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன – ஆனால் செய்யப்பட்டுள்ள செலவுகளுக்கு பேரூராட்சி மன்ற அனுமதி மறுக்கப்பட்டுள்ளது – பேரூராட்சி மன்றம் அனுமதி மறுக்கப்பட்ட செலவுகளை உயர் அலுவலர்கள் நிர்வாக ரீதியில் ஆய்வு செய்து முறைப்படுத்த வேண்டும் – குறைபாடு ரூ.19.79 இலட்சம்.**

**பத்தி எண்.19/2016–17**

2016-17 ஆம் ஆண்டு தணிக்கையின் போது திருப்பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்ட வெளியேற்றம் பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலைப் பெறாமல் தணிக்கையில் நிர்வாக இயக்குநரின் ஒப்புதல் பெற்று பொது நிதியில் ரூ.19.79 இலட்சம் மதிப்பிலான செலவினங்கள், மன்ற தீர்மான எண் 344(1) நாள் 09.09.2016 மற்றும் தீர்மான எண்.353(20) நாள் 09.09.2016-ன் வழி மன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தால் நிராகரிக்கப்பட்ட நிகழ்வின் மன்ற தீர்மானத்தை ரத்து செய்யும் அதிகாரம் பேரூராட்சிகளின் ஆணையாளர் என்ற முறையில் பேரூராட்சிகள் இயக்குநருக்கு மட்டுமே உள்ளது. இதுநாள் வரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

<u>பொறுப்பு பதிலுரை:</u>

பேரூராட்சிகளின் இயக்குநர் மன்ற தீர்மானத்தை ரத்து செய்த ஆணை நகல் பெற்று பதில் அளிக்கப்படவில்லை.

**4.12.3.** தொண்டி பேரூராட்சி – வரவுகள் – தினசரி நாளேட்டின் படியான வரவுகள் – வங்கியில் தொகை இருப்பு செய்யும் போது பேரூராட்சி பணியமைப்பை சாராத மூன்றாம் நபர் தொகையினை செலுத்த அனுமதித்தது – பொறுப்பான பணியாளர் மீது நிர்வாக நடவடிக்கை தேவை – ரூ.21,49,634/-

**பத்தி எண்.12/2016–17**

தொண்டி பேரூராட்சியின் நிதியாண்டு 2016-17ஆம் ஆண்டு தணிக்கை 28.2.2018 முதல் 14.3.2018 வரை மேற்கொள்ளப்பட்டது. 1.6.2017 முதல் 14.3.2018 வரையிலான வசூல் வரவினங்களை சரிபார்த்து வங்கியில் இருப்பு செய்ததை தணிக்கை செய்ததில் வரவு பதிவேட்டினை தணிக்கையில் கோரிய போது அளிக்கப்படவில்லை. தணிக்கை கடிதம் எண் 1/2.03.2018 மற்றும் 3/6.03.2018-இன் வழி செயல் அலுவலரை வங்கி புத்தகத்தினை அளிக்க கோரியதில், இருப்பு செய்யப்பட்டுள்ள மொத்தம் ரூ.21,49,634/- இளநிலை உதவியாளரால் வங்கியில் செலுத்தாமல் கையாடல் செய்யப்பட்டது தெரிவிக்கப்பட்டது.

| | |
|---|---|
| வங்கி கணக்கு எண் 4585 பேங்க் ஆப் இந்தியா | ரூ. 6,57,634 |
| வங்கி கணக்கு எண் 575411 ஐ.டி.பி.ஐ வங்கி | ரூ. 14,92,000 |
| | ரூ. 21,49,634 |

பின்னர் வங்கியுடன் சரிபார்க்கப்பட்டு பின்னர், தொகை வசூல் செய்யப்பட்டது.

தொண்டி பேரூராட்சியின் செயல் அலுவலர் கடித ந.க.எண்.141/2017 நாள் 6.3.2018ன்படி விளக்கம் கோரப்பட்டதின்பேரில், 12.3.2018 அன்று இருப்பு புத்தகத்தினை சார்ந்த பேரூராட்சிக்கு

சம்பந்தமில்லாத திரு.கலந்தர்பாட்சா என்பவர் கணக்கு மூலம் காசோலை எண்.248277 மற்றும் காசோலை எண் 248278 மூலம் ரூ.17,42,000 பெறப்பட்டு 12.3.2018 அன்று செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையும் ரூ.4,07,634 மற்றும் வட்டித் தொகை ரூ.44,690/- திருமதி.வசுமதி என்பவரால் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கு பொறுப்பான இளநிலை உதவியாளர் திருமதி.குணசேகரி அவர்கள், மீது இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.மு.ந.க.எண்.1075/2018/டி2 நாள் 10.7.2018ன் வழி தமிழ்நாடு குடிமைப்பணிகள் விதிகள் 17(ஆ) -ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பேரூராட்சிக்கு சம்பந்தப்படாத மூன்றாம் நபர்கள் இத்தொகையினை செலுத்துவதற்கு அனுமதி தந்தது தவறான செய்கையாகும். இவ்வாறான தவறான நடைமுறைக்கு செயல் அலுவலரும் காரணம் என்பதால் நிர்வாக ரீதியாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

<u>பெறப்பட்ட பதிலுரை:</u>

பதில் ஏதும் பெறப்படவில்லை.

**4.12.4. கன்னியாகுமரி மாவட்டம் – அஞ்சு கிராமம் பேரூராட்சி – தொழிலாளர் நலநிதித் தொகை உரிய கணக்கில் செலுத்தாமல் பேரூராட்சி கணக்கில் முடக்கப்பட்டுள்ளது – ரூ.9.07 இலட்சம் – தணிக்கை தடை எழுப்பிய பின் தொகை செலுத்தப்பட்டது.**

**பத்தி எண்.44/2016–17**

பேரூராட்சியில், கட்டிட உரிமம் வழங்கும் போதும், வேலைகளுக்கான பட்டியல்களை தீர்வு செய்யும் போதும் அரசு ஆணை (நிலை) எண். 295/தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 17.12.2013–ன் படி வசூலிக்கப்பட்ட, பிடித்தம் செய்யப்பட்ட தொழிலாளர் நல நிதித் தொகையினை உடனுக்குடன் அதற்கான தலைப்பில் செலுத்தாமல் பேரூராட்சி கணக்கில் கணக்கு குறியீடு எண்.4036–ல் ரூ.9.07 இலட்சம் வைக்கப்பட்டுள்ளது காணப்பட்டது. இதனால் தொழிலாளர் நல வாரியத்திற்கு ரூ.9.07 இலட்சம் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

<u>பெறப்பட்ட பதிலுரை</u>

இவ்வலுவலக ந.க.எண்.2607/பேத(1)/2019, நாள்:14.05.2019–ன்வழி பேரூராட்சிகளின் இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டடது. அதன்பின் 04.07.2019 அன்று வங்கி வரைவோலைகள் எண்.118040188, 118040195 மற்றும் 118040213–ன் வழி தொழிலாளர் நல வாரியத்திற்கு செலுத்தப்பட்டு தொழிலாளர் நலவாரியத்தால் 05.07.2019 அன்று வங்கி வரைவோலைகள் பெற்று கொண்டமைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. பத்தி நீக்கம் செய்யப்பட்டது.

**4.12.5. விருதுநகர் மாவட்டம் – வத்ராயிருப்பு பேரூராட்சி – தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் கட்டமைப்பு திட்டம் மற்றும் சிறப்புச் சாலைகள் திட்டம் – 2010–ன் கீழ் ஒதுக்கீடுகள் அரசிடமிருந்து பெறப்பட்டது – 2013–14–க்குப் பின்னர் நாளது தேதி வரை எந்த ஒரு வரவு – செலவும் மேற்கொள்ளாதது – உரிய அரசு தலைப்பில் மீள செலுத்தப்படல் வேண்டும் – தொகை ரூ.24.92 இலட்சம்.**

**பத்தி எண்.57/2016–17**

அ) விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு பேரூராட்சியில், சிறப்புச் சாலைகள் – 2010 என்ற பெயரில் யூனியன் வங்கிக் கிளையில் சேமிப்பு கணக்கு எண்.335602011109890, 23.02.2011 அன்று தொடங்கப்பட்டு இத்திட்டத்திற்கென ரூ.80.00 இலட்சம் பெறப்பட்டு இக்கணக்கிற்கு வரவாக்கப்பட்டுள்ளது. பின்னர் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் கட்டமைப்பு திட்டம் (TURIP) 2013–14 மற்றும் 2014–15–ன் கீழ் 90:10 என்ற நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.46,98,000/– பெறப்பட்டு இதே வங்கிக் கணக்கிற்கு வரவாக்கப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்த வங்கிக் கணக்கில் 2013–14 ஆம் ஆண்டிற்குப் பின்னர், நாளது தேதி வரை எந்த ஒரு வரவு செலவும் மேற்கொள்ளப்படாமல், 31.03.2018 அன்று ரூ.24,92,329/– இருப்பாக உள்ளது. இந்தத் தொகையில், அரசு மானியத் தொகை இருப்பிற்கு ஈட்டப்பட்ட வங்கி வட்டி வரவு ரூ.7,40,630/– ஆகும். இத்தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் கட்டமைப்பு திட்டக் (டுரிப்) கணக்கில் மீள செலுத்தி விபரம் தணிக்கைக்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.

**ஆ) மீதம் உள்ள இருப்புத் தொகை ரூ.17,51,699/–ம் இத்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் சேமிப்பு தொகையா ? அல்லது பிற தொகையா ? என்ற விபரம் தணிக்கைக்கு தெரிவிக்க வேண்டும் தொகை மேற்கொள்ளப்பட்ட பணிகள் இருப்பின், இதனை சம்பந்தப்பட்ட திட்டக் கணக்கில் மீள செலுத்தி விபரம் தணிக்கைக்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.**

<u>பெறப்பட்ட பதிலுரை:</u>

இடைக்காலப் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

**4.12.6. அரியலூர் மாவட்டம் – உடையார்பாளையம் பேரூராட்சி – பல்வகைக் கேட்பு – 2016–2017 ஆம் ஆண்டிற்கு புதிய பேருந்து நிலைய கடைகள் ஏலம் விடப்படாதது – ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.**

**பத்தி எண்.18 (கோப்பு–36/2010) /2016–17**

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் பேரூராட்சி புல எண்.184/5–ல் ரூ.80.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையத்துடன் கூடிய 10 கடைகள் 1 உணவு விடுதி மற்றும் 1 கட்டண

கழிவறை ஆகியவை கட்டப்பட்டுள்ளன. இந்த கடைகள், உணவகம் மற்றும் நவீன கட்டண கழிவறைகள் 17.03.2010–ல் குத்தகை ஏலம் விடப்பட்டது. இந்த குத்தகை நிர்ணயம் இப்பேரூராட்சி மன்ற தீர்மானம் எண்.213/28.04.2010–ன் படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இக்கடைகள் 2010–11 முதல் 2012–13 முடிய உள்ள மூன்றாண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்படுவதாக செயல் அலுவலர் ந.க.எண்.36/2010 நாள்.06.04.2010–ன் படி சம்பந்தப்பட்ட ஏலதாரர்களுக்கு குத்தகை அனுமதி வழங்கி ரூ.20/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் உறுதிமொழி எழுதிக்கொடுக்க உத்திரவிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இக்கடைகளுக்கு 2011–12 முதல் 2012–13 வரை கேட்பு எழுப்பப்பட்டன.

2012–13 ஆம் ஆண்டுடன் ஏலம் முடிவடைந்தது. மீண்டும் 30.11.2015–ல் கடைசியாக ஏலம் விடப்பட்டது, தணிக்கையின் போது அறியப்பட்டது. அப்பொழுது ஏலதாரர்கள் மாதம் ஒன்றிக்கு அவர்களின் பெயருக்கு எதிரில் உள்ள தொகையை ஏலம் கோரிய வகையில் மாதம் 1–ற்கு (ரூ.7450x12) வாடகைக்கு ஏலம் விடப்பட்டு உள்ளது. கடை ஒன்றிற்கு ரூ.2000/– வீதம் வைப்புத் தொகை பெறப்பட்டு (4018)–ல் வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஏலதாரர்கள் மேற்காணும் கடைகளை நடத்தாமல் செலுத்த வேண்டிய தவணைத் தொகையை செலுத்தாமல் உள்ளனர். இதனால் பேரூராட்சிக்கு தணிக்கை ஆண்டில் ரூ.89,400/– இழப்பாகும். இதனால் இவர்களின் வைப்புத்தொகை கணக்கில் இருப்பிலுள்ள வைப்புத்தொகையை திருப்பி தராமல் பேரூராட்சி கணக்கில் வரவெடுக்கப்பட வேண்டும். மீதமுள்ள தொகை பெறப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2010 ஆம் ஆண்டில் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட இப்பேருந்து நிலையம் மற்றும் கடைகளுக்கான டுபிட்கோ நிறுவனத்திடம் பெற்ற ரூ.35 இலட்சம் கடனுக்காக தணிக்கையாண்டில் மட்டும் ரூ.3,96,849/– (அசல் ரூ.3,52,941 + வட்டி ரூ.43,908) செலுத்தப்பட்டுள்ள நிலையில் இக்கடைகளிலிருந்து இதுநாள் வரை எந்த வருமானமும் பேரூராட்சிக்கு கிடைக்கப் பெறவில்லை. எனவே இதிலிருந்து வருமானம் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

<u>பெறப்பட்ட பதிலுரை:</u>

இவ்வலுவலக ந.க.எண்.2607/பேத1/2019, நாள்:14.05.2019–ன் வழி பேரூராட்சிகளின் இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற இடைக்கால பதில் அளிக்கப்பட்டுள்ளது.

**4.12.7. தஞ்சாவூர் மாவட்டம் – அய்யம்பேட்டை பேரூராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. புதிய கட்டிடத்தில் அலுவலகம் செயல்படாமல் பழைய கட்டிடத்தில் செயல்பட்டு வருவது குறைபாடு.**

**பத்தி எண்.17/2016–17**

தஞ்சாவூர் மாவட்டம், அய்யம்பேட்டை தேர்வு நிலை பேரூராட்சிக்கு போதிய இடவசதி இன்மையால் புதிய அலுவலகம் கட்டிடம் கட்டுவதற்கு மாநில பகிர்வு நிதியிலிருந்து ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் சாந்தி நகரில் புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு தொகை அனுமதிக்கப்பட்டு இதற்கான பணிகள் அனைத்தும் முடிந்து விட்டது. ஆனால் பேரூராட்சி அலுவலகம் இது நாள் வரை புதிய கட்டிடத்திற்கு மாற்றப்படாமல் பழைய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. தற்போது புதிய அலுவலக கட்டிடத்தில் அய்யம்பேட்டை காவல் நிலையம் இயங்கி வருகிறது. மன்ற தீர்மானத்தின் படி காவல் நிலையத்திற்கு வாடகைக்கு விடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. பேரூராட்சிகளின் இயக்குநரின் அனுமதியில்லாமல் காவல் நிலையத்திற்கு வாடகைக்கு விடப்பட்டது தவறாகும். மேலும் இதுநாள் வரை காவல் துறையிலிருந்து வாடகை ஏதும் பெறப்படவில்லை. மேலும் புதிய அலுவலக கட்டிடத்தில் காவல் நிலையம் செயல்பட்டு வரும் காலங்களுக்கு பொதுப்பணித்துறையின் சதுர அடி மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை வசூலிக்க வேண்டுமென தணிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. மேலும் காவல் நிலையத்திற்கு விடப்பட்டதற்கு பேரூராட்சி இயக்குநரின் பின்னேற்பு ஆணை பெறப்பட வேண்டும்.

**கோப்பு எண் ந.க.எண்.469/அ1/2011 (குறிப்பு)**

செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை கூட்ட (கு&ப) கோட்டம், தஞ்சாவூர் கடித ந.க.எண்.483/கோ 203–1 2013/இவஅ2/ நாள்.30.08.2013–ன் படி, மாத வாடகை ரூ.16,700/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் 01.02.2012 முதல் 31.01.2015 முடிய வாடகை தொகையாக ரூ.16,700/– வீதம் (36 மாதங்களுக்கு ரூ.6,01,200/–) தஞ்சாவூர் மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் அலுவலக ந.க.எண்.ஹச்2/33609/2014 நாள்.17.10.2016–ன் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. 11.03.2017 அன்று கட்டிடம் காலி செய்யப்பட்டுள்ளதாக காவல் ஆய்வாளர் அய்யம்பேட்டை வட்ட அலுவலகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே மீதமுள்ள 01.02.2015 முதல் 11.03.2017 முடிய உள்ள காலத்திற்கு வாடகை கோரி பெறப்பட்டு பேரூராட்சி நிதியில் வரவு எடுக்கப்பட்டு அதன் விபரம் தணிக்கைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

<u>பெறப்பட்ட பதிலுரை:</u>

இவ்வலுவலக ந.க.எண்.2607/பேத1/2019, நாள்:14.05.2019–ன் வழி பேரூராட்சிகளின் இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. பேரூராட்சிகளின் இயக்குநர் தனது ந.க.எண்.5509/2019/ஊ2, நாள்:15.07.2019–ன் வழி அளித்துள்ள பதிலுரையில் அரசுத் துறை என்பதால் நீக்கம் செய்து தர கோரியுள்ளார். பேரூராட்சிக்கு இழப்பு என்பதால் பதில் ஏற்புடையது அல்ல.

## 5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை – மாவட்ட ஊராட்சி

பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் மூன்றடுக்குகளாக செயல்படுகின்றன. மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி என்ற மூன்றடுக்கில் நிர்வாகம் செயல்படுகிறது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 32 மாவட்டங்களில் சென்னை மாவட்டம் நீங்கலாக 31 மாவட்ட ஊராட்சிகள் செயல்படுகின்றன. மாநில அரசாங்கத்தினால் விடுவிக்கப்படுகின்ற மாநில பகிர்வு நிதி மான்யம் மாவட்ட ஊராட்சியில் பெறப்பட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் கிராம ஊராட்சிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு திட்டங்கள் செயல்படுவது கண்காணிக்கப்படுகிறது.

மாவட்ட ஊராட்சிகளின் மீதான தணிக்கை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினால் மேற்கொள்ளப்படும் சட்ட பூர்வமான தணிக்கையாகும்.

31 மாவட்ட ஊராட்சிகளின் கணக்குகளின் மீதான 2016–17 ஆம் ஆண்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவையின்றி முடிக்கப்பட்டுள்ளது.

2016–17 ஆம் ஆண்டில் மாநில நிதிக்குழு மான்யம் ரூ. 24845.64 இலட்சங்கள் பெறப்பட்டுள்ளன.

2016–17 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியங்களுக்குரிய மாநில நிதிக்குழு மான்யத் தொகையாக ரூ.12957.70 இலட்சங்கள், மாநில நிதிக்குழு பணிகளுக்காக ரூ.12024.66 இலட்சங்கள் விடுவிக்கப்பட்டுள்ளது.

தணிக்கை ஆண்டின் துவக்கத்தில் ரூ.16179.17 இலட்சம் ஆரம்ப இருப்பாக உள்ளது. 31.03.2017 அன்றைய தேதிய முடிவு இருப்பு ரூ.16190.71 இலட்சங்கள் உள்ளன. கொடுபடா மான்யத்திற்கான விவரம் இல்லை.

தணிக்கை ஆண்டில், தணிக்கை ஆண்டு மற்றும் அதற்கு முன் பணிகளுக்காக விடுவிக்கப்பட்ட மான்யத் தொகையில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் போக மிகுதியாக உள்ள தொகை ரூ. 77.18 இலட்சங்கள் மாவட்ட ஊராட்சிக்கு திரும்ப செலுத்தப்பட்டுள்ளது. இவை மிகுதித் தொகை என்பதால் இதனை அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டி தணிக்கைத் தடைகள் எழுப்பப்பட்டுள்ளன.

அதே போன்று 31 மாவட்ட ஊராட்சிகளில் மான்யத் தொகையின் இருப்பின் மீது பெறப்பட்ட வங்கி வட்டித் தொகை ரூ. 547.38 இலட்சம் அரசு கணக்கில் செலுத்தப்படாமல் உள்ளது.

31.03.2017 அன்று மாவட்ட ஊராட்சிகளின் கணக்கில் உள்ள தொகை ரூ.16190.71 இலட்சத்தில் மேற்கொண்டு பணி செய்ய இயலாத மான்யம் இருப்பின் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும். முடிக்கப்படாத பணிகளுக்கு நிதியினை விடுவித்து பணிகள் முடிக்கப்படவேண்டும்.

## 6. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை – ஊராட்சி ஒன்றியம்

### 6.1 பஞ்சாயத்து ராஜ்

பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு அரசியலமைப்புச் சட்டப்படியான தகுதி நிலையை அளித்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின், 73வது திருத்தத்தின்அடிப்படையில் மாநில சட்ட மன்றம், **தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ஐ** இயற்றியது (அரசு ஆணை 84, ஊரக வளர்ச்சி துறை, நாள்.24.04.1994). இந்த சட்ட திருத்தத்தின்படி, கிராம அளவில் கிராம ஊராட்சிகள், இடைநிலையில் வட்டார ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றியங்கள்) மற்றும் மாவட்ட அளவில் மாவட்ட ஊராட்சிகள் என மூன்று அடுக்குகள் கொண்ட பஞ்சாயத்து ராஜ் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் சென்னை நீங்கலாக 31 மாவட்ட ஊராட்சிகள், 385 வட்டார ஊராட்சிகள் மற்றும் 12524 கிராம ஊராட்சிகள் உள்ளன.

### 6.1 (i) ஊராட்சி ஒன்றியத்தின் அதிகாரங்கள்

1) ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதியிலிருந்து செலவிடப்படும் எந்த ஒரு செலவினமும் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் ஒப்புதலுடனேயே செய்ய வேண்டும் (பிரிவு 190,191)
2) ஊராட்சி ஒன்றியத்தின் வரவு செலவு திட்டத்திற்கு ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் அனுமதி பெற்ற பின்னரே இதர திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் (பிரிவு 192)
3) ஊராட்சி ஒன்றியத்தில் உபரி நிதி இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற்று ஊராட்சி ஒன்றியம் அரசு குறிப்பிடும் நிதி நிறுவனங்களில் வைப்பீடு செய்து அதிக வட்டி பெற்று வரவாக்கலாம். (பிரிவு 181 எ)
4) பிற ஊராட்சி அமைப்புகள் வளர்ச்சி பணிகளை நிறைவேற்றுவதற்காக தேவையான நிதியை ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து கடனாக அளிக்கலாம் (பிரிவு 181பி)
5) ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நீர்ப்பாசன ஆதாரத்தில் குடிமராமத்து வேலைகளை மேற்கொண்டு பொதுமக்களிடமிருந்து குடிமராமத்து கட்டணத்தை நிர்ணயித்து வசூலிக்கலாம் (பிரிவு 133(2))
6) ஊராட்சி ஒன்றிய நீர்ப்பாசன ஆதாரங்கள் மற்றும் பொதுப் பணித்துறை நீர் ஆதாரங்களில் மீன் பிடிப்பதற்கான உரிமம் வழங்கலாம் (பிரிவு 133 (3)) அரசு ஆணை எண்.169 ஊ.வ. துறை நாள்.16.08.1999.
7) 100 ஏக்கருக்கு குறைந்த நீர்ப்பாசன ஆதாரங்களை ஊராட்சி ஒன்றியம் பராமரிக்க வேண்டும்.

கட்டாய மற்றும் விருப்பக் கடமைகள் தவிர அரசு திட்டங்களை ஒன்றியம் மூலம் நிறைவேற்ற சட்டப்பிரிவு 113, 114–ன் படி ஒப்படைக்கப்பட்ட கடமைகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**6.2 மாநிலம் சார்ந்த பொது விவரங்கள்**

மாநிலத்தின் மக்கள் தொகை மற்றும் வளர்ச்சி நிலைப் பற்றிய விவரங்கள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

| அட்டவணை | மாநிலத்தின் முக்கிய புள்ளி விவரங்கள் |
|---|---|
| மக்கள் தொகை | 7,21,38,958 (2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கு படி)<br>ஆண் – 3,61,58,871<br>பெண் – 3,59,80,087 |
| ஊரக பகுதி மக்கள் தொகை | 4,04,86,223 |
| மக்கள் தொகை நெருக்கம் | சதுர கி.மீ க்கு 555 நபர்கள் |
| பாலின விகிதம் | 1000 ஆண்களுக்கு 996 பெண்கள் |
| கிராமபுற மக்கள் தொகை | 56.10% |
| படிப்பறிவு | 80.09% |
| மாவட்ட ஊராட்சிகள் | 31 (சென்னை மாவட்டம் நீங்கலாக) |
| வட்டார ஊராட்சிகள் (ஊராட்சி ஒன்றியங்கள்) | 385 |
| கிராம ஊராட்சிகள் | 12524 |
| ஊராட்சி அமைப்புகளின் மொத்த எண்ணிக்கை | 12940 |

(ஆதாரம் – 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி)
(ஆதாரம்:இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கை துறைத்தலைவரின் அறிக்கை எண்.1–2018)

**6.2.1 தணிக்கை ஏற்பாடு:– தணிக்கையாளர்**


உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் அரசு ஆணை (நிலை) எண்.1722 உள்ளாட்சி துறை நாள்.15.10.1960–ன் படி வட்டார ஊராட்சிகளுக்கான சட்டப்படியான தணிக்கையாளர் ஆவார். (தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 193 மற்றும் தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 1958 பிரிவு 141(11)). அவர் கிராம ஊராட்சிகளின் கணக்குகளை சோதனை ஆய்வு (Test Check) மட்டுமே செய்கிறார். அரசு ஆணை (நிலை) எண்.95 ஊரக வளர்ச்சி துறை நாள்.10.04.2000–ன் படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் ஒவ்வொரு ஆண்டும் 20% ஊராட்சிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் தேர்வு செய்யப்படும் 2% ஊராட்சிகள் மீதான தணிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 193 & 242 மற்றும் அரசு ஆணை நிலை எண்.265 ஊரக வளர்ச்சி (சி3) துறை நாள்.21.12.1999–ன் படி மாவட்ட ஊராட்சிகள் தணிக்கை உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் மேற்கொள்ளப்படுகிறது.

2014 ஆம் வருட தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை சட்டப்பிரிவு 7 மற்றும் 2016 ஆம் வருட தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்ட விதிகள் 7(1)–ன் படி ஒரு நிதியாண்டு முடிவுற்ற மூன்று மாதங்களுக்குள் அவ்வாண்டிற்கான ஆண்டு கணக்குகள் தயாரித்து தணிக்கைக்கு அளிக்கப்படவேண்டும்.

**6.3 ஊராட்சி அமைப்புகளின் நிர்வாக அமைப்பு**

2016 ஆம் வருடம் மார்ச் மாதத்தில் உள்ள படி ஊராட்சி அமைப்புகளின் நிர்வாக அமைப்பு கீழ்கண்டவாறு செயல்பட்டு வருகிறது. அரசு அளவில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமை செயலாளர் தலைவர் ஆவார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் துறையின் தலைவர் ஆவார். மாவட்ட ஆட்சித் தலைவர் அனைத்து ஊராட்சிகளின் ஆய்வாளர் ஆவார்


ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
அமைச்சர்
அரசு கூடுதல் தலைமை செயலாளர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை
ஆணையர் / இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை
மாவட்ட ஆட்சித் தலைவர்
மாவட்ட ஊராட்சி
மன்றம் – தலைவர்
(தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி)
செயலாளர்
மாவட்ட ஊராட்சி
ஊராட்சி ஒன்றிய மன்றம்
தலைவர்
(தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி)
வட்டார வளர்ச்சி அலுவலர்
(வட்டார ஊராட்சி)
கிராம ஊராட்சி தலைவர்
செயல் அதிகாரி
(தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி)
வட்டார வளர்ச்சி அலுவலர்
(கிராம ஊராட்சிகள்)

**6.3 (i) வரவு செலவு திட்டம்**

1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 192 ஊராட்சி நடைமுறை நூல் பாகம் 2 அத்தியாயம் 2–ன் கீழ் பத்தி 27–ல் ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குகளை பராமரித்தலுக்கான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. ஊராட்சி நடைமுறை நூலின் அத்தியாயம் 2–ன் படி ஊராட்சி ஒன்றிய வரவு செலவு திட்டங்கள் தயாரிக்கப்படுகிறது.


வரவு செலவு திட்டம் எக்காரணம் கொண்டும் பற்றாக்குறை வரவாகவோ, நிகர பற்றாக்குறை இருப்பாகவோ இருக்கக்கூடாது. வரவு செலவு திட்டத்தில் வரும் நிதியாண்டில் செய்யப்படவுள்ள பணிகளுக்காக மேற்கொள்ள இருக்கும் செலவுகளை சேர்க்க வேண்டும். வரவு செலவு திட்டத்தில் உத்தேச வரவுகளில் 5%-க்கும் குறையாத தொகை இருப்பாக இருக்க வழிவகை செய்யப்படவேண்டும்.

**6.3 (ii) வரவு செலவு திட்டத்திற்கு ஒப்புதல் பெறும் முறை**

ஊராட்சி ஒன்றிய ஆணையர் நவம்பர் 1 ஆம் தேதிக்குள் வரவு செலவுத் திட்ட முன்மொழிவை தயாரித்து ஊராட்சி ஒன்றிய குழுவின் அனைத்து உறுப்பினர்களின் சுற்றுக்கு கருத்தறிய அனுப்பிட வேண்டும். ஊராட்சி ஒன்றிய குழுவினால் பார்வையிடப்பட்ட வரவு செலவு திட்ட முன்மொழிவினை 4 படிகள் இணைப்புகளுடன் நவம்பர் 15 ஆம் தேதிக்குள் ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அவர்களுக்கு அனுப்பிட வேண்டும். உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) முன்மொழிவினை கூர்ந்தாய்வு செய்து அரசு ஆணை (நிலை) எண்.582 ஊ.வ (ம) உள்ளாட்சி நிர்வாகம் நாள்.15.03.1964–ல் வடிவமைக்கப்பட்ட படிவத்தில் தனது குறிப்புரையினை பதிவு செய்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நவம்பர் 30–க்குள் மூன்று படிகளில் அனுப்ப வேண்டும். அதனை மாவட்ட ஆட்சித் தலைவர் கூர்ந்தாய்வு செய்து தனது குறிப்புரையினை பதிவு செய்து ஒரு படியை ஜனவரி 15 ஆம் தேதிக்குள், ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு கிடைக்கத் தக்க வகையில் அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு பெறப்பட்ட வரவு செலவு திட்ட முன்மொழிவில் மாவட்ட ஆட்சித் தலைவரின் குறிப்புரையில் கண்டுள்ளபடி திருத்தம் ஏதும் செய்வது தேவையெனில் உரிய திருத்தம் மேற்கொண்டு அதனை ஊராட்சி ஒன்றியக் குழுவின் ஒப்பளிப்புக்கு வைக்க வேண்டும். அவ்வாறு பெறப்படும் வரவு செலவு திட்ட முன்மொழிவினை ஊராட்சி ஒன்றியக் குழு பிப்ரவரி 20 ஆம் தேதிக்குள் ஒப்புதல் அளிக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியக் குழுவால் ஒப்பளிக்கப்பட்ட வரவு செலவு திட்ட நகல் ஒன்றினை உள்ளாட்சி நிதித் தணிக்கை உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஆனால் தமிழ்நாட்டிலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் வரவு–செலவு திட்டத்திற்கான ஒப்புதல் பெறப்படும் நடைமுறை தற்போது பின்பற்றப்படவில்லை. இதன் விவரம் சம்பந்தப்பட்ட தணிக்கை நிறுவனங்களின் தணிக்கை அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது.

**6.3 (iii) ஊராட்சி அமைப்புகளுக்கு நிதி வருவதற்கான நிர்வாக அமைப்பு**




**6.4 வருவாயை உயர்த்துவதற்கு செய்ய வேண்டியன**

கட்டிடங்கள் வாடகை, ஓடத்துறை குத்தகை, பயன்தரத்தக்க மரங்கள் குத்தகை மற்றும் சந்தை வசூல் ஆகியவை பல ஆண்டுகளுக்கு முன் நிர்ணயம் செய்த பழைய கட்டண வீதத்தில் வசூலிக்கப்படுவதால் இவற்றில் இருந்து குறைவான வருவாயே வருகின்றது. இவற்றிற்கான கட்டண விகிதங்களை மறுபரிசீலினை செய்து உயர்த்தினால் இவற்றின் மூலம் கணிசமான தொகை ஊராட்சி ஒன்றியத்திற்கு கூடுதலான வருவாய் கிடைக்கும்.

**6.5 தணிக்கையின் நோக்கங்கள்**

1. உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய வரவினங்கள் முழுமையாக விடுதலின்றி வரவு வந்துள்ளனவா என சரிபார்த்தல்
2. பெறப்பட்ட மான்ய வரவுகளை கணக்கு வைத்து உரிய நிதியில் வரவு எடுப்பதை உறுதி செய்தல்

3. நிதிகளைப் பெறுவதன் மீது போதுமான கண்காணிப்பு இருந்ததா என உறுதி செய்தல்
4. உள்ளாட்சி நிறுவனங்கள் உரிய சட்ட விதிகளை பின்பற்றி அரசு ஆணைகளுக்கு ஏற்ப செலவுகள் செய்கின்றனவா என்பதை சரிப்பார்த்து தணிக்கை செய்தல்
5. மத்திய, மாநில அரசு திட்டங்கள் செயல்பாடு / செலவினங்களை சரிப்பார்த்தல்.
6. பெறப்பட்ட நிதி அதற்கான நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டதா என சரிப்பார்த்தல்.

**6.6 (i) நிதி ஆதாரம்**

வரியில்லாத வருவாய், மாநில அரசிடமிருந்து ஒப்படைக்கப்பட்ட வருவாய், மாநில அரசால் வழங்கப்பட்ட மானியங்கள், பல்வேறு நோக்கங்களுக்காக இந்திய அரசால் அளிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் மாநில மற்றும் மத்திய நிதிக்குழு மானியங்கள் ஆகியன கிராம ஊராட்சிகள் மற்றும் வட்டார ஊராட்சியின் வருவாய்க்கான ஆதாரங்களாகும். மேலும் சொத்துவரி, தொழில்வரி, விளம்பர வரி போன்ற வரிகளை வசூலிக்கும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகள் பெற்றுள்ளன. மாநில நிதிக் குழு மான்யமாக மத்திய நிதிக்குழு மான்யமாக மாநில அரசு மற்றும் இந்திய அரசினால் அளிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் ஒப்படைக்கப்பட்ட வருவாய் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் மாவட்ட ஆட்சியர்களுக்கு விடுவிக்கப்படுகின்றன.

**6.6 (ii) ஊராட்சி அமைப்புகளின் வரவு மற்றும் செலவினங்கள் (ரூபாய் கோடியில்)**

| ஆண்டு / விவரம் | 2016–17 |
|---|---|
| சொந்த வருவாய் | 797 |
| ஒப்படைக்கப்பட்ட வருவாய் | 333 |
| மானியங்கள் | 5711 |
| மொத்த வரவுகள் | 6841 |
| வருவாய் செலவுகள் | 1941 |
| மூலதன செலவுகள் | 3019 |
| மொத்த செலவுகள் | 4960 |
| மொத்த செலவில் மூலதன செலவின் விழுக்காடு | 61% |

(ஆதாரம்: இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கை துறைத்தலைவரின் அறிக்கை எண்.1–2018)

**6.6 (iii) மாநில அரசிடமிருந்து பெற்ற மான்யம்**

2016–17ஆம் தணிக்கை ஆண்டில் மாநில அரசிடமிருந்து ரூ.5711 கோடி மானியமாக பெறப்பட்டுள்ளது. இதில் ரூ.1941 கோடி வருவாய் செலவுகளாகவும், ரூ.3019 கோடி மூலதன செலவினமாகவும் செலவிடப்பட்டுள்ளது.

2016–17ஆம் தணிக்கை ஆண்டில் மொத்த செலவில் மூலதன செலவினம் 61% விழுக்காடாக இருந்தது. மூலதன செலவுகள் குறைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளதால் புதிய சொத்தாக்கமும் குறைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**6.7 தணிக்கை அறிக்கை தாக்கல் செய்தல்**

2016 ஆம் வருட தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்ட விதி 19 இன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 30–ம் தேதிக்குள் முந்தைய நிதியாண்டில் தணிக்கை செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் மீதான தொகுப்பு அறிக்கையை தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 பிரிவு 20–ன் கீழ் அரசின் பார்வைக்கு அனுப்ப வேண்டும்.

**6.8 தணிக்கை தடைகள் நிவர்த்தி செய்தல்**

ஊராட்சி ஒன்றிய உடனிகழ் தணிக்கையின் போது கண்டறியப்படும் குறைகள் தணிக்கை தடை சீட்டுகள் மூலம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு அளிக்கப்படுகிறது. ஆணையர் தடை சீட்டிற்கு அளிக்கும் பதில் ஏற்புடையதாக இருப்பின் அந்த தடையினை நீக்கம் செய்யப்படுகிறது. பதில்கள் பெறப்படாத தணிக்கை தடை சீட்டில் வெளியிடப்பட்ட தடைகள் ஆண்டு தணிக்கை அறிக்கைக்கு எடுத்து செல்லப்படுகிறது. உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கையினை அங்கீகரிக்கும் பொருட்டு மேலாய்வுக்கு (Local Passing) வரும் பொழுது ஆணையரால் ஆண்டு தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தணிக்கை தடைகளுக்கு பதில்கள் அளிக்கப்படும் நேர்வில் உதவி இயக்குநர் அவற்றை பரிசிலித்து நீக்கம் செய்கின்றார்.

அங்கீகரிக்கப்பட்ட தணிக்கை அறிக்கையில் உள்ள தணிக்கை தடைகளுக்கான பதில்கள் பின்னர் கூட்டமர்வின் போது (Joint Sitting) சமர்ப்பிக்கப்படும் நேர்வில் உள்ளாட்சி நிதித் தணிக்கை மண்டல இணை இயக்குநர் அவற்றை பரிசிலித்து நீக்கம் செய்கிறார்.

கூட்டமர்விலும் நீக்கம் செய்ய இயலாத சிறப்பு கடிதப் பத்திகள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாவட்ட அளவில் கூட்டப்படும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறும் உயர்மட்ட குழுவிற்கு எடுத்து செல்லப்பட்டு தீர்வு செய்யப்படுகிறது.

மாவட்ட உயர்மட்ட குழுவிலும் தீர்வு செய்ய இயலாத பத்திகள் மாநில உயர்மட்ட குழுவிற்கு எடுத்து செல்லப்பட்டு தீர்வு செய்யப்படுகிறது.

**6.9 தணிக்கை தடைகள் நிலுவைகள் 31.08.2019 அன்றைய நிலையில்**

31.08.2019 அன்றைய நிலையில் 2009–10 ஆம் ஆண்டு முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை ரூ.201758.04 இலட்சம் மதிப்பிற்கு 40681 தணிக்கை தடைகள் தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் உள்ளன.

2016–17 ஆம் தணிக்கை ஆண்டில் 22255 தடைகள் எழுப்பப்பட்டு 31.08.2019 அன்றைய நிலையில் 6102 தணிக்கை தடைகள் தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் உள்ளன.

2016–17 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியத் தணிக்கை முழுமையாக முடிக்கப்பட்டு, இத்தணிக்கை அறிக்கையில் காணப்பட்ட கடும் குறைபாடுகளின் விவரம் பின்வருமாறு.

**6.9.1 திருவள்ளூர் மாவட்டம் – திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம் – திட்ட நிதி – இந்திரா ஆவாஸ் யோஜ்னா – செலவழிக்கப்படாத மானியம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு திருப்பிச் செலுத்தப்பட்டது – ஒப்புகை பெறப்படாதது – திட்டம் முடிவுற்ற நிலையில் பணக் குறிப்பேட்டின் படி இருப்பாக உள்ள எஞ்சிய தொகை அரசுக் கணக்கில் திருப்பிச் செலுத்தப்படாதது – குறைபாடு ரூ.134 இலட்சம்.**

**பத்தி எண்.11(இ)/2016–17**

அ)திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தின் 2016–17 ஆம் ஆண்டுத் தணிக்கையின் போது திட்ட நிதிக் கணக்கில் இந்திரா ஆவாஸ் யோஜ்னா திட்டத்தில் செலவழிக்கப்படாத மானியத் தொகை ரூ.17.40 இலட்சம் செலவுச் சீட்டு எண்.1 நாள்.29.04.2016–ன் படி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது அறியப்பட்டது. ஆனால் மேற்படி தொகை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் பெறப்பட்டதற்கான ஒப்புகை பெறப்படவில்லை. இதனால் மேற்படி செலுத்துதலின் சரித்தன்மையை தணிக்கையில் உறுதி செய்ய இயலவில்லை. எனவே உடன் நடவடிக்கை மேற்கொண்டு மேற்படி தொகை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் பெறப்பட்டதற்கான ஒப்புகை பெறப்பட்டு தணிக்கைக்கு அளிக்கப்பட வேண்டும்.

ஆ) மேற்படி திட்டம் கடந்த ஆண்டுகளிலேயே முடிவுற்ற நிலையில் மேற்படி திட்டக் கணக்கில் பத்தி 'அ' –ன் படி திருப்பிச் செலுத்தப்பட்ட மானியம் போக 31.03.2017 அன்றுள்ள படி ரூ.134 இலட்சம் முடிவிருப்புத் தொகை உள்ளது அறியப்பட்டது. மேற்படி தொகை இக்கணக்கில் ஈட்டப்பட்ட வட்டி (ம) செலவழிக்கப்படாத எஞ்சிய மானியத் தொகையாகும். மேற்படி தொகை உடன் அரசுக் கணக்கில் திருப்பிச் செலுத்தப்படாமல் பல ஆண்டுகளாக முடக்கப்பட்டுள்ளது முற்றிலும் தவறாகும். எனவே உடன் நடவடிக்கை மேற்கொண்டு மேற்படி தொகை உடன் அரசுக் கணக்கில் திருப்பிச் செலுத்தப்பட்டு அதன் விவரங்கள் தணிக்கைக்கு அளிக்கப்பட வேண்டும்.

**பெறப்பட்ட பதிலுரை**

தணிக்கை தடையில் சுட்டிக் காட்டிய தொகை ரூ.134 இலட்சத்தில் 2007–2008 முதல் 2017–2018 வரையிலான வட்டித்தொகை ரூ.34,89,545/– செலுத்துச்சீட்டு எண்.1/01.06.2018–ன்வழி செலவினம் காண்பிக்க வங்கி காசோலை எண்.551727/01.06.2018 திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவருக்கு திருவாலங்காடு வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்கள் ந.க.எண்.564/2008/A5, நாள்:01.06.2018–ன் வழி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்ற இடைக்கால பதில் பெறப்பட்டுள்ளது.

**6.9.2 கோயம்புத்தூர் மாவட்டம் – சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம் – வேலைகள் – செலக்கரிச்சல் ஊராட்சி – சித்தநாயக்கன் பாளையத்தில் ஆதிதிராவிடர் காலனியில் – பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி 2014–15–ன் கீழ் சமுதாய நலக்கூடம் கூரை மட்டம் வரை கட்டியது மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2014–15–ன் கீழ் பயணிகள் நிழற்குடை கட்டியது நீர்வழிப்பாதையில் கட்டியதால் நீதிமன்ற உத்தரவுபடி சூலூர் வட்டாட்சியரால் கட்டிடம் இடிக்கப்பட்டது செலவினத்தொகை இழப்பு வசூலிக்கப்பட வேண்டும் தொகை ரூ.11.93 இலட்சம்.**

**பத்தி எண்.15 – 2016–17**

கோயம்புத்தூர் மாவட்டம் சுல்தான்பேட்டை வட்டாரம் செலக்கரிச்சல் ஊராட்சிக்குட்பட்ட சித்தநாயக்கன்பாளையம் ஆதிதிராவிடர் காலனியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், 2014–15 ஆம் ஆண்டு நிதியிலிருந்து சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் சர்வே எண்.214/2பி1 (ம) 214/2எ1 மந்தை மற்றும் ஓடைப்புறம்போக்கு எனவும், மழைக்காலங்களில் பெய்யும் மழையானது இவ்வழியே பாய்ந்து பெரிய குட்டையினை அடையும். இந்த இடம் தொடர்பாக திருமதி.லேட் ரங்கநாயகி வழக்கு எண்.17093/2013 மற்றும் திரு.வீரன் தொடர்ந்த வழக்கு எண்.15698/2013–ன் படி சென்னை உயர்நீதிமன்றம் தமிழ்நாடு நீர்நிலைகள் பாதிப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம் 2007–ன் படி நீர் வழித்தடத்தில் இலவச பட்டா வழங்கியதை ரத்து செய்தும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து கோவை மாவட்ட ஆட்சியர் செயல்முறை ஆணை ந.க.எண்.18257/2015/அ2 நாள் 30.11.2016–ல் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள வீடுகள், சமுதாயநலக்கூடம் மற்றும் பயணிகள் நிழற்குடை ஆகியவற்றை அகற்றுமாறு சூலூர் வட்டாட்சியருக்கு உத்திரவிடப்பட்டு 11.12.2016 அன்று சமுதாய நலக்கூடம் மற்றும் பயணிகள் நிழற்குடை ஆகிய கட்டிடங்கள் இடித்து அகற்றப்பட்டதாக சுல்தான்பேட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) செயல்முறை கடிதம் ந.க.எண்.104/15/அ2 நாள் 12.12.2016–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமுதாய நலக்கூடம் மற்றும் பயணிகள் நிழற்குடை கட்ட தேர்வு செய்யப்பட்ட இடம் நீர்வழித்தடம் என்றும், நீர்நிலைகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டம் 2007–ன் படி இவ்விடத்தில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளக்கூடாது எனவும் இவ்வேலைகளுக்கான நிர்வாக அனுமதி அளிக்கும் முன்னரே இவ்விடத்திலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்ற நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டுள்ள விவரம் கட்டடம் கட்ட எதிர்க்கும் மனுதாரர்களால் தெரிவிக்கப்பட்டிருந்தும் வேலை ஆணை வழங்கி பணியினை துவக்கியது மற்றும் மேற்கொள்ளப்பட்ட பணிக்கு முதல் மற்றும் பகுதித் தொகை வழங்கியது இத்திட்ட நிதிக்கு ரூ.10.36 இலட்சம் இழப்பாகியுள்ளது. இத்தொகையினை இதற்கு பொறுப்பான வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் பொறியாளரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர் நிதி சிமெண்ட் இருப்பு பதிவேடு பக்கம் 161 நாள்.26.07.2016–ல் சமுதாய நலக்கூடம் கட்டும் பணிக்கு 300 மூட்டை சிமெண்ட் வழங்கப்பட்டதாக இருப்பு கழிவு செய்யப்பட்டுள்ளது. இதற்குரிய இருடங்கு கிரயத் தொகை ரூ.1.58 இலட்சம் (300 x 263 x 2) உரியவர்களிடமிருந்து பெறப்பட்டு பொதுநிதிக் கணக்கில் வரவாக்கப்படவேண்டும்.

**இழப்பு விவரம்**

| | | |
|---|---|---|
| சமுதாய கூடம் கட்டியது முதல் (ம) பகுதி பட்டியல் தொகை | – | ரூ.9.83 இலட்சம் |
| சிமெண்ட் கிரயம் | – | ரூ.1.58 இலட்சம் |
| சட்டமன்ற உறுப்பினர் நிதி பயணிகள் நிழற்குடை கட்டியது | – | ரூ.0.52 இலட்சம் |
| மொத்தம் | – | ரூ.11.93 இலட்சம் |

மேற்காணும் குறைபாடுகளால் மத்திய, மாநில, அரசு திட்ட நிதிக்கு ரூ.11.93 இலட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தொகையினை இதற்கு பொறுப்பான வட்டார வளர்ச்சி அலுவலர் / பொறியாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு ஈடு செய்யப்பட வேண்டும். மேலும் திட்டம் நிறைவேற்றப்படாததற்கு அரசின் பின்னேற்பு பெற்று காண்பிக்க வேண்டும்.

**பெறப்பட்ட பதிலுரை**

இவ்வலுவலக ந.க.எண்.1939/உள.ஒ.த(1)/14.05.2019–ன் வழி ஊரக வளர்ச்சி துறை இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. பதிலுரை ஏதும் பெறப்படவில்லை.

**6.9.3 விழுப்புரம் மாவட்டம் – வானூர் ஊராட்சி ஒன்றியம் – பெரியார் நினைவு சமத்துவபுரம் – 2010–11 – நீண்ட காலமாக பணி முடிக்கப்படாமை மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்காதது – திட்டக் கணக்கில் பயன்பாடு இல்லாமல் அரசு நிதி முடக்கம் – பணி முடிக்காத ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுத்து வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படவேண்டும் இழப்பு ரூ.124.75 இலட்சம்.**

பத்தி எண். 48 / 2016–17

(கோப்பு எண்.1117/அ3/2006 (ம) 4771/2010)

விழுப்புரம் மாவட்டம் வானூர் ஊராட்சி ஒன்றியத்தில் அரசாணை எண்.247, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.த.1) துறை நாள்.19.05.2010–ன் படி 2010–11 ஆம் ஆண்டில் பெரியார் நினைவு சமத்துவபுர திட்டத்தின் கீழ் கொழுவாரி ஊராட்சியில் புதிய பெரியார் நினைவு சமத்துவபுரம் அமைக்க விழுப்புரம் மாவட்ட ஆட்சி தலைவர் நடவடிக்கை ந.க.எண்.ஆ10/641/2/2010 நாள்.24.06.2010, 01.08.2010, 20.11.2010, 04.01.2011 மற்றும் 27.01.2011–ன் படி ரூ.237.98 இலட்சம் மதிப்பிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு ரூ.215.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

1. கடந்த 7 ஆண்டுகளில் சுமார் 52% பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளது.
2. ஒப்பந்ததாரர் பதிவை ரத்து செய்து விட்டு அவரது பதிவினை கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டு (Black List) வைப்புத் தொகை ரூ.4.53 இலட்சத்தை பறிமுதல் செய்யப்பட வேண்டும்.
3. பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகை ரூ.124.75 இலட்சம் ஆகும் 7 ஆண்டுகள் கடந்த நிலையில் பணி முடிக்கப்படாததால் அரசு பணம் வீணடிக்கப்பட்டுள்ளது. இதற்கு பொறுப்பான அலுவலர்கள் மீது நிர்வாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. 31.03.2017–ல் திட்டக் கணக்கில் இறுதி இருப்பாக உள்ள ரூ.122.24 இலட்சத்துக்கு 4.5% வட்டி இழப்பு ரூ.5.23 இலட்சம் இதற்கு பொறுப்பான அலுவலரிடம் இருந்து வசூலிக்க வேண்டும்.

**பெறப்பட்ட பதிலுரை**

இவ்வலுவலக ந.க.எண்.1939/ஊ.ஓ.த(1)/14.05.2019–ன் வழி ஊரக வளர்ச்சிதுறை இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. பதிலுரை ஏதும் பெறப்படவில்லை.

**6.9.4 விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம் , வைப்புத் தொகை – வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்கள் கட்டுப்பாட்டில் பராமரிக்கப்படும் பொதுநிதி, சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் மற்றும் ஊரக உள்கட்டமைப்பு (சாலைகள்) திட்டக்கணக்குகளில் ஒரே வைப்புத் தொகை எண்ணை குறிப்பிட்டு இரு முறை ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கியது கடும் குறைபாடு ரூ.7,11,641/– வசூலிக்கப்பட வேண்டும். மேலும், தொகை**

வழங்கிய அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுத்து விவரம் தணிக்கைக்கு தெரிவிக்க வேண்டும். தணிக்கையில் சுட்டிக் காட்டிய பின் தொகை பிடித்தம் செய்யப்பட்டது.

**பத்தி எண்.34 / 2016–17**

2016–17 ஆம் ஆண்டு தணிக்கையில் இவ்வூராட்சி ஒன்றியத்தின் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்கள் கட்டுப்பாட்டில் பராமரிக்கப்படும் திட்டக் கணக்குகளில் வைப்புப் பதிவேடுகள் சரிபார்க்கப்பட்டன. அதில் பொதுநிதி, சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் மற்றும் ஊரக உள்கட்டமைப்பு (சாலைகள்) திட்டக் கணக்குகளில் வைப்புப் பதிவேடுகளில் ஒரே வைப்புத் தொகை எண்ணை குறிப்பிட்டு இருமுறை ஒப்பந்ததாரருக்கு இணைப்பில் குறிப்பிட்ட செலவுச்சீட்டுகளின் படி தொகை வழங்கப்பட்டது தணிக்கையில் கண்டறிப்பட்டுள்ளது. இத்தொகை ரூ.7,11,641/– உடன் உரிய ஒப்பந்ததாரர் அல்லது அதனை வழங்கிய கணக்கர், மேலாளர், மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து வசூலிப்பதுடன் இது குறித்து சம்பந்தப்பட்ட நபர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுத்து விவரம் தணிக்கைக்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | பொதுநிதி | 592401.00 |
| 2 | சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டு திட்டம் | 15750.00 |
| 3 | ஊரக உள்கட்டமைப்பு (சாலைகள்) | 103490.00 |
| மொத்தம் | | 711641.00 |

**பெறப்பட்ட பதிலுரை**

தணிக்கை தடையில் சுட்டிக் காட்டப்பட்ட தொகை ரூ.7,11,641/– மாற்றுச் செலவினச் சீட்டுகள் மூலம் சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரின் வைப்புத்தொகையிலிருந்து ஈடுசெய்யப்பட்டு காண்பித்ததை தொடர்ந்து 12.03.2019 அன்று நடைபெற்ற கூட்டமர்வில் பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**6.9.5 திருவள்ளூர் மாவட்டம்– திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் – கட்டிட வரைபட அனுமதி அளித்தது – தொழிற்சாலை கட்டடங்களுக்கான வரைபட அனுமதி வட்டார வளர்ச்சி அலுவலரால் அளிக்கப்பட்டது – தவறு நகர் ஊரமைப்பு இயக்குநரிடம் பெறப்பட வேண்டும் மற்றும் அடிப்படை வசதிகள் கட்டணம் வசூலிக்கப்படாதது – இழப்புத் தொகை ரூ.4,51,630/–**

பத்தி எண்.4 / 2016–17

2016–17 ஆம் ஆண்டு தணிக்கையின் போது இணைப்பில் கண்ட தொழிற்சாலைகளுக்கு வட்டார வளர்ச்சி அலுவலரால் கட்டிட வரைபட அனுமதி அளிக்கப்பட்ட கோப்புகள் சரிபார்க்கப்பட்டது.

திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தில் பாக்கம் மற்றும் நத்தம்மேடு ஆகிய இரு கிராமங்கள் மட்டுமே சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழும எல்லைக்குள் உள்ளது. இவ்விரு கிராமங்களில் இருந்து பெறப்பட்ட கட்டிட வரைபடங்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிகுழுமத்தால் அனுப்பிவைக்கப்பட்ட திட்ட வல்லுநரால் (Planner) ஆய்வு செய்யப்பட்டு அவ்வலுவலரின் பரிந்துரையின் அடிப்படையிலேயே கட்டிட வரைபட அனுமதி வழங்க சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலரால், வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அதிகார பகிர்வு செய்யப்பட்டுள்ளது.

ஆனால், ... இணைப்பில் தெரிவிக்கப்பட்ட அனைத்து தொழிற்சாலை கட்டிட வரைபடங்களும் நகர் ஊரமைப்பு எல்லையைச் சார்ந்தவையாகும். நகர் ஊரமைப்பு இயக்குநரால் இவ்வாறு அதிகார பகிர்வு ஏதும் செய்யப்படவில்லை. திருவள்ளூரில் உள்ள நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநரிடம் அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால், நகர் ஊரமைப்பு இயக்குநரிடம் அனுமதி பெறப்படாமலும், தொழில்நுட்பரீதியாக ஆய்வு செய்யப்படாமலும் இணைப்பில் உள்ள தொழிற்சாலை கட்டிடங்களுக்கு வட்டார வளர்ச்சி அலுவலரால் கட்டிட வரைபட அனுமதி அளித்தது தவறாகும். இணைப்பில் தெரிவித்த தொழிற்சாலை கட்டிட வரைபடங்களை நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு அனுப்பி வரைபட அனுமதி பெறப்பட வேண்டும்.

மேலும், அரசாணை எண்.191, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, நாள்.01.06.2007ன்படி இவ்வாறன தொழிற்சாலை கட்டிடங்களுக்கு அடிப்படை வசதிகள் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தொழிற்சாலை கட்டிடங்களுக்கான வரைபட அனுமதி நகர் ஊரமைப்பு இயக்குநரால் அளிக்கப்பட்டிருந்தால் அன்னாரால் அடிப்படை வசதி கட்டணம் ரூ.4,51,630/– வசூல் செய்யப்பட்டிருக்கும். வட்டார வளர்ச்சி அலுவலரே அனுமதி அளித்த காரணத்தால் அடிப்படை வசதிகள் கட்டணங்கள் வசூலிக்கப்படாதது அரசு நிதிக்கு ரூ.4,51,630/– இழப்பாகும்.

பெறப்பட்ட பதிலுரை

இவ்வலுவலக ந.க.எண்.1939/ஊ.ஒ.த(1)/14.05.2019–ன் வழி ஊரக வளர்ச்சி துறை இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. பதிலுரை ஏதும் பெறப்படவில்லை.

**6.9.6. வேலூர் மாவட்டம் – காட்பாடி ஊராட்சி ஒன்றியம் – பொதுநிதி – அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் பேவர் பிளாக் சாலை, கல்வெர்டு குடிநீர் பணிகள் மேற்கொண்டது மதிப்பு ரூ.21.40 இலட்சம்.**

**பத்தி எண்.26 / 2016–17**

தனியாருக்கு சொந்தமான அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் தனிநபர் ஆதாயம் அடையும் வகையில் அரசு நிதியை பயன்படுத்தி வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய மனைப்பிரிவுகளில் சாலை அமைக்க இடம், பூங்கா, பொது இடம் போன்ற இடங்கள் வட்டார வளர்ச்சி அலுவலர் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்ட பின்னர் உட்பிரிவு செய்து வளர்ச்சி பணிகளுக்கான கட்டணங்கள் (OSR) செலுத்தப்பட்ட பின்னரே அந்த இடங்களில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள வேண்டும். எனவே அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் பேவர் பிளாக் சாலை, கல்வெர்ட், பக்க கால்வாய் மற்றும் குடிநீர் பணிகள் ரூ.21.40 இலட்சத்துக்கு மேற்கொண்டது மிகைச் செலவினமாகும். இதனை இதற்கு பொறுப்பான வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மீது நிர்வாக ரீதியாக நடவடிக்கை மற்றும் ஒன்றிய பொறியாளர்களிடம் இருந்து வசூலித்து பொதுநிதியில் ஈடு செய்ய வேண்டும்.

**பெறப்பட்ட பதிலுரை**

இவ்வலுவலக ந.க.எண்.1939/ஊ.ஒ.த(1)/14.05.2019–ன் வழி ஊரக வளர்ச்சி துறை இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. பதிலுரை ஏதும் பெறப்படவில்லை.

## 7. கிராம ஊராட்சி

**7. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை – கிராம ஊராட்சி**

**7.1. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 21 /1994ன் சிறப்பம்சங்கள் பின்வருமாறு**

**கிராம சபை (சட்டப்பிரிவு.2 (13) மற்றும் சட்டப்பிரிவு 3)**

கிராம ஊராட்சியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களைக் கொண்டது கிராம சபை ஆகும். கிராம அளவில் வெளிப்படையான திட்டங்களை செயல்படுத்தவும், சமூக நல்லிணக்கம், பொருளாகவோ, உழைப்பாகவோ சமூக பங்களிப்பு, திட்ட பயனாளிகள் தேர்வு, அரசு நல திட்டங்களின் பயன்பாடு குறித்து சமூக தணிக்கை நடத்தவும் கிராமசபை வலுவான மக்கள் அமைப்பாக விளங்குகிறது.

கிராம சபை நடத்த குறைவெண் வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (தற்சமயம் ஜனவரி–26 / மே–1 / ஆகஸ்டு–15 மற்றும் அக்டோபர்–2 ஆகிய தேசிய விடுமுறை நாட்களிலும் மற்றும் அத்தியாவசிய காலங்களில் சிறப்பு கிராமசபைகள் நடத்தப்படுகின்றன). அனைத்து வார்டுகளிலும் சுழற்சி முறையில் கிராம சபை நடத்தப்படுகிறது. கிராம சபை நடத்த, மூன்றில் ஒரு பங்கு பெண்கள் பங்களிப்பு மற்றும் ஆதிராவிடர் / பழங்குடியினரின் விகிதாச்சார பங்கேற்பும் தேவை.

**7.2 வரவு செலவு திட்டம்**

1) ஜனவரி 26–க்குள் வரைவு வரவு–செலவு திட்டம் கிராம சபா முன் வைக்க வேண்டும்

2) மேற்படி வரைவு வரவு–செலவு திட்டம் (Draft Budget) ஜனவரி 31–க்குள் கிராம ஊராட்சி மன்ற ஒப்புதல் பெறப்பட்டிருக்க வேண்டும். (தமிழ் நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சி வரவு–செலவு திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு விதிகள் – 1999–பிரிவு 4)

3) துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மேற்படி கிராம ஊராட்சியிடமிருந்து பெற்ற வரைவு வரவு–செலவு திட்டத்தினை , அதை பெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் பரிசீலித்து மாற்றம் செய்யப்பட வேண்டின், அதனை திருப்பியளிக்க வேண்டும். அவ்வாறு திருப்பியளிக்காவிடில் வரவு–செலவு திட்டம் அங்கீகரிக்கப்பட்டது எனக் கொள்ள வேண்டும். எனவே துணை வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து மாற்றம் செய்ய வேண்டியதை மாற்றம் செய்து (அல்லது) மேற்படி அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட வரவு–செலவு திட்டம்,மார்ச் 15–க்குள் கிராம ஊராட்சியின் ஒப்புதல்பெற்ற 7 தினங்களுக்குள், ஆய்வாளர்(மாவட்ட ஆட்சித்தலைவர்), உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோருக்கு அனுப்ப வேண்டும்.

4) திருத்திய வரவு–செலவு திட்டம் டிசம்பர் 31–க்கு முன்னர் கிராம ஊராட்சி மன்ற ஒப்புதல் பெற்று உரிய அலுவலருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.


5) வரவு–செலவு திட்டத்தில், ஒதுக்கீடு செய்ததை விட 5% தொகையினை அதிகமாக செய்திருந்தால், கிராம ஊராட்சியின் ஒப்புதலும் 5%க்கு மேல் இருந்தால் மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்புதலும் பெற வேண்டும்.

6) வரவு–செலவு திட்டத்தில் வகை செய்யப்படாத எந்த செலவினமும் செய்யக் கூடாது

### <u>7.3 ஊராட்சி அமைப்புகளின் நிர்வாக அமைப்பு</u>

மார்ச் 2016–ல் உள்ள படி ஊராட்சி அமைப்புகளின் நிர்வாக அமைப்பு கீழ்க்கண்டவாறு செயல்பட்டு வருகிறது. அரசு அளவில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மை செயலாளர் தலைவர் ஆவார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் துறையின் தலைவர் ஆவார். மாவட்ட ஆட்சித் தலைவர் அனைத்து ஊராட்சிகளின் ஆய்வாளர் ஆவார்.

**<u>கிராம ஊராட்சியின் பணி அமைப்பு</u>**




### <u>7.4 கிராம ஊராட்சிக்கான வருவாய் இனங்கள் மற்றும் செலவினங்கள்</u>

**வருவாய் இனங்கள்**

கிராம ஊராட்சி முடிந்தவரை தன்னைத்தானே நிர்வகித்துக்கொள்ளும் பொருட்டு வரி வருவாய், கட்டணங்கள் போன்ற தலைப்புகளில் நிதி ஆதாரத்தை மேம்படுத்துதல்.

**7.5 கிராம ஊராட்சியின் வரிகள் மற்றும் இதர நிதி ஆதாரங்கள்:**

வரி வருவாய், (வீட்டு வரி, தொழில் வரி உள்ளிட்டவை) ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் (Pooled Assigned Revenue). வரி அல்லாத வருவாய், பல்வகை வருவாய், அரசு மானியங்கள், திட்ட நிதி போன்றவை

1. கிராம ஊராட்சிக்கான சொந்த வருவாய் இனங்கள்
2. ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்கள்:

3. கட்டணங்கள் என்ற அடிப்படையில் கிராம ஊராட்சிக்கு வருவாய் இனங்கள்

4. பல்வகை வருவாய்

5. அரசு மானியங்கள்

6. திட்ட நிதி

### 7.6 நிதி ஆதாரம்

வரியில்லாத வருவாய், மாநில அரசிடமிருந்து ஒப்படைக்கப்பட்ட வருவாய், மாநில அரசால் வழங்கப்பட்ட மானியங்கள், பல்வேறு நோக்கங்களுக்காக இந்திய அரசால் அளிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் மாநில மற்றும் மத்திய நிதிக்குழு மானியங்கள் ஆகியன கிராம ஊராட்சிகள் மற்றும் வட்டார ஊராட்சியின் வருவாய்க்கான ஆதாரங்களாகும். மேலும் வீட்டுவரி, தொழில்வரி விளம்பர வரி போன்ற வரிகளை விதிக்கும் அதிகாரத்தை கிராம ஊராட்சிகள் பெற்றுள்ளன. மாநில நிதிக் குழு மான்யமாக மத்திய நிதிக்குழு மான்யமாக மாநில அரசு மற்றும் இந்திய அரசினால் அளிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் ஒப்படைக்கப்பட்ட வருவாய் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் மாவட்ட ஆட்சியர்களுக்கு விடுவிக்கப்பட்டன.

### 7.7 ஊராட்சியில் செயல்படுத்தப்படும் கணக்குகள்

அரசு ஆணை நிலை எண். 146/ஊ.வ (ம)ஊ.துறை, நாள்.17.08.2007–ன்படி கிராம ஊராட்சிகளில் பின்வரும் கணக்குகள் பராமரிக்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1) | கிராம ஊராட்சி நிதிக் கணக்கு | – கணக்கு எண்.1 |
| 2) | தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும்<br>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கிராம ஊராட்சி கொடுப்பு கணக்கு | – கணக்கு எண்.2 |
| 3) | கிராம ஊராட்சி திட்ட நிதிக் கணக்கு<br>(மைய அரசு மான்யம்) | – கணக்கு எண்.3 |
| 4) | கிராம ஊராட்சி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டக் கணக்கு | – கணக்கு எண்.4 |
| 5) | கிராம ஊராட்சி திட்ட நிதிக் கணக்கு (மாநில அரசு) | – கணக்கு எண்.5 |
| 6) | முதலமைச்சர் சூரிய சக்தி பசுமை வீடுகள் திட்டக் கணக்கு | – கணக்கு எண்.6 |
| 7) | கிராம ஊராட்சி பணியாளர்கள் சம்பளக் கணக்கு | – கணக்கு எண்.7 |

(ஆதாரம்:அரசாணை (நிலை) எண்.89 ஊ.வ (ம) ப.ரா (ப.ரா.1) துறை, நாள்.15.06.2015)

**7.8 தணிக்கை ஏற்பாடு :- தணிக்கையாளர்**

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில் 12524 கிராம ஊராட்சிகள் உள்ளன. இவைகளின் ஆண்டுத் தணிக்கைகள் ஒவ்வொரு ஆண்டும், ஊரக வளர்ச்சித் துறையின் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை)களால் மேற்கொள்ளப்படுகிறது.

அரசு ஆணை (நிலை) எண்.95 ஊரக வளர்ச்சி துறை நாள்.10.04.2000–ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் ஒவ்வொரு ஆண்டும் 20% ஊராட்சிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் தேர்வு செய்யப்படும் 2% ஊராட்சிகள் மீதான தணிக்கையை சோதனை தணிக்கையாக மேற்கொள்ள வேண்டும். ஐந்து ஆண்டுகளில் சுழற்சி முறையில் அனைத்து கிராம ஊராட்சிகளின் தணிக்கையும் சோதனை தணிக்கையாக (Test audit) மேற்கொள்ளப்படுகிறது. இதன்படி 2016–17–ல் 2847 கிராம ஊராட்சிகளின் சோதனை தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தணிக்கையில் காணப்பட்ட கடும்குறைபாடுகள் சுருக்கம் பின்வருமாறு தொகுத்தளிக்கப்படுகிறது.

**7.9 தணிக்கையின் நோக்கங்கள்**

1. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் ஒவ்வொரு ஆண்டும் 20% ஊராட்சிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் தேர்வு செய்யப்படும் 2% ஊராட்சிகள் மீதான தணிக்கையை சோதனை தணிக்கையாக மேற்கொள்ள வேண்டும்.

2. கிராம ஊராட்சிகளில் பெறப்பட்ட மத்திய மற்றும் மாநில மான்யங்கள் முறையாக வரவு வைக்கப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதை சரிபார்த்தல்.

3. கிராம ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் வரவு செலவு திட்டத்தில் வகைச் செய்யப்பட்டுள்ளனவா என்றும், உரிய நிர்வாக அனுமதி பெற்று அரசு வகுத்த வழிமுறைகள் படி உள்ளனவா என்பதை ஆராய்தல்.

4. எந்த நோக்கத்திற்காக மான்யம் பெறப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு பயன்படுத்தப் பட்டுள்ளதா என சரிபார்த்தல்.

2016–17ஆம் ஆண்டு கிராம ஊராட்சி தணிக்கை (20%+2%) முழுமையாக முடிக்கப்பட்டு, இத்தணிக்கை அறிக்கையில் காணப்பட்ட கடும் குறைபாடுகளின் விவரம் பின்வருமாறு.

## நிதி கையாடல்

**7.9.1 தஞ்சாவூர் மாவட்டம் – கிராம ஊராட்சிகள் – ரொக்க வரவினம் குறைவாக வங்கியில் செலுத்தியது. செலுத்தப்படாமல் கையாடல் செய்யப்பட்டுள்ள தொகை ரூ.11.71 இலட்சம் வசூலிக்கப்பட வேண்டும் – தணிக்கையில் சுட்டியபின் தொகை செலுத்தப்பட்டது.**

தஞ்சாவூர் மாவட்டத்தில் பின்வரும் கிராம ஊராட்சிகளின் மீதான 2016–17 ஆம் ஆண்டு தணிக்கையின் போது வரி மற்றும் வரி அல்லா கட்டணங்கள் வசூலினை வரிவசூல் ரசீதுகளின்படி சரிபார்த்து வரவு வைக்கப்பட்டுள்ளதை சரிபார்த்ததில், வசூலிக்கப்பட்ட தொகை முழுவதும், ஊராட்சி கணக்கிலும், வங்கி கணக்கிலும் செலுத்தப்படாமல் விடுபட்டுள்ளது காணப்பட்டது. வங்கியில் செலுத்திய தொகை மட்டுமே ஆண்டு கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. செலுத்தப்படாமல் உள்ள தொகை ரூ.11.71 இலட்சம் ஊராட்சிகளுக்கு இழப்பாகி உள்ளது. இதனை இதற்கு பொறுப்பானவர்களிடமிருந்து வசூலித்திட தணிக்கைத் தடை எழுப்பப்பட்டுள்ளது.

| வ. எண் | ஊராட்சி ஒன்றியம் | கிராம ஊராட்சி | பத்தி எண் | வசூல் தொகை | வங்கியில் செலுத்திய தொகை | இழப்பு | தணிக்கை தடை எழுப்பிய பின் வசூலிக்கப் பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஒரத்தநாடு | ஆயங்குடி | 9 | 64002 | 54546 | 9456 | 9456 |
| 2 | ஒரத்தநாடு | வெள்ளூர் | 9 | 37160 | 15000 | 22160 | 22160 |
| 3 | ஒரத்தநாடு | ஆம்லாப்பட்டு | 9 | 115727 | 7922 | 107805 | 107805 |
| 4 | ஒரத்தநாடு | மூர்த்தியம்மாள்புரம் | 12 | 330989 | 210179 | 120810 | 120810 |
| 5 | ஒரத்தநாடு | ஆழிவாய்க்கால் | 9 | 65376 | 19299 | 46077 | 46077 |
| 6 | ஒரத்தநாடு | கரைமீண்டார் கோட்டை | 17 | 49668 | 12967 | 36701 | 36701 |
| 7 | ஒரத்தநாடு | உறந்தராயம் முடிக்காடு | 9 | 145516 | 107500 | 38016 | 38016 |
| 8 | ஒரத்தநாடு | வடக்கார்தெற்கு | 12 | 26454 | 14563 | 11891 | 11891 |
| 9 | ஒரத்தநாடு | தெக்கூர் | 10 | 270258 | 124813 | 145445 | 145445 |
| 10 | ஒரத்தநாடு | திருமங்கலம் கோட்டை | 9 | 41573 | 29355 | 12218 | 12218 |
| 11 | மதுக்கூர் | புலவஞ்சி | 11 | 288483 | 161178 | 127305 | 127305 |
| 12 | மதுக்கூர் | விக்கிரமம் | 11 | 475194 | 445186 | 30008 | 30008 |
| 13 | திருவோணம் | காவாளிப்பட்டி | 7 | 546707 | 190110 | 356597 | 356597 |
| 14 | திருவோணம் | தோப்புவிடுதி | 9 | – | – | 106249 | 106249 |
| | | | | | மொத்தம் | 11,70,738 | 11,70,738 |

பெறப்பட்ட பதிலுரை:

தணிக்கை அறிக்கையில் வங்கியில் செலுத்தப்படாமல் உள்ள தொகை சுட்டிக் காட்டிய பின் மொத்தம் ரூ.11.71 இலட்சம் வசூலிக்கப்பட்டு உரிய ஊராட்சிகளின் பொது நிதியில் செலுத்தப்பட்ட பின் கூட்டமர்வில் பத்திகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**7.9.2 விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், தென்கீரனூர் கிராம ஊராட்சி (2%) 2016–17 – தணிக்கை – 14வது நிதிக்குழு மான்யத் தொகை கிராம ஊராட்சி கணக்கில் வரவு வைக்கப்படவில்லை – சத்துணவு மைய கணக்கில் வரவு வைத்தது – ரூ.18.23 இலட்சம்.**

**பத்தி எண்.32/2016–17**

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் தென்கீரனூர் ஊராட்சிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவரால் விடுவிக்கப்பட்ட 14வது நிதிக்குழு மான்யம் 2016–17 ஆம் ஆண்டிற்குரியது முறையே 03.08.2016 அன்று ரூ.6.47 இலட்சம், 13.03.2017 அன்று ரூ.6.47 இலட்சம் மற்றும் 25.03.2017 அன்று ரூ.4.46 இலட்சம் ஆக மொத்தம் ரூ.17.40 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. தணிக்கையின் போது, இத்திட்ட கணக்கிற்காக பராமரிக்கப்படும் பாரத மாநில வங்கி கணக்கு எண்.11164218997 (கள்ளக்குறிச்சி)–இல் வரவு வைத்துள்ளதை ஒப்பு நோக்கியதில் இத்தொகை வரவிடப்படாதது காணப்பட்டது. இதற்கு மாறாக விளம்பார் காலனி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி சத்துணவு மையத்திற்கான வங்கி கணக்கு எண்.1164219627–ல் வரவு வைக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது.

2015–16 ஆம் ஆண்டில் 03.09.2015 மற்றும் 16.03.2016–ல் இதே போன்று இம்மான்யத் தொகை முறையே ரூ.5.55 இலட்சம் ரூ.5.55 இலட்சம் மற்றும் இச்சத்துணவு மைய கணக்கில் முதலில் வரவிடப்பட்டு பின்னர் 11.08.2016 அன்று திரும்ப பெறப்பட்டுள்ளது காணப்பட்டது.

உரிய நேரத்தில் கண்டறியப்படாததால் காலம் தாழ்ந்து வரவு வைக்கப்பட்டுள்ளது. 2016–17 ஆம் ஆண்டு தணிக்கை முடிவுற்று இதுகுறித்து தடை எழுப்பப்பட்டவுடன் 27.10.2017 அன்று ரூ.18,09,922/– மற்றும் 11.12.17ல் ரூ.16,846/– ஆகிய தொகைகள் மான்ய தொகைக்கான வங்கி வட்டியுடன் இத்திட்ட கணக்கில் வரவிடப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தவறிய அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

பெறப்பட்ட பதிலுரை:

தணிக்கை அறிக்கையில் சுட்டிய பின் இத்தொகை ரூ.18,26,768/– உரிய கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் உரிய விவரங்கள் காண்பிக்கப்பட்டு 24.07.2019 அன்று நடைபெற்ற கூட்டமர்வில் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

7.9.3 பல்வேறு பத்திகளின் தொகுப்பு /2016–17

**கிராம ஊராட்சிகள் – வரி மற்றும் வரியில்லா கட்டணங்கள் வசூலித்தல் – தினசரி வசூல் – வசூல் செய்த தொகையினை விட குறைவாக இருசால் செய்தது – வருவாய் இழப்பு ரூ.3.57 இலட்சம் – 2.59 இலட்சம் தணிக்கையில் சுட்டிய பின் வசூலிக்கப்பட்டுள்ளது.**

கிராம ஊராட்சிகளில் வரி மற்றும் வரியில்லா கட்டணங்கள் வசூலிக்கும் வழிமுறைகள் 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 172–ல் வழிகாட்டுதல்கள் அளிக்கப்பட்டுள்ளன.

நிர்வாக அலுவலர் என்ற முறையில் வரிகளை வசூல் செய்யும் முழுப்பொறுப்பும் தலைவரைச் சாரும். ஆனால் ஊராட்சி செயலரை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணம் வசூலிக்கும் பணியாளர் வசூல் புத்தகத்தில் வசூலிக்கப்பட்ட தொகை, ஒவ்வொரு நாள் இறுதியிலும் அன்றைய தினம் ஒவ்வொரு வரியினத்திலும் அவர் வசூல் செய்த தொகைகளை கூட்டிப்போட வேண்டும். இத்தொகையை ஒவ்வொரு நாளும் கிராம ஊராட்சித் தலைவரிடம் ஒப்படைத்து வசூல் பதிவேட்டில் தலைவரது ஒப்பத்தைத் தேதியுடன் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நாளும் அன்று வசூலிக்கப்பட்ட மொத்த வரித்தொகையை வசூல் பதிவேட்டிலிருந்து கணக்கிட்டு ரொக்கத் தொகையை வசூலிப்பவரிடமிருந்து பெற்று பத்திரமாக தன் பொறுப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.

வசூல் செய்யப்பட்ட தொகை அன்றே அல்லது மறுநாளே கிராம ஊராட்சியின் வங்கிக் கணக்கில் செலுத்திட வேண்டும். கிராம ஊராட்சிக் கணக்கு வைக்கப்பட்டுள்ள வங்கி 5 கிலோ மீட்டர் தொலைவிற்கு அப்பால் இருந்தால் வாரக் கடைசியில் இருப்புத் தொகையை செலுத்திட வேண்டும்.

இவ்வாறான வழிமுறைகள் இருந்தும் கீழ்காணும் கிராம ஊராட்சிகளில், வசூல் தொகை கிராம ஊராட்சி கணக்கின் வங்கி கணக்கில் செலுத்தாமல் / குறைவாக செலுத்தியும் உள்ளது காணப்பட்டது. இதனால் கிராம ஊராட்சிகளுக்கு வருவாய் இழப்பு ரூ.3.57 இலட்சம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வங்கியில் செலுத்தப்பட்டுள்ள தொகையின் அடிப்படையிலேயே கணக்குகள் தயாரிக்கப்பட்டு தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. எனவே இழப்புத் தொகை ரூ.3.57 இலட்சத்தை பொறுப்பான தலைவர் / செயல் அலுவலர் ஆகியோரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். தலைவர்கள் காலத்தில் இழப்பு ஏற்பட்டுள்ளதை சரிபார்த்து கணக்குகளை பெற்றுக் கொள்ளாத தனி அலுவலர்களே இதற்கு பொறுப்பானவர்கள் எனத் தணிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது.

| வ. எண் | ஊராட்சி ஒன்றியம் | கிராம ஊராட்சி | பத்தி எண் | வசூல் தொகை | வங்கியில் செலுத்திய தொகை | இழப்பு | தணிக்கை தடை எழுப்பிய பின் வசூலிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | (ரூ. இலட்சத்தில்) | | | ரூ. |
| 1. திருநெல்வேலி மாவட்டம் | | | | | | | |
| 1 | வாசுதேவ நல்லூர் | திருமலாபுரம் | 8 | 1.41 | 1.31 | 0.10 | 11582 |
| 2 | வாசுதேவ நல்லூர் | திருமலாபுரம் | 9 | 0.34 | 0.29 | 0.05 | 6337 |
| 3 | வாசுதேவ நல்லூர் | விஸ்வநாதப்பேரி | 9 | 0.86 | 0.74 | 0.12 | 12425 |
| 4 | வள்ளியூர் | தனக்கர்குளம் | 10 | 0.12 | – | 0.12 | 13991 |
| 5 | செங்கோட்டை | இலந்தூர் | 8 | 6.47 | 6.31 | 0.16 | 16175 |
| 6 | கடையம் | சிவசைலம் | 9 | 1.88 | 1.20 | 0.68 | மாத தவணையில் பிடித்தம் (முதல் மாத தவணை ரூ.3663 பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. |
| 7 | நாங்குநேரி | சாந்தானேரி | 10 | 1.80 | 1.51 | 0.29 | 29413 |
| 2. விருதுநகர் மாவட்டம் | | | | | | | |
| 8 | இராஜபாளையம் | மேல்விட்டம் கரிசல்குளம் | 11 | 0.03 | 0.02 | 0.01 | 1156 |
| 9 | இராஜபாளையம் | மேல்விட்டம் கரிசல்குளம் | 12 | 0.27 | – | 0.27 | 27163 |
| 10 | இராஜபாளையம் | இராமலிங்காபுரம் | 10 | 0.14 | 0.02 | 0.12 | 11631 |
| 11 | இராஜபாளையம் | கணபதி சுந்தர நாச்சியார்புரம் | 10 | 2.26 | 2.14 | 0.12 | 11877 |
| 3. இராமநாதபுரம் மாவட்டம் | | | | | | | |
| 12 | நயினார்கோயில் | நயினார்கோயில் | 23 | 5.47 | 4.49 | 0.98 | நிலுவை |
| 4. சிவகங்கை மாவட்டம் | | | | | | | |
| 13 | திருபுவனம் | பொட்டப்பாளையம் | 17 | 20.34 | 19.79 | 0.55 | 54599 |
| | | | மொத்தம் | 41.39 | 37.82 | 3.57 | |

<u>பெறப்பட்ட பதிலுரை:</u>

தணிக்கை அறிக்கை வாயிலாக குறைபாடு சுட்டிய பின் மொத்தம் ரூ.2.59 சம்மந்தப்பட்டவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. நயினார்கோவில் ஊராட்சி ஒன்றிய தொகை ரூ.0.98 இலட்சம் மட்டும் நிலுவையாக உள்ளது.

**7.9.4 திருநெல்வேலி மாவட்டம் – தென்காசி ஊராட்சி ஒன்றியம், கணக்கப்பிள்ளைவலசை , கிராம ஊராட்சி, – கட்டட தொழிலாளர் நலநிதி வசூலித்தது – நலநிதி கணக்கில் செலுத்தப்படவில்லை – நலநிதிக்கு வருவாய் இழப்பு ரூ.10.58 இலட்சம்.**

**பத்தி எண்.34 / 2016–17**

அரசு ஆணை எண்.295 / தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I2) துறை, நாள்.17.12.2013–ன்படி உள்ளாட்சி நிறுவனங்களில் வழங்கப்படும் கட்டட உரிமங்கள் மற்றும் மேற்கொள்ளப்படும் பணிகளில், மதிப்பீட்டுத் தொகையில் 1% வீதத்தை கட்டட தொழிலாளர் நிதியாக வசூலித்து / பிடித்தம் செய்து கட்டட தொழிலாளர் நல வாரியத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த கணக்கப்பிள்ளைவலசை ஊராட்சியில் 2016–17 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள கீழ்காணும் கட்டட உரிமங்களின் உரிமதாரரிடமிருந்து மொத்தம் ரூ.10.58 இலட்சம் வசூலிக்கப்பட்ட நலநிதி வாரிய கணக்கில் செலுத்தப்படாமல் ஊராட்சி கணக்கிலேயே வைக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. இதனால் தொழிலாளர் நல வாரியத்திற்கு ரூ.10.58 இலட்சம் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

| வ.எண் | கட்டட உரிமம் எண் / நாள் | நலநிதித் தொகை |
|---|---|---|
| 1 | 1 / 22.04.2016 | 4,500 |
| 2 | 2 / 28.03.2017 | 10,53,378 |
| | மொத்தம் | 10,57,878 |

<u>பெறப்பட்ட பதிலுரை:</u>

தணிக்கையில் சுட்டிய தொகை ரூ.10,57,878/– 2018–19 ஆம் ஆண்டில் ரூ.7 இலட்சம் மற்றும் மீதமுள்ள தொகை ரூ.3,57,878/– 2019–20 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டு ஆவணங்கள் தணிக்கைக்கு காண்பிக்கப்பட்ட பின் 26.07.2019 அன்று பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

**7.9.5 விருதுநகர் மாவட்டம் – நரிக்குடி ஊராட்சி ஒன்றியம் கீழக்கொன்றைக்குளம் ஊராட்சி – கணக்கு எண்.II–லிருந்து மூன்றாம் நபருக்கு காசோலை வழங்கியது – முறைகேடு – ரூ.9 இலட்சம்.**

**பத்தி எண்.24 / 2016–17**

கிராம ஊராட்சி கணக்கு எண்.II—லிருந்து கிராம ஊராட்சியின் மின்கட்டணம், குடிநீர் வழங்களுக்கான கட்டணம், கிராம ஊராட்சியின் கட்டடங்களுக்கான மின் கட்டணம் மற்றும் கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய சேவைக்கட்டணம் மட்டுமே செலுத்த வேண்டும். மிகுதியாக உள்ள இருப்புத் தொகை மாவட்ட ஆட்சியருக்கு திரும்ப செலுத்தப்பட வேண்டும். அரசு ஆணை (நிலை) எண்.180 / ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்.01.12.2008—ன்படி இதற்கான செலவினத்தை காசோலையாக வழங்கும்போது காசோலைகளில் தமிழ்நாடு மின்சார வாரியம் / குடிநீர் வடிகால் வாரியத்திற்கான கட்டணம் / உபரியாக உள்ள நிதியினை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்புதல் என காசோலை தாள்களில் அச்சு / முத்திரை இடப்படவேண்டும்.

இதற்குமாறாக கீழ்க்கொன்றைக்குளம் ஊராட்சியில் கீழ்காணும் மூன்று மூன்றாம் நபர் காசோலையில் திரு.முனியசாமி என்பவர் பெயரில் வழங்கப்பட்டு வங்கியில் காசாக்கப்பட்டுள்ளது காணப்பட்டது.

| வ.எண். | காசோலை எண்/தேதி | தொகை |
|---|---|---|
| 1 | 511079 / 01.09.2016 | ரூ.3,00,000/— |
| 2 | 511080 / 01.09.2016 | ரூ.3,00,000/— |
| 3 | 511081 / 14.09.2016 | ரூ.3,00,000/— |
| | மொத்தம் | ரூ.9,00,000/— |

பின்னர் இத்தொகையின் விவரம் கண்டறியப்பட்டு கீழ்க்கொன்றைக்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.வே.கற்பகம் மற்றும் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திருமதி.த.அய்யம்மாள் ஆகிய இருவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விருதுநகர் மாவட்டம் அவர்களிடம் நரிக்குடி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ந.க.எண்.1833/2016/ஆ1, நாள்.26.09.2016—ன்படி புகார் அளிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. நடவடிக்கையினை துரிதப்படுத்தி தொகையினை மீளப்பெற வேண்டும். முதல் தகவல் அறிக்கை கூட இன்றுவரை பதியப்படாமல் உள்ளது சரியன்று.

பெறப்பட்ட பதிலுரை

இவ்வலுவலக ந.க.எண்.1939/ஊ.ஒ.த(1)/14.05.2019—ன் வழி ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. பதில் ஏதும் பெறப்படவில்லை.

**7.9.6 பெரம்பலூர் மாவட்டம் – பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம் – சிறுவாச்சூர் கிராம ஊராட்சி – கட்டட உரிம கட்டணம் குறைவாக கணக்கிட்டு வசூலித்தது – வருவாய் இழப்பு ரூ.60.26 இலட்சம்.**

**பத்தி எண்.12 /2016–17**

1994 ஆம் ஆண்டு கிராம ஊராட்சிகள் சட்டப்பிரிவு 110 (எ.எ) மற்றும் பிரிவு 242, 242(2) (3) மற்றும் அரசாணை (நிலை) எண்.255 / ஊரக வளர்ச்சி (சி.2) துறை, நாள்.18.08.1997–ன் படி கட்டட வரைபட அனுமதியாக இருப்பின் கட்டடப்பகுதி கிணறு ஆகிய பகுதிகளுக்கு அதிகபட்சமாக ஒரு சதுரமீட்டருக்கு ரூ.100/– அதன் மடங்கு எனவும் குறைந்தபட்சத் தொகை ரூ.5 அல்லது அதன் மடங்காகவும் நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தனது செயல்முறை ந.க.எண்.அ3/970/2013 நாள்.23.04.2013–ன் வழி பின்வரும் கட்டண விதத்தில் வசூலிக்க உத்திரவிட்டுள்ளார்.

கட்டட பகுதி 1. சொந்த குடியிருப்பு கட்டடம் – 1 சதுர மீட்டருக்கு – ரூ.25/–

2. வணிக நோக்க கட்டடம் – 1 சதுர மீட்டருக்கு – ரூ.50/–

2016–17 ஆம் ஆண்டில் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த சிறுவாச்சூர் கிராம ஊராட்சியில் பின்வரும் 3 வணிக நோக்க கட்டடங்களுக்கு ரூ.50/– வீதம் வசூலிக்காமல் குறைவாக வசூலிக்கப்பட்டதால் இக்கிராம ஊராட்சிக்கு ரூ.60.26 இலட்சம் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | கட்டட பரப்பு ச.மீ | வசூலிக்க வேண்டிய தொகை ரூ. | வசூலித்த தொகை ரூ. | வருவாய் இழப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | தனலட்சுமி மருத்துவ கல்லூரி | 146247.92 | 73,12,896 | 15,74,215 | 57,38,681 |
| 2 | கிரீன்பார்க் மெட்ரிகுலேசன் பள்ளி | 3706.07 | 1,85,863 | 39,582 | 1,46,281 |
| 3 | ஆல்மைட்டி வித்யாலயா பள்ளி | 3577.27 | 1,79,423 | 38,489 | 1,40,934 |
| | | மொத்தம் | 76,78,182 | 16,52,286 | 60,25,896 |

**பெறப்பட்ட பதிலுரை**

இவ்வலுவலக ந.க.எண்.1939/ஊ.ஒ.த(1)/14.05.2019–ன் வழி ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. பதில் ஏதும் பெறப்படவில்லை.

**7.9.7 திருவண்ணாமலை மாவட்டம் – ஆரணி ஊராட்சி ஒன்றியம் இராட்டிணமங்கலம் ஊராட்சி – குடிநீர் கட்டண நிலுவை வசூலிக்கப்படுவதில் சுணக்கம் – வருவாய் இழப்பு ரூ.22.92 இலட்சம்.**

பத்தி எண்.8 /2016–17

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி ஊராட்சி ஒன்றியம் இராட்டிணமங்கலம் ஊராட்சியின் மீதான 2016–17 ஆம் ஆண்டு தணிக்கையின் போது குடிநீர் கட்டண கேட்பு வசூல் நிலுவை பதிவேட்டினை ஆய்வு செய்ததில், 31.03.2017 அன்று ரூ.22.92 இலட்சம் நிலுவை உள்ளது காணப்பட்டது. நிலுவை கேட்பு ரூ.20.90 இலட்சம் நடப்பு ரூ.2.02 இலட்சம். ஆண்டு கணக்குகளின்படி 2016–17 ஆம் ஆண்டில் குடிநீர் கட்டணம் ரூ.0.14 இலட்சம் மட்டுமே வசூல் காண்பிக்கப்பட்டுள்ளது காணப்பட்டது.

குடிநீர் கட்டணத்தை உரிய நேரத்தில் வசூலிக்க போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை என்பதையே இந்நிலுவை காண்பிக்கப்படுகிறது. இதனை சட்டபூர்வமாக வசூலிக்கும் நிலை கடந்து போனால், கிராம ஊராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படும் எனத் தணிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது. குடிநீர் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு பொதுநிதியில் உள்ள மற்ற வரிவசூல் தொகைகள் பயன்படுத்தப்படுவதால், வளர்ச்சி திட்டங்களை மேற்கொள்ள இயலாத நிலை எழும் என தணிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது.

பெறப்பட்ட பதிலுரை

இவ்வலுவலக ந.க.எண்.1939/ஊ.ஒ.த1/14.05.2019 –ன் வழி ஊரக வளர்ச்சித் துறை இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. பதில் ஏதும் பெறப்படவில்லை.

# 8.பல்கலைக்கழகங்கள்

### 8.1 பல்கலைக்கழகங்கள் அமைப்பு

தமிழ்நாட்டில் உள்ள மாணவ, மாணவிகள் உயர்கல்வி பெற மத்திய, மாநில அரசுகளால் இயற்றப்பட்ட தனித்தனியான சட்டங்களால் தனித்துவம் வாய்ந்த, சுதந்திரமான, தன்னாட்சி பெற்ற சட்டபூர்வமான 23 பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டு உயர்கல்வி பணியினை செய்து வருகின்றன.

### 8.2 தணிக்கைக்கான ஆதாரம்

ஒவ்வொரு பல்கலைக்கழகமும் அவை தொடங்கும்பொழுதே அவற்றின் மீதான தணிக்கை தனி அரசாணை மூலம் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறைக்கு ஒப்படைக்கப்பட்டு அதன் அடிப்படையில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 பிரிவு 2ஜி அட்டவணை வரிசை எண்.7–இன் படி அனைத்து பல்கலைக்கழகங்களின் சட்டபூர்வ தணிக்கையாளர் நிதித்துறையின் கீழ் இயங்கும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் இயக்குநர் ஆவார்.

### 8.3 தணிக்கை மேற்கொள்ளுதல்

தமிழ்நாட்டில் 23 பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற்றில் 14 பல்கலைக்கழகங்களில் உடனிகழ் தணிக்கை முறையிலும் மற்ற 9 பல்கலைக்கழகங்களில் ஆண்டு தணிக்கை முறையிலும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 8.4 ஆண்டு கணக்குகள்

ஒவ்வொரு பல்கலைக்கழகமும் அதற்கென உருவாக்கப்பட்ட தனிச் சட்டம் மற்றும் நிதி விதிகளின் அடிப்படையில் கணக்குகளை நடைமுறைபடுத்தி பராமரித்து வருகின்றன. பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் பராமரிக்கப்படும் பொதுவான கணக்குகளின் விவரம் வருமாறு.


1. பொது நிதிக் கணக்கு
2. அறக்கட்டளை கணக்கு மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி கணக்கு
3. தேர்வு கணக்கு
4. கட்டண கணக்கு
5. ஓய்வூதிய கணக்கு
6. தொலைதூர / அஞ்சல்வழி கல்வி கணக்கு
7. திட்ட கணக்கு
8. இதர திட்ட கணக்குகள்

### 8.5 மான்யங்கள்

தனித்தனி சட்டத்தின் மூலம் சுதந்திரமான தன்னாட்சி பெற்ற தனித்துவமாக உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மான்ய நிதி தொகுப்பு அடிப்படையில் மத்திய, மாநில அரசுகளிடமிருந்து நிதி உதவிகளை மான்யமாக பெறுகின்றன. பல்கலைக்கழகங்களின் அன்றாட நிர்வாக காரணங்களுக்கான செலவிற்காக அரசு ஆணை (நிலை) எண்.226 உயர்கல்வி (கே.2)த் துறை, நாள்.17.05.1999–இன் படி உயர்கல்வித் துறையின் கீழ் செயல்படும் பல்கலைக்கழகங்களுக்கு தொகுப்பு மான்யம் (Block grant) 1998 முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 01.01.1996 அன்று நிரப்பப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் மட்டுமே மானிய கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இத்தொகுப்பு மான்யம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதர பல்கலைக்கழகங்கள், ஊதிய மான்யம் (Salary grant), பராமரிப்பு மான்யம் (Maintenance grant), காலாவதியாகாத ஒட்டு மொத்த தொகை மான்யம் (Non Lapsable Lumpsum Grant) என பல்வேறு மான்யங்களையும், கட்டிடம் மற்றும் உபகரணங்கள் கொள்முதலுக்காக சிறப்பு மூலதன மான்யங்களும் பெற்று வருகின்றன.

### 8.6 நிர்வாக அமைப்பு

பல்கலைக்கழகங்களின் நிர்வாக அமைப்பு பின்வருமாறு உள்ளது.




பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் உயர் கல்வி துறையின் கீழும், இதர பல்கலைக்கழகங்கள் வேளாண்மை துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, சட்டத்துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை என பல்வேறு துறைகள் கட்டுப்பாட்டின் கீழும் செயல்படுகின்றன.

## 8.7 தணிக்கைக்கான ஆதாரம் மற்றும் 2016–17 ஆம் ஆண்டின் வரவு செலவு

தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் தணிக்கை மேற்கொள்வதற்கான ஆதாரம் (அரசாணை) மற்றும் மேற்படி பல்கலைக்கழகங்களின் 2016–17 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மொத்த வரவு–செலவு விவரம் பின்வருமாறு.

| வ. எண் | பல்கலைக்கழகங்கள் | தணிக்கை மேற்கொள்ள ஆதாரம் (அரசாணைகள்) | வரவு (ரூ.) (இலட்சங்களில்) | செலவு (ரூ.) (இலட்சங்களில்) |
|---|---|---|---|---|
| 1 | சென்னைப் பல்கலைக்கழகம் | G.O.Ms.No.986, Fin(Fds) dt.17.10.86 | 99905.86 | 99425.58 |
| 2 | மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் | G.O.Ms.No.990 Fin dt.29.08.66 | 22776.02 | 22410.19 |
| 3 | அண்ணாமலை பல்கலைக்கழகம். சிதம்பரம் | G.O.Ms.No.1705, Edu, dt.04.09.46 | 184064.00 | 188647.99 |
| 4 | அண்ணா பல்கலைக்கழகம், சென்னை | G.O.Ms.No.520, Fin (Fds) dt.29.05.1980 | 235696.46 | 224314.38 |
| 5 | தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், கோவை | G.O.Ms.No.734,Fin (Fds) dt.01.06.1972 | 62168.81 | 64208.62 |
| 6 | தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம். சென்னை | G.O.Ms.No.1118, Fin LF dt.25.10.1990 | 35518.00 | 29620.00 |
| 7 | பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி | G.O.Ms.No.450, Fin (Fds) dt.16.07.1982 | 44306.77 | 43249.06 |
| 8 | பாரதியார் பல்கலைக்கழகம், கோவை | G.O.Ms.No.450, Fin (Fds) dt.16.07.1982 | 54414.84 | 53139.61 |
| 9 | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி | G.O.Ms.No.916 Fin (Fds) dt.29.10.1987 | 18584.52 | 15911.97 |
| 10 | தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் | G.O.Ms.No.450 Fin (Fds) dt.16.07.1982 | 6402.86 | 7265.51 |
| 11 | தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை | G.O.Ms No 192 H,I.M & H & F W dt.03.02.1990 | 12705.13 | 9367.39 |
| 12 | அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் பல்கலைக்கழகம் | G.O.Ms.No.328 Fin (LF) dt.03.05.1991 | 15785.17 | 15917.90 |
| 13 | அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம். கொடைக்கானல் | G.O.Ms.No.293 Fin (Fds) dt.07.04.1986 | 7278.79 | 7532.36 |
| 14 | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | G.O.Ms.No.148 Fin (LF) dt.03.03.1992 | 14244.42 | 12441.71 |
| 15 | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், சென்னை | G.O.Ms.No.826 Fin (LF) dt.11.10.1999 | 6749.20 | 6802.46 |
| 15 | தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம். சென்னை | G.O.Ms.No.826 Fin (LF) dt.11.10.1999 | 6749.20 | 6802.46 |



119-3—16a

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | பெரியார் பல்கலைக்கழகம், சேலம் | G.O.Ms.No 491 Fin (LF) dt 17.05.2000 | 42490.25 | 42397.16 |
| 17 | திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர் | G.O.Ms.No 133 Fin (LF) dt.04.04.2005 | 11442.73 | 11950.85 |
| 18 | தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை | G.O.Ms.No.171 Fin (LF) dt 02.05.2005 | 5119.53 | 6102.28 |
| 19 | தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், சென்னை | G O Ms No.43 Fin (LF) dt 14.12.2005 | 1681.97 | 1330.05 |
| 20 | தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், சென்னை | G.O.Ms.No.504 Fin (LF) dt.01.07.2008 | 3044.59 | 1789.16 |
| 21 | தமிழ்நாடு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம் | G.O.Ms.No 174 Fin (LF) dt.30.05.2013 | 12958.00 | 11632.00 |
| 22 | தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி, திருச்சி | G.O.Ms.No.299 Finance (LF) Dept , dt.26.12.2014 | 2569.21 | 2396.91 |
| 23 | தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகம், சென்னை | G O Ms No.23 Fin (LF) dt 27.01.2015 | 314.62 | 164.74 |

## 8.8 தணிக்கையில் கண்டறியப்பட்ட குறைபாடுகள்

**2016–17** ஆம் ஆண்டிற்கான தணிக்கை மேற்படி பல்கலைக்கழகங்களில் மேற்கொண்ட போது, கண்டறியப்பட்டவைகளில் தெரிவு செய்யப்பட்ட குறைபாடுகள் **2014** ஆம் வருட உள்ளாட்சி நிதி தணிக்கைச் சட்டப் பிரிவு **20**–ன் படி அரசின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு பின்வருமாறு தொகுத்து அளிக்கப்படுகிறது.

## பல்கலைக்கழகங்கள்

**8.8.1 சென்னை பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகம் 2016–17 தணிக்கை – மூன்றாண்டு பணி முடிக்காத ரீடர் மற்றும் விரிவுரையாளர்களுக்கும் [Readers and Lecturer (Selection grade)] அரசாணைக்கு முரணாக கூடுதல் ஊதியம் வழங்கியது – ரூ.148.08 இலட்சம். (சென்னை பல்கலைக்கழகம் பத்தி எண்.14 மற்றும் தமிழ்நாடு திறந்தவெளி பல்கலைக்கழகம் பத்தி எண்.13/2016–17)**

அரசாணை நிலை எண். 350 உயர்கல்வித்துறை நாள்.09.09.2009–ன் படி 01.01.2006க்குள் மூன்றாண்டுகள் பணி முடித்த ரீடர் மற்றும் தேர்வுநிலை விரிவுரையாளர்களுக்கு மட்டுமே ரூ.37400–67000 + கல்வி தர ஊதியம் ரூ.9000 என்ற ஊதிய நிரக்கில் ஊதிய நிர்ணயம் மேற்கொள்ள வேண்டும்.

01.01.2006க்குள் மூன்றாண்டுகள் பணி முடிக்காத ரீடர் மற்றும் தேர்வுநிலை விரிவுரையாளர்களுக்கு ரூ.15600–39100 + கல்வி தர ஊதியம் ரூ.8000 என்ற ஊதிய நிரக்கில் மட்டுமே மேற்படி அரசாணையின்படி ஊதியம் மேற்கொள்ள வேண்டும்.

இதற்கிடையில், அரசாணை நிலை எண். 179 உயர்கல்வித்துறை நாள்.14.10.2014 இன் படி 01.01.2006 முதல் 09.09.2009 வரையிலான காலத்தில் ரீடர் பதவியில் பணியமர்த்தப்பட்டவர்களுக்கு ரூ.37400–67000 + கல்வி தர ஊதியம் ரூ.9000 என்ற ஊதிய நிரக்கில் ஊதிய நிர்ணயம் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும், அரசாணை நிலை எண். 328 உயர்கல்வித்துறை நாள்.16.11.2017–இன் மூலம் அரசாணை நிலை எண். 179 உயர்கல்வித்துறை நாள்.14.10.2014 இன் படி அனுமதிக்கப்பட்ட ஊதியம் ரத்து செய்யப்பட்டு இதற்கு முன்னர் நடைமுறையில் இருந்த அரசாணை நிலை எண்.350 உயர்கல்வித்துறை நாள்.09.09.2009–ன் படியான ஊதியமே தொடரும் என ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், அரசாணை நிலை எண். 179 உயர்கல்வித்துறை நாள்.14.10.2014 இன் படி அனுமதிக்கப்பட்ட மிகை ஊதியத் தொகையினைவும் பிடித்தம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள சென்னை பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகங்களில் ரீடர் பணியிடத்தில் நியமிக்கப்பட்டுள்ளவர்களுக்கு, 01.01.2006க்குள் நிர்ணயிக்கப்பட்டுள்ள மூன்றாண்டுகள் பணி நிறைவு செய்யாதவர்களுக்கும் மேற்படி அரசாணையின் அறிவுரைகளுக்கு முரணாக அவரவர் பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள ரீடர் பணியில் பணி சேர்ந்த நாள் முதலே ரூ.37400–67000 + கல்வி தர ஊதியம் ரூ.9000 என்ற ஊதிய

நிரக்கில் ஊதியம் நிர்ணையிக்கப்பட்டுள்ளதால் 2016—17 முடிய ஒட்டு மொத்தமாக ரூ.148.08 இலட்சம் கூடுதல் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஆசிரியரின் பெயர் (திரு. / திருமதி) | பணியில் சேர்ந்த நாள் | 2016—17 முடிய வழங்கப்பட்ட கூடுதல் ஊதியம் ரூபாய் |
|---|---|---|---|
| | சென்னை பல்கலைக்கழகம் | | |
| 1 | கே.ரவிச்சந்திரன் | 01.07.2009 | 14,16,474 |
| 2 | ட்டிலாவண்யா | 03.04.2008 | 11,69,348 |
| 3 | ஆர்.சீனிவாசன் | 03.04.2008 | 14,36,096 |
| 4 | என்.கோதண்டராமன் | 26.11.2008 | 14,05,174 |
| 5 | ஆர்.ரங்கராஜன் | 20.08.2009 | 16,15,215 |
| 6 | இளங்கோவன் வெள்ளைச்சாமி | 10.04.2006 | 16,28,517 |
| 7 | எஸ்.பாலகுமார் | 10.11.2008 | 14,60,657 |
| 8 | எஸ்.ஜனார்ந்தனம் | 05.03.2008 | 16,60,427 |
| 9 | எம்.சீனிவாசன் | 21.07.2009 | 15,90,054 |
| | தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைகழகம் | | |
| 10 | எம். மணிவண்ணன் | 28.06.2017 | 14,26,060 |
| | | மொத்தம் | 1,48,08,022 |

மேலும், இதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை அரசுக்கு தெரிவிக்க வேண்டும் என தெரிவித்திருந்தும் யாதொரு நடவடிக்கையும் தெரிவிக்கப்படவில்லை.

31.03.2017 முடிய கூடுதலாக வழங்கப்பட்டுள்ள ஒட்டு மொத்த ஊதியம் ரூ.148.08 இலட்சம் பிடித்தம் செய்யப்பட வேண்டும்.

சென்னை பல்கலைக்கழக பதிலறிக்கை – அரசாணை நிலை எண்.328 உயர்கல்வித்துறை நாள்.16.11.2017—ஐ நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தணிக்கையின் குறிப்புரை** – இடைக்கால பதில் மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது.

**8.8.2 சென்னை பல்கலைக்கழகம் 2016–17 தணிக்கை – ஆறு சார்ஜண்ட்களுக்கு (Sergent) தேர்வுநிலை வழங்கும்போது அரசாணைக்கு முரணாக அரசால் அனுமதிக்கப்பட்டதை விட கூடுதலான ஊதிய நிரக்கு மற்றும் அதிகமான தர ஊதியம் வழங்கியதால் கூடுதல் செலவினம் ரூ.7.74 இலட்சம்.**

பத்தி எண்.17/2016–17

அரசாணை எண்.234/நிதித்துறை/ஊ.கு/நாள்.01.06.2009–ன் படி சென்னை பல்கலைக்கழக சார்ஜண்ட் (Sergent) பதவிக்கு PB-I ரூ.5200–20200 என்ற ஊதிய நிரக்கில் ரூ.2200/– தர ஊதியம் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.237/நிதித்துறை/ஊ.கு/ நாள்.22.07.2013–ன் படி 01.01.2006–க்கு பிறகு பத்து ஆண்டுகள் பணி முடித்த சார்ஜண்ட்களுக்குஅவர்கள் ஏற்கனவே ஊதியம் பெற்று வரும் மேற்படி ரூ.5200–20200+ தர ஊதியம் ரூ.2200/– என்ற ஊதிய நிரக்கிலேயே இரண்டு ஊதிய உயர்வுகள் (3% + 3%) மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

சென்னை பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் ஆறு சார்ஜண்ட்களுக்கு மேற்படி அரசு ஆணைகளுக்கு முரணாக அவர்கள் பத்தாண்டு பணி முடித்ததும் அவர்களுக்கு ரூ.9300–34800 + தர ஊதியம் ரு.4300/– என்ற ஊதிய நிரக்கில் ஊதிய நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பதவிகளுக்கு அரசு ஊழியர்களுக்கு வெளியிடும் அரசாணைகள் பொருந்தும் என்றும் காவல்துறையின் சார்பு ஆய்வர்கள் மட்டுமே மாற்றுப்பணியில் தமிழக சட்டப்பேரவையின் சார்ஜண்ட்களாக பணிபுரிவதால் அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் பல்கலைக்கழக சார்ஜண்ட்களுக்கு பொருந்தாது என்றும் அரசு கடிதம் எண்.7495/H1/2014/உயர்கல்வித்துறை/ நாள்.02.01.2015–ல் சென்னை பல்கலைக்கழகத்திற்கு தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை பல்கலைக்கழக சார்ஜண்ட் பதவிக்கு தமிழக காவல் துறை சார்பு ஆய்வர்கள், பணிமாற்றம் மூலம் நியமிக்கப்படுவதில்லை என்பதாலும் பல்கலைக்கழக சார்ஜண்ட் பதவி நியமனத்திற்கு பட்டப்படிப்பு அவசியமில்லை என்பதாலும், தமிழக காவல் துறை சார்பு ஆய்வர் பதவிக்கு பட்டப்படிப்பு அவசியம் என்பது குறிப்பிடத்தக்கது என்பதாலும் சட்டப்பேரவை சார்ஜண்ட் பதவிக்கான ஊதியத்தை பல்கலைக்கழக சார்ஜண்ட் பதவிக்கு அரசு அறிவுரைக்கு முரணாக வழங்கியதால் 2016–17 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கூடுதல் செலவினம் மொத்தம் ரூ.7.74 இலட்சம் மான்ய கணக்கீட்டிற்க்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**பதிலறிக்கை** - பல்கலைக்கழக சிண்டிகேட் 23.11.2010 அன்று மேற்கொண்ட முடிவின்படி ஊதியம் வழங்கப்படுகிறது.

**தணிக்கையின் கருத்துரை** - அரசு அறிவுரைகள் பின்பற்றப்படவேண்டும்.

**8.8.3 சென்னை பல்கலைக்கழகம் 2016–17 தணிக்கை – பல்கலைக்கழக மானிய குழுவால் ஐந்தாண்டுகளுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்ட உயிரி தொழில்நுட்ப (Bio Technology) துறைக்கு அதன்பிறகும் தொடர்ந்து அளிக்கப்பட்டு வரும் ஆசிரியர்களுக்கான ஊதிய செலவினம் – 2016–17 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூ.65.58 இலட்சம்.**

பத்தி எண்.20இ/2016–17

பல்கலைக்கழக மான்ய குழு கடிதம் F.11–1/96 (CA/Bio-cos-1) நாள்.27.03.99–ன் படி சென்னை பல்கலைக்கழகத்தில் உயிரி தொழில்நுட்பத்துறை (Bio Technology Department)–க்கு ஒரு பேராசிரியர் மற்றும் இரண்டு விரிவுரையாளர் பணியிடத்திற்கு 01.04.1996 முதல் ஐந்தாண்டுகளுக்கான அனுமதியும் ரூ.31,00,000/– மான்யமும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி மற்றும் மான்யம் 31.03.2001–ல் முடிவடைகிறது. அதன்பிறகு 01.04.2001 முதல் இப்பணியிடங்கள் தொடர அரசு அனுமதி பெறப்பட வேண்டும். ஆனால் அரசு அனுமதி ஏதும் பெறாமல் மேற்கண்ட மூன்று பணியிடங்களுடன் கூடுதலாக இரண்டு பணியிடமும் சேர்த்து மொத்தம் ஐந்து பணியிடங்களுடன் 01.04.2001–க்கு பிறகும் தொடர்ந்து செயல்படுகிறது. 2016–17 ஆம் ஆண்டில் மட்டும் மேற்படி ஐந்து ஆசிரியர்களுக்கான செலவினம் ரூ.65.58 இலட்சம் ஆகும்.

**பதிலறிக்கை** - பல்கலைக்கழக திட்டமில்லா (Non Plan) நிதியில் மேற்படி செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

**தணிக்கையின் கருத்துரை** - தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் 01.04.2001–க்கும் பிறகு தொடர அரசின் அனுமதி பெற வேண்டும்.

**8.8.4 சென்னை பல்கலைக்கழகம் 2016–17 தணிக்கை – பொருளாதார படிப்பிற்கான டாக்டர் அம்பேத்கர் மையம் (Dr.Ambedkar Centre for Economic Studies) – மத்திய அரசின் (Ministry of Social Justice & Empowerment, Government of India) சமூக நீதி மற்றும் அதிகாரமயமாக்கல் துறையின் கீழ் செயல்படும் டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளையிடமிருந்து (Dr.Ambedkar Foundation) மானியத் தொகை ரூ.124.96 இலட்சம் பெறப்படாதது மற்றும்**

மையத்தில் பணியாற்றும் ஆராய்ச்சி அலுவலருக்கு (Research Officer) விதிகளுக்கு முரணாக ஆசிரியர்களுக்கு இணையான ஊதியமும் பதவி உயர்வும் வழங்கியது – குறைபாடு.

பத்தி எண்.47/2016–17

அ (1) மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமயமாக்கல் (Ministry of Social Justice & Empowerment) துறையின் கீழ் செயல்படும் டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளை (Dr. Ambedkar Foundation) மூலம் வழங்கும் மானிய உதவியுடன், சென்னை பல்கலைக்கழகத்தில் பொருளாதார படிப்பிற்கான டாக்டர் அம்பேத்கர் மையம் (Dr.Ambedkar Centre for Economic Studies) ஆரம்பிக்கப்பட்டு, மே 1995 முதல் செயல்பட்டுவருகிறது.

(2) 2011–12 முதல் இம்மையத்திற்கு, ஊதியத்திற்கு ரூ.25 இலட்சமும் 12 அகன்ற செயல்பாடுகளுக்கு (Twelve Broad Activities) ரூ.10 இலட்சமும் மொத்தமாக ரூ.35 இலட்சம் ஆண்டு மானியமாக உயர்த்தப்பட்டது. கீழ்காணுமாறு நான்கு பணியிடங்கள் மேற்படி மையத்திற்கு அனுமதிக்கப்பட்டது.

| வ. எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை | ஊதிய விவரம் |
|---|---|---|---|
| 1 | பேராசிரியர் (Professor) | 1 | PB–4 ரூ.37400–6700+த.ஊ ரூ.10000/– |
| 2 | ஆராய்ச்சி அலுவலர் (Research Officer) | 1 | PB–3 ரூ.15600–39100+த.ஊ ரூ.5400/– |
| 3 | சுருக்கெழுத்து தட்டச்சர் (Stenographer) | 1 | PB–2 ரூ.9300–34800+த.ஊ ரூ.4200/– |
| 4 | அலுவலக உதவியாளர் (Peon) | 1 | PB–1(A)ரூ.5200–20200+த.ஊ ரூ.1800/– |

(3) 23.09.1998 அன்று நடைபெற்ற சிண்டிகேட் கூட்டத்தில் இம்மையத்தை தனியான துறையாக செயல்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இம்மையத்திற்கான கணக்கு 01.04.2016–ல் ரூ.94,88,124/– பற்றாக்குறை இருப்புடன் தொடங்கி வரவு ஏதுமின்றி செலவு ரூ.30,08,099/– மேற்கொள்ளப்பட்டு 31.03.2017–ல் ரூ.1,24,96,223/– நிகர பற்றாக்குறையுடன் முடிவடைந்துள்ளது. மேற்படி தொகை பகுதி I திட்டமில்லா செலவின கணக்கிலிருந்து (Part I Non plan A/c) பெறப்பட்டு செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தொகை ரூ.124.96 இலட்சம் மத்திய அரசுக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளையிடமிருந்து பெறப்பட்டு பல்கலைக்கழக திட்டமில்லா கணக்கில் செலுத்தப்படவேண்டும்.



119-3—17

ஆ) 2009–10 முதல் 2016–17 முடிய 8 ஆண்டுகளுக்கு மேற்படி மையத்திற்கான தகுதி மான்யம் ரூ.2,30,00,000/– விவரம் கீழ்காணுமாறு.

| வ.எண். | ஆண்டு | மான்யம் (Grant due) ரூபாய் |
|---|---|---|
| 1 | 2009–10 | 10,00,000 |
| 2 | 2010–11 | 10,00,000 |
| 3 | 2011–12 | 35,00,000 |
| 4 | 2012–13 | 35,00,000 |
| 5 | 2013–14 | 35,00,000 |
| 6 | 2014–15 | 35,00,000 |
| 7 | 2015–16 | 35,00,000 |
| 8 | 2016–17 | 35,00,000 |
| | மொத்தம் | 2,30,00,000 |

ஆனால் தகுதி மான்யத்தொகை ரூ.230 இலட்சம், கோரி பெறப்படவில்லை. தகுதி மான்ய தொகை மேற்படி ஆண்டுகளில் முழுமையாக செலவிடப்படாததால் தற்போது மேலே பத்தி அ (3)–ல் குறிப்பிட்டுள்ளவாறு உண்மைச்செலவினம் ரூ.124.96 இலட்சம் மட்டுமே கோரிப்பெற இயலும். இக்குறைபாடு சரிசெய்யப்பட்டு வருங்காலங்களில் தகுதி மான்யம் ஆண்டுக்கு ரூ.35 இலட்சம் என்பது கோரிப் பெற்று முழுமையாக செலவிடப்பட வேண்டும்.

(இ) மேற்படி மையத்தின் ஆராய்ச்சி அலுவலராக பணியாற்றும் திரு.எஸ்.இராமச்சந்திரன் அவர்களுக்கு பல்கலைக்கழக ஆசிரியருக்கு இணையாக ஊதியமும் காலமுறை பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் தெளிவுரை கோரி டாக்டர்.அம்பேத்கார் அறக்கட்டளைக்கு எழுதிய கடிதங்களுக்கு எவ்வித பதிலும் பெறப்படவில்லை. மேலும் இவர் இணை பேராசிரியருக்கு இணையான ஊதியம் பெறுவதற்கான தகுதி தேர்வில் (Evaluation of Publications) தேர்ச்சி பெறவில்லை. எனவே இவருக்கு வழங்கப்பட்ட கூடுதல் ஊதியம் தடைக்குட்படுத்தப்படுகிறது.

பதிலறிக்கை திரு.எஸ்.இராமச்சந்திரன் அவர்களால் சென்னை உயர் நீதிமன்றத்தில் 2016–ல் தொடரப்பட்ட வழக்கு நிலுவையாக உள்ளது.

**தணிக்கையின் குறிப்புரை** – இடைக்கால பதில் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**8.8.5 சென்னை பல்கலைக்கழகம் 2016–17 தணிக்கை – குற்றவியல் துறையினை மேம்படுத்த (புதிய கட்டடம், உபகரணம், இதர கட்டமைப்பு போன்றவற்றிற்காக) அரசால் 2008–09–ல் வழங்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் மானியத் தொகையில் அறைகலன்கள் (Furnitures) மட்டும் வாங்கியது – 9 ஆண்டுகளாக வேறு செலவினம் ஏதும் மேற்கொள்ளப்படாதது நிலுவை மான்யம் ரூ.77.61 இலட்சம் வட்டியுடன் அரசுக்கு திருப்பி செலுத்தப்பட வேண்டும்.**

**பத்தி எண்.50/2016–17**

(1) ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் ஏதேனும் ஒரு துறையை மேம்படுத்தும் பொருட்டு 11வது திட்ட காலத்தின் கீழ் சென்னை பல்கலைக்கழக பதிவாளர் சமர்ப்பித்த கருத்துருவின் அடிப்படையில் குற்றவியல் துறை (Department of Criminology)–யை மேம்படுத்த அரசாணை எண்.375, உயர்கல்வித்துறை,நாள்.11.09.2008–ல் சிறப்பு மான்யமாக ரூ.1 கோடி வழங்கப்பட்டது. 21.11.2008 அன்று நடைபெற்ற சிண்டிகேட் கூட்டத்தில் இத்தொகை ரூ.1 கோடி மான்யத்தை கீழ்காணுமாறு செலவு மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

| வ.எண் | தலைப்பு | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | புதிய கட்டடம் (New Building) | 50.00 |
| 2 | உபகரணங்கள் (Equipments) | 31.00 |
| 3 | இதர செலவினம் | 19.00 |
| | மொத்தம் | **100.00** |

(2) சென்னை பல்கலைக்கழக குற்றவியல் துறையை "இணைய தடவியல் மற்றும் தகவல் பாதுகாப்பிற்கான சிறந்த மையம்"–ஆக (Centre for Excellence in Cyber forensic and Information Security) மேம்படுத்த தமிழக ஆளுநரால் கடித எண்.1040/U2/2011 நாள்.25.08.2011–ல் ஒப்புதல் வழங்கப்பட்டது.

(3) மாணவர்கள் வசதிகள் மைய கட்டடத்தில் மூன்றாவது தளம் ஒன்றை புதிதாக கட்டி (Construction of 3rd floor over the students amenity centre) அதில் மேற்படி "இணைய தடவியல் மற்றும் தகவல் பாதுகாப்பிற்கான சிறந்த மையம்" செயல்பட பல்கலைக்கழக கட்டட

குழுவின் (Building Committee) 20.04.2011 தேதிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதற்கான மொத்த செலவில் ரூ.40 இலட்சத்தை மேற்படி அரசு மான்யத்திலும் ரூ.60 இலட்சத்தை பல்கலைக்கழக மூலதன நிதியிலும் மேற்கொள்ள 21.04.2011 தேதிய சிண்டிகேட் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

(4) 2008–09–ல் அரசு வழங்கிய மான்யத்தில் நாளது தேதிவரையில் ரூ.22.39 இலட்சம் மட்டும் அறைகலன்கள் வாங்கிய வகையில் செலவிடப்பட்டுள்ளது. நிலுவை மான்யத் தொகை ரூ.77.61 இலட்சம் சுமார் 10 ஆண்டுகளாக செலவிடப்படாமல் உள்ளது. இதனால் சென்னை பல்கலைக்கழக குற்றவியல் துறையை மேம்படுத்தும் வகையில் அரசு வழங்கிய மான்யத்தில் "இணைய தடவியல் மற்றும் தகவல் பாதுகாப்பிற்கான சிறந்த மையம்'' பதினோராவது திட்ட காலம் 31.05.2017 அன்று முடிவடைந்தும் நாளது தேதி வரையில் ஏற்படுத்தப்படவில்லை. அரசு அறிவுரையும் சிண்டிகேட் கூட்ட முடிவுகளும் செயல்படுத்தப்படவில்லை.

மேற்படி காரணங்களால் செலவிடப்படாத மான்யத் தொகை ரூ.77.61 இலட்சம் ஈட்டப்பட்ட வட்டியுடன் அரசுக்கு திரும்பி செலுத்த வேண்டும்.

***வழங்கப்பட்ட பதிலுரைக்கை*** : *மான்யத்தை செலவு மேற்கொள்ள காலக்கெடு எதுவும் அரசால் நிர்ணயிக்கப்படவில்லை. இருப்பினும் நடப்பாண்டில் நிலுவை மான்யம் செலவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

## 9. பொது நூலகங்கள்

**9.1** சுதந்திர இந்தியாவில் தமிழ்நாட்டில் தான் முதன்முதலாக 1948 ஆம் ஆண்டு நூலக சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 01.04.1950 முதல் அமலுக்கு வந்துள்ளது. இந்த சட்டத்தில் 19 பிரிவுகள் உள்ளன. இந்த சட்டத்தின்படி மாநில முழுவதிலும் பொது நூலகங்கள் அமைக்கவும் அவற்றை கண்காணித்து நிர்வகிக்க ஒரு இயக்குநரை நியமிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிறுவனங்கள் மூலம் வசூலிக்கப்படும் சொத்துவரி அல்லது வீட்டு வரியில் நூல் நிலைய வரி வசூலிக்க 1948 ஆம் ஆண்டு நூலக சட்டப் பிரிவு 12(2) இல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி தற்பொழுது சொத்துவரி / வீட்டு வரியில் 1 ரூபாய்க்கு 10 பைசா நூலகவரியாக வசூலிக்கப்படுகிறது.

**9.2** மேலும் நூலக சட்ட பிரிவு 13 (3)–இன் படி வசூலிக்கப்படும் நூல் நிலைய வரிக்கு இணையாக அரசு பங்குத்தொகை சென்னை தவிர இதர மாவட்ட நூலகங்களுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.


**9.3** தமிழ்நாட்டில் பொது நூலக துறையின் கீழ் கீழ்கண்டவாறு மொத்தம் 3924 பொது நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாநில பொது நூலகம் | – | 1 |
| 2. | மாவட்ட பொது நூலகம் | – | 30 |
| 3. | கிளை நூலகங்கள் | – | 1667 |
| 4. | நடமாடும் நூலகங்கள் | – | 12 |
| 5. | கிராமபுற நூலகங்கள் | – | 1727 |
| 6. | பகுதி நேர நூலகங்கள் | – | 487 |
| | கூடுதல் | – | 3924 |



119-3—18

9.4 நிர்வாக அமைப்பு



பள்ளி கல்வித் துறை
பொது நூலகங்களின் இயக்குநர்
பொது நூலகங்கள் இயக்ககம், இணை இயக்குநர், துணை இயக்குநர், உதவி இயக்குநர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள்
பொது நூலகங்கள்
கன்னிமாரா பொது நூலகம்
மாவட்ட நூலக அலுவலர்
நூலகர்கள்
முதல்நிலை
இரண்டாம் நிலை (ம)
மூன்றாம் நிலை
தொழில்நுட்ப பணியாளர்கள்
அமைச்சுப் பணியாளர்கள்
தொழில்நுட்ப பணியாளர்கள்
அமைச்சுப் பணியாளர்கள்

**9.5** பொது நூலகத்துறை அத்துறைக்கான இயக்குநரின் கட்டுபாட்டில் இயங்குகின்றது. இவருக்கு நிர்வாகத்தில் உதவிட இணை இயக்குநர், துணை இயக்குநர், உதவி இயக்குநர்கள், மாவட்ட நூலகர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் உள்ளனர். அலுவலகப் பணியாளர்களில் தொழில்நுட்ப பணியாளர்களும், அமைச்சுப் பணியாளர்களும் அடங்குவார்கள்.

**9.6** அரசு ஆணை எண்.820 (பல்வகை) கல்வி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை நாள்.03.05.1982–இன் படி மாவட்ட நூலக ஆணைக்குழு பணியாளர்களை 01.04.1982 முதல் அரசு பணியாளர்களாக மாற்றம் செய்யப்பட்டனர். இவர்களுக்கு ஊதியம் மற்றும் படிகள் அனைத்தும் அரசு நிதியிலிருந்து வழங்கப்பட்டு பின்னர் நூலகவரி வருவாய் வசூல் செய்யப்பட்டதும் மேற்படி அரசு கணக்கிலிருந்து பட்டுவாடா செய்யப்பட்ட தொகை திரும்ப அரசு நிதிக்கு செலுத்த உத்திரவிடப்பட்டுள்ளது.

**9.7** பொது நூலக துறையின் முக்கிய பணிகள்

1. பொது நூலக துறையின் மூலம் நூல்களை படிக்கும் வழக்கத்தினை பொது மக்களிடம் ஏற்படுத்திட அனைவரும் படிப்பறிவு பெற உதவிடுதல்.

2. படிப்பறிவில் அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்குதல்

3. பொது மக்களுக்கு படிப்பதற்கு உகந்த நூல்களை வழங்குதல்

4. பொது அறிவை மேம்படுத்துதல் மற்றும் நூலகங்களின் நிதி ஆதாரங்களை மேம்படுத்துதல்

**9.8 தணிக்கைக்கான ஆதாரம்**

சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு கல்வித்துறையின் 30.05.1950 ஆம் நாளிட்ட அரசாணைகள் எண்.1634–இன்படி தொடங்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தின் பிரிவு 16 மற்றும் 17 மற்றும் 1950 ஆம் ஆண்டு மே 30ம் நாளிட்ட கல்வித்துறை அரசாணை எண்.1634 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 பிரிவு 2 ஜி அட்டவணை வரிசை எண்.8–ன் படி மாவட்ட நூலக ஆணைக்குழுவின் தணிக்கை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறைக்கு ஒப்படைக்கப்பட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



119-3—18a

## 10. மாவட்ட வேளாண்மை விற்பனைக்குழு

10.1 விவசாயிகள் மற்றும் வணிகர்களின் நலன் கருதி வேளாண்மைப் பொருட்கள் விற்பனையில் ஒழுங்கு முறையைக் கொண்டுவர மாவட்டந்தோறும் விற்பனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த விற்பனைக் குழுக்கள் வேளாண்மை துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

வேளாண் விற்பனைக் குழுவானது 1952 ஆம் ஆண்டு சென்னை வணிகப் பயிர்கள் சட்டம் 1933–இன் கீழ் அமைக்கப்பட்டது. இச்சட்டம் மற்றும் இதன் பிறகு இயற்றப்பட்ட சட்டங்களும் மாற்றப்பட்டு தற்பொழுது தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987 அமலில் உள்ளது.

இச்சட்டத்தின் முக்கிய நோக்கமானது விளை பொருள் விற்பனையை ஒழுங்குபடுத்துவதும், ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை நிறுவி அதனை நிர்வகிப்பதுமாகும்.

தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியத்தின் மேலாண் இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் தமிழ்நாட்டில் மொத்தம் 22 மாவட்ட வேளாண் விற்பனை குழுக்களும், மற்றும் இவற்றின் கட்டுப்பாட்டில் உழவர் சந்தைகளும் உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. வேளாண் விற்பனை வாரியத்தின் கட்டுமானப்பணிகளை முகமை அடிப்படையில் மேற்கொள்ள சென்னை, வேலூர் மற்றும் மதுரை ஆகிய 3 இடங்களில் வேளாண் பொறியியல் பிரிவுகளும் செயல்படுகின்றன.

**10.2 தணிக்கைக்கான ஆதாரம்**

தமிழ்நாடு வேளாண் விளை பொருள் விற்பனை சட்டம் 1959 விதி எண்.40 இன் கீழ் மற்றும் அரசாணை எண்.1581 வேளாண்மைத் துறை நாள்.04.07.1973 இன் படியும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதிச் சட்டம் 2014 பிரிவு 2ஜி அட்டவணை வரிசை எண்.9–ன் படியும் மாவட்ட வேளாண்மை விற்பனைக்குழுத் தணிக்கைப் பணி உள்ளாட்சி நிதித் தணிக்கை துறைக்கு ஒப்படைக்கப்பட்டு தொடர்ந்து தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**10.3 நிதி ஆதாரம்**

**1. உரிமக் கட்டணம்**

தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987 பிரிவு 8(1) இன் படி அறிக்கையிடப்பட்ட விளைபொருட்களில் வியாபாரம் செய்யும் வியாபாரிகள் விற்பனைக் குழுவின் உரிமம் பெற்று தான் வியாபாரம் செய்ய வேண்டும். இதற்காக உரிமக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

**2. விற்பனைக் கட்டணம்**

அறிக்கையிடப்பட்ட மார்க்கெட் பிரதேசத்தில் வாங்குதல் அல்லது விற்பனை செய்யும் அறிக்கையிடப்பட்ட விளை பொருட்களின் மதிப்பில் ரூ.100/க்கு ரூ.1/– வீதம் கொள்முதல் செய்யும் விற்பனைக் குழுவிற்கு விற்பனைக் கட்டணமாக செலுத்த வேண்டும். இந்த

வருவாய்தான் விற்பனைக் குழுவின் முக்கியமான வருவாயாகும். இவ்வாறு பெறப்படும் வருவாயானது விற்பனைக் குழு நிதி என்னும் தலைப்பில் பராமரிக்கப்படுகிறது.

இந்த நிதியிலிருந்து விற்பனைக் குழுவின் அனைத்து செலவுகளும் மேற்கொள்ளப்படுகின்றது. விற்பனைக்குழு பணியாளர்களின் சம்பளம் மற்றும் படிகள் விற்பனைக் கூடங்களின் வளர்ச்சி பணிகளுக்காகவும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**10.4 ஈட்டுக் கடன் வசதி**

ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் கட்டப்பட்டுள்ள ஊரகக் கிடங்கு மற்றும் கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும் விளை பொருட்கள் மீது அன்றைய சந்தை நிலவரத்தின்படி 75% தொகை அல்லது ரூ.2,00,000/- இதில் எது குறைவோ அத்தொகை விற்பனைக்குழு நிதியிலிருந்து ஈட்டுக்கடனாக விவசாயிகளுக்கு வழங்கப்படும். இக்கடன்தொகை அதிகபட்சமாக ஆறு மாத காலத்திற்கு அனுமதிக்கப்படும்.

**10.5 வரவு–செலவு**

**2016–17** ஆம் ஆண்டில் **22** வேளாண் விற்பனை குழுக்களின் வரவு ரூ.**21368.89** இலட்சமாகவும் செலவு ரூ. **21421.93** இலட்சமாகவும் உள்ளது.

**2016–17** ஆம் ஆண்டில் **3** வேளாண் பொறியியல் பிரிவுகளின் வரவு ரூ.**13584.12** இலட்சமாகவும் செலவு ரூ. **7281.11** இலட்சமாகவும் உள்ளது.

**2016–17** ஆம் ஆண்டில் மேற்படி கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வரவு ரூ.**1601.63** இலட்சமாகவும் செலவு ரூ.**1479.68** இலட்சமாகவும் உள்ளது.

**2016–17** ஆம் ஆண்டில் மேற்படி தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம், சென்னை வரவு ரூ.**24179.21** இலட்சமாகவும் செலவு ரூ.**20733.70** இலட்சமாகவும் உள்ளது.

**மாவட்ட விற்பனை குழுக்கள் வரவு செலவு விவரம்**

| வ.எண் | மாவட்டங்கள் | வரவு ரூ. (இலட்சத்தில்) | செலவு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | வேலூர் | 441.47 | 464.52 |
| 2 | இராமநாதபுரம் (விருதுநகர் இருப்பு) | 2070.85 | 2287.16 |
| 3 | சேலம் | 2184.40 | 1365.15 |

| | | | |
|---|---|---|---|
| 4 | கோயம்புத்தூர் | 1462.89 | 1032.96 |
| 5 | கடலூர் | 595.94 | 454.38 |
| 6 | தருமபுரி | 369.96 | 294.97 |
| 7 | விழுப்புரம் | 1774.92 | 1843.91 |
| 8 | தஞ்சாவூர் | 2074.27 | 2070.37 |
| 9 | கன்னியாகுமரி (நாகர்கோவில்) | 1257.19 | 1201.97 |
| 10 | திருவண்ணாமலை | 505.64 | 627.58 |
| 11 | புதுக்கோட்டை | 196.47 | 161.29 |
| 12 | மதுரை | 971.66 | 920.20 |
| 13 | காஞ்சிபுரம் | 364.66 | 450.40 |
| 14 | திருச்சி | 375.78 | 115.96 |
| 15 | திருநெல்வேலி | 853.55 | 1289.34 |
| 16 | திருவாரூர் | 366.09 | 261.10 |
| 17 | திண்டுக்கல் | 1922.67 | 1984.05 |
| 18 | நாகப்பட்டினம் | 209.21 | 123.42 |
| 19 | தேனி | 570.72 | 132.13 |
| 20 | நீலகிரி (இருப்பு உதகை) | 36.07 | 33.59 |
| 21 | திருப்பூர் | 1282.68 | 547.77 |
| 22 | ஈரோடு | 1481.80 | 3759.71 |
| | மொத்தம் | 21368.89 | 21421.93 |

| | | | |
|---|---|---|---|
| 23 | வேலூர் (பொ) பிரிவு | 2814.00 | 2292.79 |
| 24 | மதுரை (பொ) பிரிவு | 3180.97 | 2563.25 |
| 25 | கிண்டி (பொ) பிரிவு | 7589.15 | 2425.07 |
| | மொத்தம் | **13584.12** | **7281.11** |
| 26 | கோயம்பேடு | **1601.63** | 1479.68 |
| 27 | தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம், சென்னை | 24179.21 | 20733.70 |

## 11. வரவு செலவு திட்டம் தயாரித்து அங்கீகரிக்கப்படாமை

உள்ளாட்சி நிறுவனங்கள் அடுத்த ஆண்டுக்குரிய வரவு – செலவு திட்டம் (Budget) நடப்பு ஆண்டில் தயாரித்து, உரிய அங்கீகாரம் பெற்று அதன்படி வரவுகளை கண்காணிக்கவும் செலவுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். பொதுவாக அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களிலும், வரவு – செலவு திட்டம் தயாரிப்பதும் அதன்படி வரவு–செலவுகள் கண்காணிப்பதும் இல்லாமை தணிக்கையில் காணப்படுகிறது. மாநில தலைமை கணக்காளர் அலுவலகத்தால் வெளியிடப்பட்ட உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கான தொழில் நுட்ப வழிகாட்டுதல்களின் ஆண்டு அறிக்கையில் (G&SSA) in Pr.AG (G&SSA)/SS II/Tech Cell/TG&S/2019-2020/12, dated 10.06.2019 உரிய காலத்தில் உள்ளாட்சி நிறுவனங்களின் ஆண்டு வரவு–செலவு திட்டம் தயாரித்து அதன் அடிப்படையில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் வலியுறுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் உள்ளிட்ட துறை தலைவர்கள் உள்ளாட்சி நிறுவனங்களின் வரவு–செலவுகளை கண்காணிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

03/03/2020

(பொ.வேல்சாமி)
இயக்குநர்
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

சென்னை–35
நாள்: 03.03.2020